# ஞானச்சுடர்

## சந்நிதியான் ஆச்சிரமம்.

ஆடி 2013




வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



# குறள்வழி

**ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்.**

**பொருள் :** ஒருவனது நல்லொழுக்கம் உயர்ந்த குலமாக்கும்; ஒழுக்கம் தவறியவனைத் தாழ்ந்த குலத்தினன் ஆக்கிவிடும். (133)

**மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்**
**பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.**

**பொருள் :** நூல்களைக் கற்பான் கற்றதை மறக்க நேர்ந்தாலும் அதனை மறுபடியும் கற்றுக்கொள்ளலாம்; அவன் தனது ஒழுக்கத்தில் குறைவுபட்டால் அவனுடைய குடியின் சிறப்புக் கெடும். (134)



# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

## முத்தி நல்குமே

## குறள் வெண்செந்துறை

பெரியவன் சிறியவ னென்பது பேதைமை
யரிதினு மரிதே யதனை யறிதல் 6

பொறிவழிச் செல்லும் பொல்லா மனத்தை
யறிவா லடக்கி லானந்த மாமே
7

அஃதை யறிவோ ரதுவே யாவர்
இஃதஃ தென்போ ரிழந்தோ ராவர் 8

எல்லாஞ் சிவன்செய லென்பர் பெரியோர்
மல்லாகத் தானை மறவாது வாழுக 9

சொல்லாமற் சொன்ன சொல்லி னுறுதி
நல்லோ ரறிந்து நாடுவர் முத்தியே 10

# ஞானச்சுடர்



பொதுசன நூலகம்
06 AUG 2013

வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை



# ஞானச்சுடர்

வெளியீடு- 2 சுடர்- 187

2013 ஆடி



## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| "அம்மா" | கு. குணாளன் | 01 –03 |
| தசரத குமாரரும் பஞ்ச... | நா. நல்லதம்பி | 04 –08 |
| திருவண்டப்பகுதி | சு. அருளம்பலவனார் | 09 –11 |
| இறைவனின் அன்பிற்குத்... | சு. சிவராசா | 12 –13 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 14 –16 |
| ஸ்ரீ ராமரைவிட உயர்ந்த... | செல்வி யோ. ஜிந்துஷா | 17 –20 |
| முருகன் அருள்பெற்ற... | S. மனோரஞ்சிதம் | 21 –24 |
| இந்துப் பண்புகள் | இரா. சாந்தன் | 25 –27 |
| தமிழ் இனத்திற்கு ஏற்பட்ட... | சிவ. சண்முகவடிவேல் | 28 –29 |
| படங்கள் தரும் பதிவுகள் | – | 30 –31 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | – | 32 –34 |
| மதமும் மத ஸ்தாபன... | பெ.பொ. சிவசேகரம் | 35 –36 |
| திருமந்திரக் கதைகள் | கே.வி. குணசேகரம் | 37 –38 |
| தசாவதாரக் கொள்கையும்... | திருமதி அ. நிரூபா | 39 –40 |
| காளமேகம் பாடல்கள் | – | 41 –44 |
| சிறுவர் கதைகள் | – | 45 –47 |
| சைவத் திருக்கோயிற்... | கா. கைலாசநாதக்குருக்கள் | 48 –50 |
| அதிசயம் ஆனால் உண்மை | செ. மோகனதாஸ் சுவாமிகள் | 51 –53 |
| நித்திய அன்னப்பணி | – | 54 –55 |
| ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய... | – | 56 –57 |
| சைவ சமய வினாவிடை | ஆறுமுகநாவலர் | 58 –59 |
| ஈசா வாஸ்ய உபநிஷதம் | பூ. சோதிநாதன் | 60 –61 |
| தமிழகத் திருக்கோயில்... | வல்வையூர் அப்பாண்ணா | 62 –64 |



நூலகம்
06 AUG 2013
மாநகரசபை



அன்பளிப்பு: மலர் ஒன்று 30/= ரூபா

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்




**வெளியீட்டுரை:-**

ஆனிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை பிரம்மஸ்ரீ கு. தியாகராஜசர்மா (நீர்வைமணி) அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர் தனது ஆரம்ப உரையில், ஆனிமாத ஞானச்சுடர் மலரை வெளியிட்டு வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். ஆச்சிரமமானது தான் ஆரம்பித்த காலத்திலிருந்து பல்வேறு சேவைகள், பணிகளைச் செய்து வருகின்றது என்று சபையோருக்குக் கூறினார்.

அவர் அடுத்து தனது உரையில், அறிவுப்பசிக்காக ஞானச்சுடர் மலரை வெளியிட்டு வருவதோடு, வயிற்றுப் பசிக்காக தினமும் அன்னதானம் வழங்கி வருகின்றது. நோயாளிகளின் நன்மை கருதி வாரத்தில் இரு நாட்கள் வைத்திய சேவையை நடாத்தி வருகின்றது என்று கூறினார்.

ஞானச்சுடர் மலரானது சைவ சமய மக்களின் அறிவுப் பெட்டகமாகத் திகழ்கின்றது என்று கூறித் தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:-**

186ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை திரு க. நவரத்தினம் (இளை. ஆசிரியர்) அவர்கள் நிகழ்த்தினார்கள். அவரது மதிப்பீட்டுரையில் சில பகுதிகளைக் கீழே தருகின்றோம்.

ஏறக்குறைய பதினைந்து வருடங்களாக ஞானச்சுடர் நங்கையானவள் இருள் போக்கி, மருள் நீக்கி, தெருள் தரும் ஞானச்சுடர் தொடர்ந்து ஒளிதந்து வருகிறாள். திங்கள் திங்களாக நூல் வெளியீடு - மதிப்பீடு நடைபெறுகிறது. அடியார் உள்ளங்களை வென்று, அரவணைத்து ஆத்மீக நெறிப்படுத்த உதவும் தூண்டல் முயற்சியாக, ஞானச்சுடரின் விடயதானங்கள் அமைந்துள்ளன. அடியார் பெருக்கம், ஆச்சிரம விரிவு என்பன துலங்குகின்றன.

நல்லூரின் நாவலர் பெருமான் தொடக்கி வைத்து சமயப்பணியின் வளர்ச்சியாக ஆச்சிரம செயற்பாடுகளை நாம் இனங்காணலாம். உண்டி கொடுத்து, நோய் நீக்கி, சமுதாயத்திற்கு இன்னும் இன்னும் வேண்டுவன செய்துவரும் ஆச்சிரம பணிகள் கற்பனைக்கு எட்டாதவை. "உடலோம்பலும் - ஆன்மிக சுத்தியுமே எமது பயணத்தின் இரு கண்கள்" எனவும் இன்னும் பல பயனுள்ள கருத்துக்களையும் கூறித் தமது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

எல்லா மனிதர்களிடமும் மனிதாபிமானம் என்பது இருக்கின்றது. இந்த மனிதாபிமானத்தின் அடிப்படையிலேதான் ஒரு மனிதன் சக மனிதனுக்கு விசுவாசமாக உதவுவதற்கு முன் வருகின்றான்.

இவ்வாறு உதவுவது என்பது பொருளாதார ரீதியாக உதவுவது என்ற கருத்தில் மட்டும் கூறப்படவில்லை. பணமோ பொருளோ கொடுத்து உதவுவதும் அதற்குள் உள்ளடக்கப்படலாம். அதேபோல வீதியில் கண்தெரியாது கஷ்டப்படுபவனுக்கு வழிகாட்டி உதவுவது. வாழ்க்கையில் கஷ்டப்பட்டவனுக்கு அல்லது துன்பப்பட்டவனுக்கு ஆறுதல் வார்த்தை கூறுவது. ஏழைகளுக்கு உதவுவது. இடம்பெயர்ந்து கஷ்டப்படுபவனுக்கு இருப்பதற்கு வீடு தேடிக்கொடுப்பதில் உதவுவது. தன்னுடன் கடமை புரிபவன் அல்லது தனக்குக்கீழ் கடமை புரிபவனது உயர்வுக்கு வழிகாட்டி உதவுவது இவை எல்லாமே உதவிகள்தான்.

இவ்வாறு மனிதனுக்கு மனிதன் உதவும் உதவிகள் எதுவாக இருந்தாலும் அவற்றைச் செய்பவர்களுடைய நோக்கம் ஒன்றாகத்தான் இருக்க முடியும். அதுதான் தர்மம் தேடுவது. ஆம்! இந்தத் தர்மம் ஒன்றுதான் எப்பொழுதும் எங்கேயும் மனிதனுக்கு உதவக்கூடியது என்பதை அவர்கள் நன்கு தெரிந்து வைத்திருப்பதனால்தான் இவ்வாறான தர்மத்தை அவர்கள் உண்மையாகவும். தூய்மையானதாகவும் செய்ய முற்படுகின்றனர்.

இவ்வாறு மனிதன் தர்மம் செய்வதில் நாட்டமுள்ளவனாகக் காணப்படுகின்ற பொழுதிலும் நடைமுறையில் அதனை மேற்கொள்வதில் சில தடைகள் உள்ளது போலத் தோன்றுகிறது.

காரணம் உதவிகள் செய்வதனால் சில சிரமங்களையோ அல்லது தேவையில்லாத பிரச்சினைகளையோ தாம் எதிர்நோக்க வேண்டி வரலாம் என்பது ஒரு வகையான காரணங்களாகும். அதே நேரம் தர்மமான காரியங்களை நிறுவன ரீதியாகச் செயற்படுத்துகின்ற சமய நிறுவனங்கள் எம்மத்தியில் இல்லாதிருப்பதும் இன்னொரு வகையான காரணமென்றும் கருத வேண்டியுள்ளது.

தூய்மையான தொண்டுள்ளம் கொண்ட சமய அமைப்புக்கள் அரிதாகக் காணப்படுவதையே நாம் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறோம். மாறாக தன்னலமற்ற மக்கள் தொண்டை சமய நிறுவனங்கள் மேற்கொள்ள முற்படும்பொழுது அவற்றிற்கு சமுதாயத்திலிருந்து நல்ல உள்ளம் படைத்தவர்களது பங்கும் பணியும் தாராளமாகக் கிடைக்குமென்பதையே எமது அனுபவம் எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

# முருகனின் கடமை அடியாரைத் தாங்குதல் எமது கடமை அவனடி தொழுதல்

தொண்டைமா னாற்றினிலே – ஒரு
தோகை மயில் நின்று ஆடக் கண்டேன் – அதில்
தண்டை சிலம் பொலிக்க – முருகனும்
தானேறி யாடவுங் கண்டேன் கண்டேன் நானே

பண்டைய சந்நிதியில் அடியார்
பலருமே உடனாக ஆடக் கண்டேன் – கண்டு
தண்டமி ழிசை பாடியே அடியேனும்
தன்னை மறந்துமே யாடினனே பாடினேன்

என்னென்று நான் மறப்பேன் – அவனை
ஏழையேன் நொந்தாலும் ஓடி வாறான் ஒரு
கன்னலாய் தேனாய்ப் பாலாய் – என்னைக்
காதுக் கினிதாகப் பாடச் சொன்னான்

சண்முகப் பிரியாவிலும் இனிய
சங்கரா பரணம் எடுத்தேன் – ஐயன்
பண்ணுடன் புகழ்பா டென்றான் – இனிய
பாகேஸ்வரி கானடா பைரவி பிடித்தேன்

கந்தரனு பூதியுடன் அலங்காரம்
கந்தசஷ்டி படித்தேன் – ஐயனென்
சிந்தனைக்குள் புகுந்தான் – பணிந்தேன்
சிவகுருநாதா என்றே தொழுதேன் நான்

ஏறிய மயில் மீதினிலே பக்கம் – பக்கம்
தேவிமார் இருவர் கண்டேன் – கரத்தில்
மாறிலா வேலைக் கண்டே மகிழ்ந்தவன்
மலரடி சென்னி வைத்தே பணிந்தேனே

உள்ளத்தைக் கோயிலாக்கி – நின்றவனை
ஓடிச்சிக் கெனப் பிடித்தால் – சந்நிதியான்
கொள்ளையாய் அருள் பொழிவான் – விரதம்
கோணாம லென்நாளும் பூண்டுநோற் றுய்யலாம்

பாலர் விருத்தர்வரை மற்றும் நல்ல
பாவையர் அறிஞர் வரை
காலத்தின் கோலங்கண்டு ஒன்றாயெமை
கருத்தினால் ஒன்றாக்கி காணவைத்தான்

கந்தனின் சேவடியை மறவாமல்
காலந்தோறும் போற்றினால் – அப்பனுமே
எம்தனை மறவாமலே எம்மவர்க்கு
ஏற்பத் துணை தருவான் நிசமே.

-முதுபெரும்புலவர்
வை.க. சிற்றம்பலம்-

# ஆடிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

PUBLIC LIBRARY
JAFFNA

**திரு ந. ஜவகர்லால்நேரு**
(லண்டன்)

**மாதர்க்கரசி பொன்னுத்துரை**
(கொழும்பு)

**T.கனகசபேசன்**
(கனடா)

**செல்வி தம்பு சறோஜா**
(சங்கீத முதன்மை இளை. ஆசிரியர், நெல்லியடி)

**திரு இ. பேரின்பநாயகன்**
(நாவலர் பாலர் பாடசாலை ஸ்தாபகர், சுதுமலை)

**திரு Dr. V. ஸ்ரீஸ்காந்தன்**
(ரஞ்சிதா மெடிக்கல் கிளினிக், சுதுமலை)

**திரு Dr பொன். சின்னத்தம்பி**
(திருவேரகம், பொலிகண்டி)

**திரு சி. பஞ்சலிங்கம்**
(லிகிதர், உடுப்பிட்டி, ப.நோ.கூ. சங்கம்)

**திரு வே. பாராளன்**
(தொழில் நுட்ப உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம்)

**திரு S. தர்மரெத்தினம்**
(அதிபர், சிறுப்பிட்டி)

**திரு நா. தங்கராசா**
(இளை. அதிபர், ஈவினை)

**திரு ச. நவரத்தினராசவேல்**
(அதிபர், வேல்பதி, புத்தூர்)

**திரு பொன்னையா சிவக்கொழுந்து**
(அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி)

**திரு நா. இராசலிங்கம்**
(இளைப்பாறிய அத்தியட்சகர்)

**உரிமையாளர்**
(தனு வீடியோ, உரும்பராய்)

**திரு வ.சி. குணசீலன்**
(தாவரவியல் ஆசிரியர், கரவெட்டி)

திரு செ. சுந்தரலிங்கம் J.P
(நிர்வாகி சதா பொன்ஸ் கல்வி நிலையம், மாலி சந்தி)
திரு ந. சேகர்
(கிராம சேவையாளர், வீரபத்திரர்கோயிலடி, உடுப்பிட்டி)
திரு கு. ஸ்ரீமுருகமூர்த்தி
(கிளை முகாமையாளர், உடுப்பிட்டி, ப.நோ.கூ. சங்கம்)
திரு சு.பொ. நடராசா
(அண்ணா தொழிலகம், இணுவில்)
உரிமையாளர்
(நாதன் அன் பிறதேர்ஸ், இணுவில்)
திரு சி. கருணா
(கல்வியங்காடு, யாழ்ப்பாணம்)
திரு மூ. பஞ்சலிங்கம்
(நியூ கிளினிக், இணுவில்)
செல்வன் சி. கௌதமன் C/O சி. சிவபாலன்
(யாழ்ப்பாணம்)
உரிமையாளர்
(ரேவதி நகைமாடம், யாழ்ப்பாணம்)
திரு செ. வாமதேவன்
(இணுவில் மேற்கு, இணுவில்)
திரு V. சேனாதிராசா
(கரவெட்டி கிழக்கு, கரவெட்டி)
பிறேமதாஸ் சசிகலா
(K.K.S வீதி, யாழ்ப்பாணம்)
திரு ம. இரத்தினமூர்த்தி
(ஜெயகனன் பல்பொருள் வாணிபம், சுண்ணாகம்)
திரு ந. இராசரத்தினம் J.P
(நாகம்ஸ் நிறுவனம், சுண்ணாகம்)
செல்வி தர்மினி ரவிச்சந்திரன்
(கட்டுடை, மானிப்பாய்)
திரு க. சிவஞானசுந்தரம்
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
திருமதி பொ. இரத்தினசோதி
(கதிரவேற்பிள்ளை வீதி, பருத்தித்துறை)
திரு ச. கிருஷ்ணமூர்த்தி
(கணாதிபன் அச்சகம், கரணவாய்)
திரு செ. அட்செயலிங்கம்
(ஆசிரியர், அல்வாய்)

செயலாளர்
(கருணையம்பதி சனசமூக நிலையம், கரணவாய்)
திரு மூ.சிவலிங்கம்
(காரைக்கால் வீதி, இணுவில்)
திரு க. விகர்ணன்
(குமரகோட்டம், கோண்டாவில்)
திரு க. சிவகடாட்சம்
(தாவடி, கொக்குவில்)
செயலாளர்
(கணபதி படிப்பகம், நெடியகாடு)
திரு மு. விசயரத்தினம்
(காட்டுப்புலம், தொண்டைமானாறு)
திரு R. பொன்னுராசா
(வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை)
திரு S. தர்மலிங்கம்
(கமலபதி மாதர்சங்க வீதி, சித்தங்கேணி)
திரு சி. குகநாதன்
(கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்)
திரு வி. சிவபாலசிங்கம்
(கரன் பான்சி, சுன்னாகம்)
திரு க. ஸ்ரீஸ்கந்தராசா
(கிராமசேவகர், சிறுப்பிட்டி கிழக்கு)
திரு M. பாலசுப்பிரமணியம்
(ஸ்ரீ முருகன் கபே, ஈவினை)
திரு க. கிருபானந்தம்
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
திரு மு. இராஜேந்திரன்
(முருகையா கோவிலடி, புலோலி)
திரு பொன். சற்குணநாதன்
(வேம்பன் வீதி, உரும்பராய்)
திரு சொ. செல்லத்துரை
(பத்திரகாளி ஒழுங்கை, பருத்தித்துறை)
திரு நா. தெய்வேந்திரம்
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)
திரு வி. தவத்துரைராசா
(மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாய்)
சு. அனுஷியாதேவி
(முருகவாசா, சித்தங்கேணி)
திரு சி. கணேசமூர்த்தி
(அல்வாய்)

**திரு அ. அருள்நாதன்**
(துவாரகா, இணுவில்)
**திரு தயானந்தன் சுஜந்தன்**
(அச்சக வீதி, கொக்குவில்)
**திருமதி ஜெயராணி கமலேஸ்வரன்**
(ஈஸ்வரி வாசம், இணுவில்)
**திரு செல்லப்பா சோமசுந்தரம்**
(முன்னால் வங்கி முகாமையாளர் பகவதி கோயிலடி, உடுப்பிட்டி)
**திரு செ. அருளானந்தம்**
(கிராமசேவகர், பருத்தித்துறை)
**உரிமையாளர்**
(சுந்தர்சன்ஸ், மானிப்பாய்)
**திரு ச. சூரியப்பெருமாள்**
(ராகுலசூரியன், பருத்தித்துறை)
**திரு C.K. சிதம்பரநாதன்**
(வட்டுவத்தை, அல்வாய்)
**திரு க. ஆனந்தராசா**
(லிங்கவாசா, நெல்லியடி)
**திரு க. தங்கராசா**
(அல்வாய் மேற்கு)
**திரு மா. அருட்செல்வம்**
(எழுதுவினைஞர், புலோலி வடமேற்கு)
**திரு R. தவகோபால்**
(ஹரிராம், பலாலி வீதி, உரும்பராய்)
**திரு ச. சிவரூபன்**
(சிறுப்பிட்டி)
**திரு செல்லையா சர்வேஸ்வரன்**
(செல்வறங்கம், இணுவில்)
**திரு ஆ. மகேந்திரலிங்கம்**
(வேம்போலை, இணுவில்)
**திரு த. கந்தசாமி**
(இருபாலை வீதி, கோண்டாவில்)
**செல்வி இ. வல்லிபுரம்**
(நவக்கிரி)
**திரு சு. சர்வேஸ்வரன்**
(காளி கோவிலடி, மல்லாகம்)
**திரு சுப்பிரமணியம் அருளானந்தசிவம்**
(அல்லாரை வீதி, மீசாலை கிழக்கு)
**திரு ச. நடராசா**
(இளை. தபாலதிபர், மீசாலை)

# "அம்மா"

திரு கு. குணாளன் அவர்கள்



"அம்மா" என்று நாம் சொல்லும்போது எமது மனமானது அடையும் புளகாங்கிதம் சொல்லி விபரிக்க முடியாதது. இறைவனால் எமக்களிக்கப்பட்ட விலைமதிப்பற்ற அன்பளிப்பு அம்மா. அம்மா இறைவனைவிட மேலானவர் என ஓர் அறிஞர் கூறி உள்ளார். உண்மைதான். அம்மா எம்முடன் நேரில் நின்று பேசும் ஓர் உன்னத ஆத்மா. இப்படியான அம்மாவை எமக்களித்த இறைவனுக்கு நாம் ஒவ்வொருவரும் நன்றி உடையவர்களாக இருக்க வேண்டும்.

எம்மைப் பத்துமாதம் தனது கருவறையில் சுமந்த அம்மாவை நிதமும் அவள் திருப்பாதம் தொட்டுப் பணிந்து வணங்கினால் எமது வாழ்க்கை பிரகாசமானதாக திகழும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. அம்மா என்றால் அன்பு. ஆம், அம்மாவின் அன்பு வற்றாத ஜீவநதி போன்றது. அம்மாவுடன் அன்பு பாராட்டாதவன், இறைவனிடம் அன்பு வைப்பது விழலுக்கு இறைத்த நீர் போல ஆகும்.

அம்மாவின் அன்பு என்பது எமக்குக் கிடைத்த விலைமதிப்பற்ற ஒரு பொக்கிஷம். இந்த அன்பின் பிடியில் வாழ்பவனுக்கு எல்லாமே வெற்றிதான். எவன் ஒருவன் அம்மாவிற்கு முதலிடம் அளிக்கிறானோ அவன் தன் வாழ்விலும் முதன்மை நிலையை அடைவான் என்பது கற்றறிந்த பெரியோரின் கருத்து.

அம்மாவிடம் அன்பு மட்டுமா? பாசம், கருணை என்பனவும் அந்த வற்றாத ஜீவநதியில் இருந்து தானே உருவாகின்றன. அம்மா என்றால் அன்பு. அம்மா என்றால் கருணை, அம்மா என்றால் பாசம், அம்மா என்றால் அமைதியின் வடிவம். இப்படியாக அம்மாவின் பெருமைகளைச் சொல்லிக்கொண்டே போகலாம். "அம்மா, அப்பாவை வணங்கிப்பாரு, எல்லோருக்கும் எல்லாம் தானா வரும்" என ஓர் அறிஞர் கூறியுள்ளார். எம் பெற்றோரை நாம் வணங்கினால் இறைவனை நாம் வணங்கவேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் இறைவனை அம்மா, அப்பா வடிவில் காண்கிறோம். எனவே பெற்றோரை வணங்கினால் இறைவனை வணங்கியதற்குச் சமன்.

அம்மா என்று உச்சரித்துப் பாருங்கள். எந்த ஒரு மந்திரத்திற்கும் இல்லாத அதீத சக்தி "அம்மா" என்ற மந்திரத்திற்கு உண்டு. அம்மா, அம்மா என வாய்விட்டுச் சொல்லிப் பாருங்கள். எமது மனதில் உள்ள சகல தீய சக்திகளும் இருக்கும் இடம் தெரியாது மறைந்து விடும்.

கன்னித் தமிழும் கன்னிக் குரலும் சொல்லும்
வார்த்தை அம்மா, அம்மா.

ஆம் வேறு எத்தனையோ வார்த்தைகள் இருக்கின்ற வேளையிலும் முதலில் நாம் சொல்லும் வார்த்தை அம்மா. எனவே உலகில் உள்ள எல்லாப் பொருட்களிலும் மேலானது அம்மாவே.

எவன் ஒருவன் தனது வாழ்வில் அம்மாவை முதன்மைப் படுத்துகிறானோ, அவன் வாழ்க்கையில் மேன்மைபெற்று சூரியன்போல பிரகாசிப்பான். இதில் எந்தவித ஐயப்பாடும் கிடையாது. நாம் நோயுற்ற வேளையில் தனது உடல் சோர்வு பாராது, தன்னில் கவனம் செலுத்தாது, பகல் இரவாக எமக்கு சேவை செய்யும் ஓர் அன்பு ஜீவன் என்றால் அது அம்மாவே. தன் உதிரத்தைக் கருவாக்கி பத்துமாதம் எம்மைத் தனது உதிரத்தில் சுமந்து பெற்றெடுத்த பின்னரும் தனது உதிரத்தையே பாலாகத் தரும் அந்த உயரிய பண்பு யாருக்கு வரும். அந்தப் பண்பு அம்மா ஒருவர்க்கே உள்ளது.

தரணியில் பிறக்கும் மனிதன் அம்மா என்று குரல் எழுப்பிக் கொண்டே பிறக்கிறான். ஏன் ஐந்து அறிவுள்ள "ஆ"வும் பிறக்கும்போது அம்மா என்று கத்திக்கொண்டுதான் பிறக்கிறது. அம்மா என்பது தமிழ் வார்த்தை. அதுவே உலகில் முதல் வார்த்தை என ஓர் கவிஞர் கூறி உள்ளார். ஆபத்து வேளையிலும் சரி, அல்லது கால்கள் இடறி கீழே வீழ்ந்தாலும்கூட அம்மா என்ற ஓசைதானே வாயில் இருந்து வெளிப்படுகிறது.

"தாயின் மடியில் தலை வைத்திருந்தால்
துயரம் தெரிவதில்லை"

ஆம் அம்மாவின் மடியில் தலை வைத்து உறங்கிப் பாருங்கள். எந்தவிதமான கஷ்டமாக இருந்தாலும் அவை யாவும் சூரியனைக் கண்ட பனிபோல் இருக்கும் இடம்தெரியாது மறைந்து விடுகின்றன.

எல்லா அன்பிலும் மேலானது, அம்மாவின் அன்பு ஒன்றுதான். அம்மாவின் அன்பு வற்றிப் போகுமா? இல்லை எம்மைத்தான் மறப்பாளா? யார் எம்மை மறந்தாலும் எம்மை மறக்காதவள் அம்மாவே.

இப்படியான பெருமையை உடைய அம்மாவிற்கு சமுதாயத்தில் நாம் கொடுக்கும் மதிப்புத்தான் என்ன? அம்மாவை அம்மாவாக மதிப்பவர் எம்மத்தியில் எத்தனைபேர். கருவில் எம்மை சுமந்தவள் இன்று முதியோர் இல்லத்தில் கண்ணீர் வடிக்கும் இழிநிலை. வாழ்க்கையில் புதிய புதிய உறவுகள் தோன்றியதும் எம்மை உருவாக்கிய அம்மா அந்நியமாகி விடுகிறாள். அம்மாவை தூர ஒதுக்கி வைப்பதை விடுத்து "போதும் அம்மா நீ என்னைத் தாங்கியது. இனி உயிர் உள்ளவரை நான் உன்னைத் தாங்குகிறேன்" என்று நாம் ஒவ்வொருவரும் கூறுவோமானால் அந்தத் தாய் எவ்வளவு சந்தோஷமும் மனநிறைவும் அடைவாள்.

அம்மாவிற்கு பின்தான் தாரம். அம்மாவைக் கண்டபின் தான் நாம் ஒரு தாரத்தின் வாழ்க்கைத் துணையாகின்றோம். அம்மா இல்லையேல் நாம் ஏது? தாரம் தான் ஏது? தாரம் வந்ததும் அம்மாவை புறக்கணிப்பவர் உண்மையில் மனிதரே இல்லை. அம்மாவைப் போற்றுவதும், சீராட்டுவதும் மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரினதும் கடமை.

அம்மாவுடன் சேர்ந்தால்த்தான் தந்தைக்குப் பெருமை. அதனால்தான் அம்மாவைச் சிறப்பிக்கும் போதெல்லாம் நாம் ஒவ்வொருவரும் தந்தையையும் நினைவு கூருகின்றோம்.

"தாயிற் சிறந்த கோயிலும் இல்லை
தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை"

முதல் தாயும், அடுத்து தந்தையுமே எமது கண்கண்ட முன்னறி தெய்வங்கள். எல்லா உறவுகளிலும் மேலானவள் அம்மா. தாய்மையே தரணியில் முதன்மையானது. எமது தாய், தந்தை இருவரையும் மனம் கோணாது, முகம் சுழிக்காது இறுதிக்காலம் வரை போற்றி பார்த்து வந்தால் எம் வாழ்வு சிறக்கும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

மேலும் பிற மதத்தவர்கள் தமது பெற்றோரை, பெரியோரை தமது மதகுருவை போற்றி, பாதங்களைத் தொட்டு விழ்ந்து வணங்கிச் செல்வதைப் பார்க்கும்போது சந்தோஷமாக இருக்கிறது. பிற மதத்தில் உள்ளவர் எமது வீட்டிற்கு வரும் வேளையிலும், எமது பெற்றோரை வீழ்ந்து வணங்கிச் செல்வதைக் கண்டு சந்தோஷம் அடைகிறோம். ஆனால் இந்து மதத்தவராகிய நாம் பெற்றோரை, பெரியோரை, குருவை போற்றி வீழ்ந்து வணங்கி ஆசிபெறுவது மருகி வருவதைக் காணும்போது மனம் மிகவும் வேதனை அடைகிறது.

நாம் எமது அம்மாவின் திருப்பாதங்களைத் தொட்டு வணங்கி ஒரு காரியத்தை செய்வோமாயின் அக்காரியம் தோல்வியை ஏற்படுத்தாது. வெற்றியையே தரும். இன்று முதலாவது நாம் ஒவ்வொருவரும் அம்மா, தந்தை, குரு இவர்களது திருப்பாதங்களை தொட்டு வணங்கி எமது கருமங்களைத் தொடங்கி அதில் வெற்றி பெறுவோமாக. உதாரணமாக நாம் பரீட்சைக்குச் செல்லும் போது அம்மாவின் திருப்பாதங்களைத் தொட்டு வணங்கிச் சென்று பார்க்கவும். அதில் எமக்கு வெற்றி நிச்சயம் கிடைக்கும். எனது கருத்தும் இதுவே.

"எமக்கு உயிர் தந்த அம்மாதான் எவ்வுலகிலும்
எப்பொருளிலும் மேலானவள்"

சந்நிதிக் கந்தன் கற்றோர் கவிமாலை - ௪௨

## "பேருள் வாரிநம் புரிவான்"

சேவடியி லேபொழியு பூவையதி காலைமுதல்
தேடியுன வாசலனி - குடியான
பூவெடடி யாரினுள தேவையதெ லாம்நிறைய
பேரருளை வாரிநிதம் - புரிவேலா
மாவினுரு சூரையழி மாரன்கதிர் காம வழி
மாமுனிய தாயுலவு - சிகண்டிமுனே
மாகுருவி யாழனளி சாபமொடு காடுதொறும்
மாமுகம தோடலைஐ - ராவசொர்நாள்
ஏவயில தாகவரு வேகமற வேவெளிலை
வேலனைய தாகுநுனி யதைவீச
ஏலவளி சாபமது தீர்முனி பாதமுற
ஏகுபதி யாகவுரை - யிதைநாடி
பூவரசு நீழலதில் மாதவம தேபுரிய
பூவடிய தேயடைய - அருள்கோனே!
காவடிக ளாடிவடி வேலபய மாகுமென
காலடிய தேதருசந் - நிதியானே.

- இராசையா குகதாசன் -

# தசரத குமாரரும் பாண்டவர் ஐவரும்

திரு நா. நல்லதம்பி அவர்கள்

இராமாயணத்தில் இராமனது சொற்படி நடந்து கொள்ளும் தம்பிமார்களைக் காணலாம். பாரதக்கதையில் தருமனுடைய சொல்லை மதித்து நடக்கும் தம்பிமார்களைப் பார்க்கிறோம்.

தசரதராஜகுமாரர் எல்லோரையும் நண்பர்களாக்கிக் கொள்ளும் பண்புடையவர்களாக இருக்கிறார்கள். அதே நேரம் பாண்டவர்கள் தமது இராஜ குடும்பத்திலே ஏற்பட்ட பகைமையால் துன்பப்படுகிறார்கள்.

தசரத குமாரருள் இராமன் அவதாரபுருஷன்; பாண்டவருக்கு அவதார புருஷனான ஸ்ரீ கிருஷ்ணன் உதவியாக இருந்தான் என்பதும் கவனிக்கத்தக்கது.

அவதார புருஷனான இராமன், தனது தம்பிமாருடன் சத்திரியனாக வாழ்ந்து தனது அவதார நோக்கத்தை நிறைவுசெய்து புகழ் பெறுகிறான். பாண்டவர் ஐவரும் தருமன் காட்டிய வழியில் நடந்து ஸ்ரீ கிருஷ்ணனுடைய அவதார நோக்கம் நிறைவடைய உதவி செய்து புகழ் பெறுகிறார்கள்.



இவ்வாறு புகழ்பெற்ற இரு பகுதியாருடைய செயற்பாடுகளில் சிலவற்றை எடுத்துக் காட்டுவதே எமது நோக்கமாகும்.

தான் இயற்றவிருக்கும் தவவேள்விக்கு இடையூறு வராது காப்பதற்கு, "நின் சிறுவர் நால்வரிலும் கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதி" என விசுவாமித்திரர் கேட்க, "அவன் சிறியன். நான் வருகிறேன்" என்று தசரதன் சொல்கிறான். விசுவாமித்திரர் கோபத்தில் துள்ளுகிறார். அந்த நேரம் வசிட்டர், சாந்தப்படுத்தி இராமனது வருங்காலத்தை மனதில் கொண்டு இராமனை அனுப்பி வைக்கிறார் முனிவரோடு. இராமனை முனிவர் கேட்டால், இலக்குமணனும் சேர்ந்து போகிறானே! இராமனுடன் நிழலாகத் தொடரும்படி இலக்குமணனுக்குத் தாயார் சுமித்திரை இட்ட கட்டளை அப்படி!

வேள்விக்குப் போகும் வழியில் பெண் அரக்கி தாடகை தடையாக வந்தாள். இவளை எப்படி இராமன் கொல்வான்? முனிவர் சொல்கிறார் "அரக்கி அரக்கிதான்; பெண் என்று இரக்கப்படாதே". இராமன் அவளைக் கொன்று விடுகிறான்.

வேள்வி முடிந்தபின் முனிவர் இவர்களை அழைத்துக்கொண்டு மிதிலை நோக்கிக் காட்டுவழியில் போகிறார். வழியில் ஒரு கல்லில் இராமனது பாதம் பட்டதும் அது பெண்ணாக

PUBLIC LIBRARY
JAFFNA



எழுந்து நின்றது! அப்பெண், கணவனான கௌதம முனிவரின் சாபம் பெற்ற அகலிகை. இந்த அகலிகையின் அழகில் மயங்கிய இந்திரன் ஒருநாள், முனிவர் ஆச்சிரமத்தில் இல்லாத சமயம் பார்த்துச் சென்று அவளைக் கெடுத்துவிட்டான். முனிவர் திரும்பி வரும்போது எதிரே தென்பட்ட இந்திரனுக்குச் சாபமிடுகிறார். அகலிகையைக் கல்லாய்ப் போகும்படி சாபம் போட்ட கௌதமர் இமயமலைக்குப் போய்விட்டார். இராமனது பாதம் பட்டு உனது சாபம் நீங்கும் என்று அகலிகைக்கு சொன்ன முனிவர் இமயத்திலிருந்து திரும்பி வருவதும் இராமன் பாதம் படுவதும் ஏக காலத்தில் நிகழ்ந்தது! கௌதமரிடம் அகலிகை ஒப்படைக்கப்படுகிறாள்.

இந்திரன் இவ்வாறு கௌதம முனிவரிடம் சாபம் பெற்ற கதையானது உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவர் "ஐந்தவித்தான் ஆற்றல்" பற்றிக் கூறுவதற்கு உதாரணமாய் அமைந்திருப்பது சிந்திக்கத்தக்கது!

இனிமேல் நாம் மிதிலைக்குப் போவோம்.

"மையறு மலரின் நீங்கி யான்செய் மாதவத்தின் வந்து
செய்யவள் இருந்தாள் என்று...."

மிதிலையில் இலக்குமி (சீதை) இருக்கிறாள்; அதனால் ஐயன் இராமனைச் (விஷ்ணு அவதாரம்) சீக்கிரம் வரும்படி அந்நகரத்து மாடக்கொடிகள் அசைந்தன என்கிறார் கம்பர்.

ஆனால், இராமன் தன்னை அவதார நாயகனாக எண்ணியதே இல்லை. ஒரு உத்தம குணத்து மகன் தனது சகோதரர்களோடு அன்பாகப் பண்பாக எப்படி நடக்க வேண்டுமோ அப்படி வாழ்ந்து காட்டுகிறான்.

மிதிலையில் ஜனகமன்னன் அவர்களை வரவேற்று உபசரித்து தங்க வைக்கிறான். மறுநாள் சீதையின் சுயம்வர மண்டபத்துக்குப் போகின்றனர். சீதையோடு மண்ணிலிருந்து தோன்றிய வில்லை யார் முறிப்பாரோ அவருக்குச் சீதை மாலை சூட்டுவாள் என்பது நிபந்தனை. அங்கு வந்திருந்த அரசர் ஒருவரும் வில்லை அசைக்கவும் இல்லை. அந்த நிலையில் விசுவாமித்திரர் இராமனைப் பார்க்கிறார்; இராமன் எழுந்துபோய், "வில்லை எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்" என்கிறார் கம்பர்.

இராமர் - சீதை கல்யாணம் முடிந்து அயோத்திக்குப் போய் விட்டனர். காலம் நகர்ந்தது. இராமனுக்கு முடிசூட்டி வைத்து தான் துறவறம் பூணலாம் எனத் தசரதன் எண்ணி, அதற்கான ஆயத்தங்களைச் செய்தான்.

இராமன் சிறுவயதில் செய்த குறும்பினால், பழிவாங்க எண்ணிய மந்தரையின் சூழ்ச்சியால், மனம்மாறிய கைகேயி, இராமன் 14 வருடம் வனம் ஆளவும், பரதன் நாடாளவும் தசரதனிடம் வரங்கேட்டுப் பெற்றாள்.

அரசுக்கு உரித்தான அண்ணன் இருக்கத் தம்பிக்கு அரசுரிமையா? இலக்குமணன் கொதித்தெழுந்தான். இதனைக் கண்ட இராமன் சொல்லுகிறான்:

"நதியின் பிழையன்று நறும்புனல்இன்மை; அற்றே
பதியின் பிழையன்று; பயந்து நமைப் புரந்தாள்
மதியின் பிழையன்று; மகன் பிழையன்று மைந்த!
விதியின் பிழை; நீ எதற்கு என்னை வெகுண்டது" என்றான்.

யாருடைய பிழையுமில்லை, இது விதியின் பிழை என்கிறான் இராமன். அன்றியும் பெற்றோருடைய சொற்படி நடப்பது நமது கடமை என்று கூறி இலக்குவனது கண்ணீரைத் துடைக்கிறான் இராமன்; இளையவன் அடங்கிப்போனான்.

இஃதிவ்வாறாக, கேகய நாட்டிலிருந்து திரும்பிவந்த பரதன், செய்தியறிந்து இராமனைத் தேடிப் புறப்பட்டுப் போகிறான். கங்கைக் கரையில் இராமனுக்கு உதவிசெய்த படகோட்டியான குகன், "ஐயனே! உம்மைப்போன்ற மகான் உலகில் வேறுயார் இருக்கிறார்கள் - "ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ?" எனப் பரதனைப் புகழ்கிறான். (கேழ்- ஒப்பு)

இராமாயண காவியத்தில், பரதனின் இந்த நிலைப்பாடு மிகவும் உயர்ந்ததாக அறிஞர்களால் போற்றப்படுவதனை நாம் மனதில் கொள்வோமாக.

மேலும், வனத்திற்குப் பரதன் வருவதில் சந்தேகப்பட்டு இலக்குமணன் சொல்வதைக் கேட்ட இராமன், "பரதன் இங்கு ஏன் வருகிறான் என்பதை நான் அறிவேன். அவன் எள்ளளவும் தருமம் தவறாதவன்; ஒருவேளை என்னை அழைத்துப் போகவும் வந்திருக்கலாம்; சிலவேளை இந்த இலக்குமணனுக்கு இராச்சியம் வேண்டுமாம்; அவனுக்குக் கொடு என்று சொன்னால் உனக்குத் தந்து விடுவான்" என்று இராமன் சொன்னதும் இலக்குமணன் வெட்கப்படுகிறான்.

இனி, இலக்குமணன் இந்த 14 வருஷங்களும் கண் இமைக்காமல் வனத்தில் அண்ணனையும் சீதையையும் காத்ததாகப் பெருமைப்படுகிறான். இராமன் ஊர் திரும்பியதும் நடைபெற்ற பட்டாபிஷேகத்தின்போது, தனக்கு இதுவரை வராத கண்ணுறக்கம், வந்துவிட்டதை எண்ணித் தனக்குச் சிரிப்பு வந்ததாக இலக்குமணன் கூறியுள்ளமையிலிருந்து அறிந்து கொள்ளலாம். இது இலக்குவனது கடமை உணர்வைக் காட்டுகிறது.

முன்பு சீதையைத் தேடுவதிலும் இராவணனோடு யுத்தம் புரிவதிலும் இராமனுக்கு வலக்கரமாக நின்று உதவியவன் இலக்குவன் என்பதையும் நாம் அறிந்துகொள்வோமாக.

இதுபோலவே பரதன் 14 வருஷம் பாதுகைகளை வைத்து நந்திக் கிராமத்தில் அரசாட்சி செய்தபோது சத்துருக்கினன் இராமனுக்காகவும், பரதனுக்காகவும் தனது கடமையை உணர்ந்து செவ்வனே செய்து சிறப்புப் பெறுகிறான்.

இவ்வாறு இராமன் தம்பிமாரை நல்வழிப்படுத்தித் தாய் தந்தையர் சொற்காத்துத் தானும் புகழ் பெறுவதைக் காணலாம்.

இனிமேல் பாரதக் கதையில் பஞ்ச பாண்டவரைப் பார்ப்போம்: தருமன் முதலான பஞ்ச பாண்டவர், இயமன், இந்திரன் முதலிய தேவரின் அம்சங் கொண்டவர்கள். ஆயினும் தலைமகனான தருமன், தம்பிமாரின் குணவிஷேசங்களைக் கருத்திற்கொண்டு அவர்களை வழிநடத்துகிறான்.

இவர்கள், பெரிய தந்தையாரின் பிள்ளைகளான துரியோதனன் முதலிய நூற்றுவர் களால் பெரிதும் பாதிப்படைகிறார்கள். பெரிய பகையாகவே வளர்ந்து வரும்போது, இவர்களின் துன்பத்தை நீக்குவதுபோல ஸ்ரீ கிருஸ்ண அவதாரம் இருப்பதைக் காணலாம். கிருஸ்ணன் பாண்டவரோடு தோழமை கொண்டு பழகியதோடு இவர்களின் துணையோடு தீயோரை அழிக்கும் தனது அவதார நோக்கத்தையும் நிறைவேற்றுகிறான்.

ஆனால், தருமன் இன்னார் இனியார் என்றில்லாமல் பகை பாராட்டாமல் வாழுகின்ற குணப் பண்பு கொண்டவனாக விளங்குகிறான்.

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு (குறள் 987)

என்னும் வள்ளுவர் வழியில் நடந்துகொள்வதைக் கதை முழுவதிலும் காணமுடிகிறது. (சால்பு- சான்றாண்மை)

பாண்டவர்களுக்கு நல்லோர் நட்பும் ஸ்ரீ கிருஷ்ணனின் ஆசியும் இருப்பதால் துரியோதனனுடைய கொடுமைகளிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ள முடிகிறது.. இவர்களை அழிப்பதற்கு நயவஞ்சகமாகத் துரியோதனன் அரக்கு மாளிகையொன்றைக் கட்டுவித்தான். அப்பணியை மேற்கொண்ட சிற்பிகளோ, பாண்டவர்பால் கொண்ட மதிப்புக் காரணமாக, அவர்கள் தப்பிச் செல்வதற்காக ஒரு சுரங்கப் பாதை அமைத்துவிட்டு, அந்த இரகசியத்தை வீமனிடம் சொல்லி வைக்கிறார்கள். வீமன் தக்க தருணத்தில், அரக்கு மாளிகைக்குத் தானே தீ வைத்துவிட்டுத் தாயோடும் சகோதரங்களோடும் தப்பிவிட்டான். பாண்டவர் எரிந்து அழிந்துபோனார்கள் எனத் துரியனும் மக்களும் நம்புகிறார்கள்.

அரக்கு மாளிகையிலிருந்து தப்பி, இரவில் காட்டைக் கடந்துபோய் ஒரு பிராமணன் வீட்டில், தாமும் பிராமண வேடம் பூண்டு, பிச்சை எடுத்து உண்டு வாழ்கின்றனர். அந்நாளில் பகன் என்னும் அரக்கனை வீமன் கொன்று அவ்வூர் மக்களுக்கு உதவி செய்கிறான். அதனால் பீமனது பிராமணக் கோலம் அவ்வூரவர்க்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியது.

அதனால் வேறிடம் மாறுகின்றனர். அங்கு வியாசபகவான் தோன்றி பாஞ்சாலி திருமணத்துக்குத் தௌமியர் என்ற பிராமணரோடு பிராமண வேடத்தில் போகும்படி கூறிச் சென்றார்.

அர்ச்சுனப் பிராமணன் போட்டியில் வெற்றி பெறுகிறான். அங்கு கிருஷ்ணனும் வந்திருந்தான். அருச்சுனனை எதிர்த்த கர்ணன், துரியோதனன் முதலியோரைப் பாண்டவர் தோற்கடிக்கின்றனர்.

பாஞ்சாலியின் முற்பிறவிப் பயனாக அவள் பாண்டவர் ஐவருக்கும் மனைவியாகிறாள். (இது மானிடப் பிறவிகளுக்குப் பொருந்தாது என்கிறார் வியாசர்)

பாண்டவர் அரக்குமாளிகையில் இறக்கவில்லை என்பதைத் தெரிந்து மேலும் அவர்களுக்குத் தொல்லை கொடுக்கத் துரியோதனன் முயற்சி செய்கிறான்.

பாஞ்சால மன்னன் துருபதன், பாண்டவருக்கு காண்டவ பிரஸ்தத்தில் மண்டபம் அமைக்க வழி செய்து கொடுத்தான். விதுரன், மயன் என்பவன் உதவியோடு அவ்விடத்தை திருத்தி இந்திரப் பிரஸ்தம் என்ற பெயரில் நவீனமயப்படுத்தி உதவினார். காண்டவ தகனத்தின்போது, அர்ச்சுனன் இந்த "மயன்" என்னும் அசுரனைத் தீயிலிருந்து காப்பாற்றியமைக்கு கைமாறாக அவன் இந்திரப்பிரஸ்த வேலைகளில் உதவி செய்தமை கவனிக்கத்தக்கது.



தருமனும் திரௌபதியும் இருந்த அறைக்குள் அர்ச்சுனன் போய் அம்புவில் எடுக்க வேண்டிய அவசர தேவை இருந்தது. அப்பொழுது அது குற்றமெனக் கருதிய அர்ச்சுனன்

தீர்த்த யாத்திரை போனமையானது, பாண்டவர் தமக்குள் ஒற்றுமையாக இருந்தமையைக் காட்டுகிறது.

மேலும் இந்திரப்பிரஸ்தத்தில் நடந்த விழாவுக்குத் துரியோதனன் அத்தினாபுரத் திலிருந்து வந்திருந்தான். இது தருமனின் விருப்பம். ஆனால், பாண்டவரைப் பழிவாங்கத் துரியோதனன் தனது நாட்டில் வைபவம் ஒழுங்கு செய்து அழைப்பு விடுத்தான்.

பாண்டவர் பாஞ்சாலியுடன் பங்குபற்றினர். சூதாட்டத்துக்குத் தருமன் இணங்கினான். மாயச் சூதாடியதில் பாண்டவர் தம்மைத் தாமே தோற்றனர். இதனால் 13 வருடம் வனவாசமும், ஒரு வருடம் அஞ்ஞாத வாசமும் செய்ய நேரிட்டது. இந்த வேளையிலும் தருமனோடு சேர்ந்து ஏனைய பாண்டவரும் துன்பம் அனுபவித்தார்கள். இது சகோதர ஒற்றுமையைக் காட்டும் இன்னொரு உதாரணமாகின்றது.

இவ்வாறு இராமாயணத்திலும் பாரதக் கதையிலும் தலைமகன் சொற்கேட்டு நடந்து புகழ்பெற்ற சகோதரர்கள் பண்பைக் காட்டும் நிகழ்வுகளில் சிலவற்றை இங்கு கூறினோம். மேலும் விரிவாக இரு கதைகளையும் படித்து மாணவ உலகம் பயன்பெறுவாராக.

## "மாவிளக்குப் போடுங்கள்"

கதிர்காமம் செல்கின்ற யாத்திரிகர் பயணங்கள்
காலங்காலமாய்த் தொடர்கின்ற கைங்கரியமாகும்;
எதிர்காலம் விஞ்ஞானம் ஏதுவாக இருந்தாலும்
ஏற்ற கால்நடையாய் செல்வது தொடருமே.

கதிர்காமம் செல்லக் கிடைப்பது பேரானந்தம்,
கால்நடையாய் செல்லக் கிடைப்பது தெய்வீகமாகும்,
கதிரமலைக்கு ஏறுவது உடம்புக்கு ஆனந்தம்,
கங்கையில் நீராடினால் காலமெல்லாம் வாழலாம்.

கதிர்காமத்தை எண்ணி மாவிளக்குப் போடு,
கதிர்காமத்தை எண்ணி மனதிலாவது கும்பிடு,
கதிர்காமத்தை எண்ணி கந்தனைக் கூப்பிடு,
கதிர்காம வேலவன் வருவான் இதை நம்பிடு.

கதிர்காமம் போகாதவர் கனவான்களாகார்,
கதிர்காமம் போகாதவர் காத்திரமாகார்,
கதிர்காமம் போகாதவர் கௌரவமாகார்,
கதிர்காமம் போனவர்கள் கடவுளைக் காண்பார்.

–கே.எஸ் சிவஞானராஜா–

(தொடர்ச்சி...



# திருவண்டப்பகுதி

## சிவனது தூலசூக்குமத்தை வியந்தது

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

## இணைக்குறளாசிரியப்பா

மறைமிக
சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
(யாழ்ப்பாணம் - காரைநகர்)

நச்சர வாட்டிய நம்பன் போற்றி
பிச்செமை யேற்றிய பெரியோன் போற்றி
நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி நாற்றிசை
நடப்பன நடாஅய்க் கிடப்பன கிடாஅய்
நிற்பன நிறீஇச்
சொற்பதங் கடந்த தொல்லோன்
உள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படாஅன்
கண்முதற் புலனாற் காட்சியு மில்லோன்
விண்முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன்



**பதவுரை:**

நச்சு அரவு ஆட்டிய நம்பன் போற்றி- நஞ்சினையுடைய பாம்பை ஆட்டிய நம்பெருமானுக்கு வணக்கம்; பிச்சு எமை ஏற்றிய பெரியோன் போற்றி- இவன் பித்தன் என்று சொல்லும்படியான நிலைமையினை எனக்கு உண்டாகும்படி செய்த பெரியோனுக்கு வணக்கம்; நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி- திருவெண்ணீற்றொடு திருவடிவம் தோற்ற வல்லவனுக்கு வணக்கம்; நால் திசை நடப்பன நடாஅய்- நான்கு திசைகளிலுமுள்ள இயங்கியற் பொருள்களை இயங்கச் செய்து, கிடப்பன கிடா அய்- நிலையியற் பொருள்களிற் கிடப்பனவற்றைக் கிடக்கச் செய்து, நிற்பன நிறீஇ- அவற்றுள் நிற்பனவற்றை நிற்கச் செய்து, சொல் பதம் கடந்த தொல்லோன்- சொல்லளவையைக் கடந்து நின்ற பழையோன்; உள்ளத்து உணர்ச்சியில் கொள்ளவும் படாஅன்- மனத்தினது உணர்ச்சியால் அளந்து அறிந்து கொள்ளவும் படாதவன்; கண்முதல் புலனால் காட்சியும் இல்லோன்- கண் முதலிய ஐம்பொறிகளின் அறிவினால் அறியப் படுதலும் இல்லாதவன்; விண்முதல் பூதலம் வெளிப்பட வகுத்தோன்- பிரகிருதி மாயையில் நுண்ணிய உருவில் ஒடுங்கிய வான் முதலாகிய ஐம்பெரும் பூதங்களையும் வெளிப்படையாகத் தோன்றுமாறு படைத்தவன்.

நஞ்சரவு என்பது நச்சரவு என வலித்தது. “மெல்லொற்றுத் தொடர் மொழி மெல்லொற் றெல்லாம், வல்லொற் றிறுதி கிளையொற் றாகும்” (தொல். எழுத்து 414) என்பது விதி.

நச்சரவாட்டிய நம்பன் என்பது மணஞ் செய்தற்பொருட்டுத் தன் காதலியை அழைத்துச் சென்ற ஒருவன் திருப்புறம்பயம் என்னும் ஊரில் தங்கியிருந்தபோது அரவு தீண்டி இறக்க, அது கண்டு அவன்றன் காதலி மனங்கலங்கி இறைவனை நினைந்து புலம்பினள். இறைவன் அவளுக்கு இரங்கி ஒரு பாம்பாட்டியாக அங்கு போந்து பாம்பினை ஆட்டி அந்நஞ்சினைத் தீர்த்து அவனை உயிர்பெற்றெழச் செய்த வரலாற்றினைக் குறித்தது. "பச்சைத் தாள் அரவாட்டி படர்சடையாய்" (ஏசற 4) என இத் திருவாசகத்தும், "கோளரவ மாட்டுங் குழகா போற்றி" "பற்றிப் பாம்பாட்டும் படிறன் கண்டாய்" (நாவு 219:5; 253:3) எனத் தேவாரத்தும் வருவனவுங் காண்க. திருப்புறம்பயத்தில் அரவின் விடந்தீர்த்தவன் இறைவனேயாகத் திருவிளையாடற் புராணகாரர்கள் இந்நிகழ்ச்சியைத் திருஞான சம்பந்த சுவாமிகள் மீது ஏற்றிக் கூறியுள்ளனர். திருஞான சம்பந்த சுவாமிகள் விடம் தீர்த்தது திருமருகலிற் போந்த காதலர் வேறு இருவரில் ஒருவற்கேயாம் என்பதனை,

"திருமருகல் நகரின்கண் எழுந்தருளி.... பெருகுதமிழ்த்
தொடைசாத்தி அங்கிருந்தார் பெரும்புகலிப் பிள்ளையார் தாம்"
திருஞான 472

"மற்றிவனும் வாளரவு தீண்ட மாண்டான் மறிகடலிற் கலங்
கவிழ்ந்தார்போல நின்றேன், சுற்றத்தார் எனவந்து தோன்றி
என்பால் துயரமெலாம் நீங்க அருள்செய்தீர் என்னக், கற்ற
வர்கள் தொழுதேத்துங் காழிவேந்தர் கருணையினாற்
காரிகையாள் தனக்கு நல்கப், பற்றியவாள் அரவுவிடந்
தீருமாறு பணைமருகற் பெருமானைப் பாடலுற்றார்" திருஞான 481.

எனப் பெரியபுராணம் கூறுமாற்றானுமறிக.

பிச்செமை ஏற்றிய பெரியோன் என்றது உலகியல் நினைவு சிறிதுமின்றி இறைவனது திருவருட்டிறத்தையே நினைந்திருக்குமாறு தம்மைச் செய்தமையைத் தெரிவித்தவாறு. "வஞ்சகப் பெரும் புலையனேனையுன் கோயில் வாயிலிற் பிச்சனாக்கினாய்" (சதக 96) "தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி" (அம் 2) "என் பிறவியை வேரறுத்துப் பெரும் பிச்சுத் தரும்பெருமான்" (அடைக் 3) "பித்தென்னை ஏற்றும்.... அத்தன்" (திருவெண்பா 5) எனப் பிறாண்டும் அடிகள் அருளியமையுங் காண்க. பிச்சுபித்து எமை என்னும் இரண்டாவது நான்காவதன் பொருட்கண் வந்தது.

மாப்பேருழிக் காலத்து எல்லாவுலகங்களையும் பொடியாக்கி அப்பொடி தன் திருமேனியிற் பொருந்துமாறு தோன்றுதல் தனக்கன்றிப் பிறர் எவர்க்கும் ஆகாமையின் இறைவனை "நீற்றொடு தோற்ற வல்லோன்" என்றார். "சுடுபொடி யணிந்த வளங்கொழி யகலத்து" (திருவாரூர்மும் 22:15) என வருதலுங் காண்க.

உலகத்திலுள்ள இயங்கியற்பொருள் நிலையியற் பொருள்களில், நிலையியற் பொருள்களில் கற்பாறை மலை முதலிய கிடக்கும் பொருள்களும் மரம், செடி முதலிய நிற்கும் பொருள்களும் உளவாதலின் நிலையியற் பொருள்களைக் கிடப்பன நிற்பன என இருவகைப்படுத்திக் கூறினார். "நிற்பனவு நடப்பனவு நிலனுநீரும் நாவு 312:7 நடாஅய், கிடாஅய், நிறீஇ என்பன நடத்திக் கிடத்தி நிறுத்தி எனச் செய்தனெச்சப் பொருள் தருதற்கு அளபெடை பெற்றுவந்தன. இவ்வினையெச்சங்கள் கடந்த (111) என்னும் பெயரெச்சத்தைக் கொண்டு முடிந்தன.

பதம்- அளவு. முன்னைப் பழம் பொருட்டு முன்னைப் பழம்பொருளாகிய இறைவன் சொல்லளவையைக் கடந்தோனாதலின் "சொற்பதங்கடந்த தொல்லோன்" என்றார். "சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க" (திருவண்ட 40) "சொற்பதங் கடந்த அப்பன்" (அச்சப் 6) என அடிகள் பிறாண்டும் அருளியமையுங் காண்க.

உள்ளத்துணர்ச்சியிற் கொள்ளவும் படாஅன் என்றது மனத்துக்கும் எட்டாதவன் என்றவாறு. "மனவாசகங் கடந்தான்" (உயிருண்ணி 3) என வருதல் காண்க.

கண்முதற் புலனாற் காட்சியுமில்லோன் என்றது காட்சி முதலிய அளவைகளுக்கு அகப்படாதவன் என்றவாறு. புலன்- பொறியுணர்ச்சி. அவை: சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பன. விண்முதற் பூதம் வான் வளி தீ நீர் நிலம் என்பன.

(தொடரும்...

## ஐந்து வயதில் கிடைத்த அனுபவம்

யாழ்ப்பாணம் மாதகல் கிராமத்தில் அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் நான் அரிவரி படித்துக்கொண்டிருக்கும்போது ஒரு சைவப் பெரியார் வந்து பிரசங்கம் செய்தார். சுமார் நூறு பிள்ளைகள் படித்தோம். பிள்ளைகள் எல்லோரும் சைவ சமயத்தவர்கள். ஆசிரியர்களும் சைவ சமயத்தவர்கள்.

நீங்கள் எல்லோரும் சைவசமயத்தைச் சேர்ந்த சைவப்பிள்ளைகள். நீங்கள் இனிமேல் மரக்கறி உணவுதான் சாப்பிடவேண்டும். மாமிச உணவு சாப்பிடக் கூடாது. உயிர்களைக் கொன்று தின்பது பாவம். பாவம் செய்யக்கூடாது என்று அறிவுரை கூறினார்.

பாடசாலை விட்டதும் ஓடோடிச் சென்று அம்மாவிடம் நடந்ததைக்கூறி நான் இனிமேல் மாமிச உணவு சாப்பிடமாட்டேன் என்று உறுதியாகக் கூறினேன். அம்மா பெருமனதோடு உன் விருப்பம்போல் நடந்துகொள் என்று அனுமதி தந்தார்.

மரக்கறி உணவுதான் சத்து அதிகம். நோயும் அணுகாது. மாமிச உணவை ருசிக்காகவும் சத்துணவு என்ற மூடநம்பிக்கையாலும் சாப்பிடுகின்றார்கள். நான் 93 வயதுவரை நோயின்றி இருப்பதற்கு மரக்கறி உணவும் ஒரு காரணம்.

வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் கொலைபுரிவார் தவிர மற்றை எல்லோரும் நமது குலத்தவரே என்று மனித குலத்தை இரண்டாகப் பிரித்து கொலை புரிவோர் ஒரு சாதி என்றும் கொலை புரியாதோர் வேறு சாதி என்றும் பாடி வைத்துள்ளார். தமிழ் மூதாட்டி ஔவைப் பிராட்டியார் இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்தோர் என்று சாதியை இரண்டாகப் பிரித்துள்ளார்.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிருந்தொழும் என்று தெய்வப்புலவர் திருவள்ளுவ நாயனார் திருக்குறளில் பாடியுள்ளார். திருக்குறள் படிப்பதற்கு மட்டும் உள்ள நூல் அல்ல. படித்து அதன்படி வாழ்வதற்கு வழிகாட்டும் உயர்ந்த நீதி நூல் ஆகும்.

மனிதப் பிறவியின் நோக்கம் கடவுளை அறிந்து, கடவுளை வழிபட்டு, கடவுளை அடைதலேயாகும் என்று தமிழ் சைவ மக்களின் பாதுகாவலராகும் நாவலர் பெருமான் காட்டிய வழியில் வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

இன்பமே சூழ்க; எல்லோரும் வாழ்க.

ஆனந்தம். -பொ. கந்தையா-

# இறைவனின் அன்பிற்குத் தோத்திரங்கள்

திரு சு. சிவராசா அவர்கள்

கடவுள் இருக்கிறாரா இல்லையா என்பது
காலங் கடந்தும் காலாகாலமாக விவாதித்து வீணடிக்கப்படும்
விலைமதிப்பற்றது என்று சொல்லப்படும் விலைபோகிற பொழுதுகள்.
ஆகாயம், பிரபஞ்சம், சிதாகாசம், அண்டவெளி என்று பேசப்படுகிற
அரும்பதப் பட்டியலை ஒரு பக்கம் தள்ளிவிடுவோம்.
நாங்கள் வாழுகின்ற இந்த உலகத்தை உங்கள் கண்களை மூடிக்கொண்டு
மனக்கண்ணின் முன்னால் கொண்டுவந்து நிறுத்திப் பாருங்கள்.
புல்பூண்டு முதல் விண்முகட்டை இடிக்கும் அளவிற்கு ஓங்கி வளர்ந்த மரங்கள்
எறும்பு முதல் யானை வரை எத்தனையோ விலங்குகள்
மலைகள், பள்ளத்தாக்குகள், சமவெளிகள், பீடபூமிகள்
ஆறுகள், குளங்கள், ஏரிகள், கடல்கள், சமுத்திரங்கள்
இவைகளையும் இன்னும் இருக்கின்ற பொருட்கள் அத்தனையையும்
வார்த்தெடுத்த ஒரு கலைஞனை - சக்தியை அல்லது இயற்கையை
பரம்பொருள் என்று ஒரு பேச்சுக்கு வைத்துக் கொள்வதில் பெரிய நஷ்டம் ஏதுமில்லை
இங்குள்ள அத்தனை பொருட்களும் ஐந்து பூதங்களைக் கொண்டு
கடவுள் எனும் கலைஞன் பிசைந்து பிசைந்து பிடித்த பாண்டங்கள்
அடடா! அத்தனை படைப்பிலும்தான் எத்தனை அழகு கொட்டிக் கிடக்கிறது.
சங்கப் புலவன் முதல் சிங்கப் புலவன் பாரதிவரை
எங்கள் காலத்துப் புதுக்கவிதை வித்தகர்கள்வரை
அந்த அழகைத்தானே பாடினார்கள், பாடுகிறார்கள், பாடப்போகிறார்கள்
அழகான இந்த உலகத்தில் நித்தியமான ஒரு பொருளை தேடிப் பார்க்கிறேன்
அறம், பொருள், இன்பம், வீடு எனும் புருஷாத்தங்களா
அல்லது சொல்லப்படா நின்ற மற்ற விழுமியங்களா
கல்வி, செல்வம், வீரம், பட்டம், பதவி இவைகளா
எதுவுமே எனது தேடலுக்கு முடிவான விடையாக இல்லை
மேலும் மேலும் குடைந்து குடைந்து கிண்டிக் கிளறிப் பார்க்கிறேன்
சிவசோதியின் அடியைக் காண நாராயணன் பூமியைக் குடைந்தது போலவும்
முடியைக் காண பிரமதேவன் விண்ணைக் குடைந்தது போலவும்
தோற்றுக் கொண்டுபோன எனது தேடலில் ஒரு ஒளிக்கீற்றுப் பளிச்சிட்டது
அது அன்பு என்ற அளவற்ற சோதியிலிருந்து வந்த ஒற்றைக் கீற்று
அந்த மின்னலில் அன்பு என்ற சோதியை ஒரு மணித்துளி மட்டும் கண்டேன்

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் மூலன் சொன்ன மந்திரம் "அன்பே சிவம்".
மகாவீரர், புத்தர், இயேசு, முகமது, குருநானக்
முதலாக அத்தனை அவதார புருஷர்களும் "அன்பே பரம்பொருள்" என்கிறார்கள்
ஆனால் ஆயிரம் இனங்கள், மொழிகள், சாதிகளாக
ஆயிரம் பிரிவினைகள் பேசுகின்ற மனிதனின் நரம்பில்லா நாக்கினால்
ஆயிரம் திருநாமங்கள் சொல்லி ஆண்டவனைப் போற்றத் தெரியவில்லை
சண்டைபோடுவதற்கு சாக்கு போக்கு தேடுகிற மனிதனின் கையில்
மொழி, இனம், சாதி முதலியவைகளோடு கடவுளும் ஆயுதமானார்
உலககர்த்தாவாகிய இறைவனே!
அமைதிப் பூங்காவாக நீர் படைத்த உலகத்தில்
அன்பை மட்டும் தேடுகிற பொருளாக வைத்து விட்டீரே
அன்பைத் தேடிப் புறப்பட்டவன் அழகையெல்லாம் அழித்து விட்டானே
அன்பு கெட்டு அழகு கெட்டு ஆழிப்பேரலை எழுந்து
புத்தி புகட்டிப் போன பின்பும்
திருந்தாத உள்ளங்களையும் உமது அன்பினால் இரட்சித்துவிடும்
சாந்தியும் சமாதானமும் எங்களுக்கு அருள் செய்யும்
அன்பையும் அழகையும் காண்பதற்கு அகக் கண்களைத் தாரும்
இறைவா! இந்த உலகத்தின் அநியாயங்களையும் அவலட்சணங்களையும்
-காணவேண்டாம்என்பதால்
எனது புறக்கண்களைப் பறித்துக் கொண்ட உமது அன்பிற்கு
இந்தப் பார்வையற்றவனின் தோத்திரங்கள் தோத்திரங்கள் தோத்திரங்கள்.....

## ஸ்ரீமத்
## முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமி அவர்களின்
## 28ஆவது குருபூசைத்தின நிகழ்வு



**காலம்: 12.08.2013 திங்கட்கிழமை**
**இடம் : சந்நிதியான் ஆச்சிரமம்**

**வழமைபோல ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் விசேட பூசை அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து ஆச்சிரம மண்டபத்தில் குருபூசை நிகழ்வுகள் இடம்பெறும்.**

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி

(தொடர்ச்சி...

– வாரியார் சுவாமிகள் –



29. இல்லே எனு மாயையில் இட்டனைநீ
பொல்லேன் அறியாமை பொறுத்திலையே
மல்லேபுரி பன்னிரு வாகுவில் என்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே.

## பதவுரை

மல்லே புரி- மற்போர் புரிவதற்கு ஏற்றதான, பன் இரு வாகுவில்- பன்னிரண்டு திருத்தோள்களிலும், என் சொல்லே புனையும்- அடியேனுடைய பாமாலை களையே தரித்துக் கொள்ளும், சுடர் வேலவனே- ஒளி வீசும் வேலாயுதக் கடவுளே! இல்லே எனும் மாயையில்- இல்வாழ்க்கை யென்னும் மாய வாழ் வில், நீ இட்டனை- அடியேனை அகப்படச் செய்து விட்டீர், பொல்லேன்- தீயேனாகிய என்னுடைய, அறியாமை பொறுத்திலையே- அறிவீனத்தால் செய்த பிழைகளைப் பொறுத்தீரில்லையே.

## பொழிப்புரை

மற்போர் புரிதற்கு ஏற்ற பன்னிரு திருத்தோள்களிலும் அடியேனுடைய பாமாலைகளையே அணிந்து கொண்ட ஒளிவீசும் வேலாயுதக் கடவுளே! இல்வாழ்க்கையென்ற மாய வாழ்வில் அடியேனை நீர் சிக்க வைத்தீர். தீயேனுடைய அறிவின்மையான குற்றங்களைப் பொறுத்துக் கொண்டீரில்லை. (ஆதலால், பொறுத்து அருள்புரிவீர்.)

## விரிவுரை

**இல்லே யெனுமாயையில் இட்டனை நீ:-**

கேவல நிலையில் ஆணவ இருட்டறையில் அழுந்திக் கிடந்த ஆன்மாக்களுக்கு அருள்புரியும் பொருட்டு மாயையின் காரியங்களாகிய தனு கரண புவனங்களோடு கூடி உயிர்கள் வாழும் சகல நிலையாகிய உலக வாழ்க்கையில் இறைவன் இட்டான். இது உயிர்களின் மலத்தைத் தேய்த்து, சுத்த அருள் நிலையாகிய சுத்த நிலையில் சேர்த்து, தனது திருவடி அநுபூதியடையும்படிச் செய்கின்றான்.

செம்புறு களிம்பென அநாதிமலம் மூழ்கியிருள்
சேரும் அலர்விழி என்னவே
தெளிவற்ற கேவலத் தசைவற் றிருந்துமல
சேட்டையாற் குழவி குருடர்

தம்பிணியி னால்உற்ற பால்கோலை நோக்கஅவை
தமைஅளிப் பார் என்ன நான்
சார்கன்ம மாயையை விரும்பநீ தந்திடச்
சகலனாய்ச் சுழல் கறங்கு

பம்பரம தென்ன நீள் பிறவிச்சுழிக்குளே
பட்டுழல் பெரும் பாவியேன்
பாழான மலமற்று வினையற்று மாயையின்
பற்றுவிட் டுனையறிந்துன்

அம்பொனடி நீழல்சேர்ந் தானந்தம் உண்டு நான்
அதுவாய் இருப்பது என்றோ?
அருள் ஞான வாரியே! ராசைமே வியசெல்வ
அகிலாண்டம் என்னும் அரசே.

ஆதலால் இறைவன் இல்லையெனும் மாயையில் இட்டது அநீதியன்று. நீதியேயாகும்.

புகலறிய நின்விளையாட் டென்னே எந்தாய்!
புன்மையறிவுடைய என்னைப் பொருளாப் பண்ணி
இகல் விளைக்கும் மலமாயை கன்மத் தூடே
இடருறவுஞ் செய்தனையே இரக்கம் ஈதோ?

-தாயுமானார்.

பாசத்தி லிட்டதருள் அந்தப் பாசத்தின்
நேசத்தை விட்டதருள் அந்த நேசத்தில்
கூசற்ற முக்தியருள் அந்தக் கூட்டத்தின்
நேசத்துத் தோன்றா நிலையரு ளாமே.

-திருமந்திரம் (1820)

எனவே எம்பெருமான் ஆன்மாக்களை சகல நிலையாகிய உலக வாழ்வில் இட்டது, இச்சையறிவு செயல்கள் விளங்கும் பொருட்டே எனவுணர்க.

ஆணவ மலம் நீங்க, மாயை கன்மம் என்ற இரு மலங்களை ஆசந்துகமாக இடையில் கூட்டியது, துணியில் உள்ள அழுக்கு நீங்க உவர் மண்ணும் சாணமும் சேர்ப்பதுபோல், என அறிக.

உவர் மண்ணும் சாணமும் துணியின் அழுக்கை நீக்குதல்போல், மாயை, கன்மம் என்ற இரு மலங்களின் சேர்க்கை மூலமலமாகிய ஆணவ மல வலியைக் குறைப்பதற்காக வேயாகும்.

**பொல்லேன் அறியாமை பொறுத்திலையே:-**

பொல்லேன்- பொல்லாங்கு என்ற பண்புப் பெயரடியாய்ப் பிறந்தது. "பெருமானே!

என்னை இம் மாயவாழ்வில் இட்டது நீதானே. ஆதலால் என் அறியாமையால் நிகழும் பிழைகளைப் பொறுத்து ஆள்வதும் நின் கடமையாகும் என்று முறையிடுகின்றார்.

**மல்லேபுரி பன்னிருவாகு:-**

வாகு- தோள். முருகவேளின் பன்னிரண்டு திருத்தோள்கள் கிரியா சக்தியைக் குறிக்கின்றன. எம்பிரானுடைய தோள்களைப் புகழ்வதால் தீவினைகள் தீரும்.

"......முன்பு செய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும்"

-கந்தரலங்காரம் (70)

அதனால் கச்சியப்ப சிவாச்சாரியர், "ஆறிரு தடந்தோள் வாழ்க" என்றார்.

"மற்பொரு திரள்புய மதயானை" -(கைத்தல) திருப்புகழ்

"ஆனையுரிவை மற்புரி புயத்தினிது மேவுவார்"

-சம்பந்தர்.

**என் சொல்லே புனையும் சுடர் வேலவனே:-**

முருகன் தன்னுடைய பன்னிரு தோள்களிலும் அருணகிரிநாதருடைய திருப்புகழாகிய பாமாலைகளையே அணிந்து அருள்புரிகின்றார்.

"அடிமை தொடுத்திடு புன்சொல் ஒன்று
நித்தியாமல் புனைந்தன" -புய வகுப்பு

"கவிமாலை சூடுவதும்" -சீர்பாத வகுப்பு

"அடிமை சொலும் சொல் தமிழ்ப்பனீரொடு
பரிமளமிஞ்சக் கடப்பமாலையும் அணிவோனே"

-(மலரணி) திருப்புகழ்.

**கருத்துரை**

வேலவனே! இவ்வுலக வாழ்வாகிய சகல நிலையில் இட்ட நீ என் பிழைகளைப் பொறுத்தருள் செய்.

(தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | |
|---|---|---|
| யூலை 22 | ஆடி 06 திங்கள் | பட்டினத்தார் |
| ஆகஸ்ட் 12 | ஆடி 27 திங்கள் | மயில்வாகனம் சுவாமிகள் |
| ஆகஸ்ட் 13 | ஆடி 28 செவ்வாய் | சுந்தரமூர்த்திநாயனார் |
| | | சேரமான் பெருமாள் நாயனார் |
| செப்ரம்பர் 02 | ஆவணி 17 திங்கள் | திருநீலகண்ட நாயனார் |
| செப்ரம்பர் 13 | ஆவணி 28 வெள்ளி | குங்குலியக்கலய நாயனார் |

# ஸ்ரீ ராமரைவிட உயர்ந்தது எது தெரியுமா?

## ("தெரிந்த புராணம், தெரியாத கதை" எனும் பகுதியிலிருந்து)

செல்வி யோ. ஜிந்துஷா அவர்கள்

### ஸ்ரீ ராம ஆஞ்சநேய யுத்தம்

"யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம்
தத்ர தத்ர க்ருதமஸ்த காஞ்சலீம்
பாஷய வாரி பரிபூரண லோசனம்
மாருதீம் நமத ராக்ஷஸாந்தகம்"

"எங்கெல்லாம் ராம நாமம் ஒலிக்கின்றதோ, அங்கெல்லாம் பக்திப் பரவசத்துடன் கண்களில் நீர்மல்க எவன் காணப்படுகிறானோ, அவனே "மாருதி எனும் வாயுபுத்திரன்" என்ற வாசகங்களால் ஆஞ்சநேயன் எனும் ஹனுமனுக்கு அடையாளம் காட்டப்படுகின்றது.




ராமசேவை ஒன்றையே தன் இலட்சியமாகக் கொண்டு இருப்பவன் சிரஞ்சீவியான ஹனுமன். அப்பேர்ப்பட்ட ஹனுமனுக்கும் ஸ்ரீ ராமருக்கும் யுத்தம் நடந்தது என்று சொன்னால் நம்புவீர்களா....? அப்படி ஒரு சம்பவம் புராணங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளது. அது காலத்தால் அழியாத உண்மை ஒன்றை உலகுக்கு எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

பட்டாபிஷேகத்துக்குப் பிறகு நீதி தவறாது ராம இராஜ்ஜியம் நடத்தி வந்த ஸ்ரீ ராமர் மக்களின் நலம் கருதி, நாட்டின் வளத்திற்காக, வசிஷ்டர், விஸ்வாமித்திரர், அத்ரி முதலான மகரிஷிகளைக் கொண்டு யாகம் ஒன்றை நடத்தினார். அயோத்தியை அடுத்த அழகிய வனத்தில், பெரிய யாக குண்டங்கள் அமைத்து முனிவர்கள் யாகத்தை நடத்திக் கொண்டு இருந்தனர். சக்கரவர்த்தி ஸ்ரீ ராமரின் ராஜ்ஜியத்துக்கு உட்பட்ட ஒரு சிறிய நாட்டின் மன்னன் சகுந்தன் ஒருநாள், வேட்டையாடி விட்டு வரும்போது, யாகசாலைக்கு அருகில் வந்தான். தான் வேட்டையாடிவிட்டுத் திரும்பியிருந்தபடியால், யாகசாலைக்குள் நுழைவது சரியில்லை என்று கருதி வெளியில் நின்றபடியே நமஸ்கரித்து, "வசிஷ்டாதி முனிவர்களுக்கு என் வணக்கங்கள்" என்று கூறிப் புறப்படத் தயாரானான். சகுந்தன் கூறிய வார்த்தைகள் நாரதமுனிவரின் காதில் விழுந்தது. விறுவிறுப்பான நாடகம் ஒன்றைத் தொடங்க நினைத்தார். அற்புதமான கதைக்கு கரு ஒன்று கிடைக்க.... விடுவாரா நாரதர்...? நேராக, விஸ்வாமித்திரரிடம் சென்றார். "பார்த்தீர்களா மகரிஷி இந்தச் சகுந்தன் சாதாரண சிற்றரசன். இவனுக்கு எத்தனை திமிர்? இங்கே, யாகசாலைக்கு

முன்னே நின்று கொண்டு "வசிஷ்டாதி முனிவருக்கு வணக்கம்" என்று கூறிச் செல்கின்றான். அப்படியென்ன வசிஷ்டர் உயர்ந்துவிட்டார். தாங்களும்தான் ஸ்ரீ ராமரின் குரு. தாங்களும்தான் இந்த யாகத்தை முன்னே நின்று நடத்துகிறீர்கள். தங்கள் பெயரையும் சொல்லி, ஒரு நமஸ்காரம் செய்திருக்கலாம் அல்லவா? தங்களை வேண்டும் என்றே அவமானப்படுத்த இவன் வசிஷ்டரை முதன்மைப்படுத்தி, மற்றவர்களைச் சிறுமைப்படுத்தி அவருக்கு மட்டும் வணக்கம் செலுத்தி இருக்கின்றான்" என்றார் நாரதர்.

விஸ்வாமித்திரரின் முகம் கோபத்தால் சிவந்தது. கண்களில் தீப்பொறி பறக்க... அவர் சாபமிடத் தொடங்கமுன், நாரதர் தடுத்து நிறுத்தினார்" அந்த அற்பனுக்குச் சாபமிட்டு தங்கள் தவ பலத்தை ஏன் குறைத்துக் கொள்ள வேண்டும்? தங்கள் சீடர் ஸ்ரீ ராமர். அந்த சகுந்தனோ ஸ்ரீ ராமரின் கீழே இருக்கின்ற சிற்றரசன். இவன் செய்த பிழையை ஸ்ரீ ராமரிடம் கூறி, இவனுக்கு உரிய தண்டனையை அவரையே வழங்கச் சொல்லுங்கள்" என்றார் நாரதர். விஸ்வாமித்திரருக்கும் அது சரியெனப்பட்டது. சில நாழிகைகள் கழிந்து யாகசாலைக்கு வந்த ஸ்ரீ ராமரிடம் "உன் குருவை ஒருவன் அவமதித்தால், அவனுக்கு நீ என்ன தண்டனை தருவாய்?" என்று கோபத்துடன் கேட்டார். அவரை யாரோ அவமதித்து விட்டார் என்பதை ஊகித்துக்கொண்டார் ஸ்ரீ ராமர். "குருதேவா! தங்களை அவமதித்தவர்கள் யாராயிருந்தாலும் சரி அவருக்கு தக்க தண்டனையை தாங்களே கூறுங்கள் நிறைவேற்றி வைப்பது என் கடமை" என்றார். "சகுந்தன் என்னை அவமதித்து விட்டான். அவன் சிரசை இன்று சூரிய அஸ்தமனத்துக்குள் என் காலடியில் சேர்க்க வேண்டும்" என்று விஸ்வாமித்திரர் சொல்லி முடிக்கக்கூட இல்லை...." தங்கள் ஆணைப்படியே செய்கிறேன். இது சத்தியம்!" என்று வாக்களித்து விட்டார் ஸ்ரீராமர். நாரதர் தொடங்கிய நாடகத்தின் முதல் காட்சி முடிந்தது. ஸ்ரீ ராமர் செய்தியனுப்பினால் போதும், சகுந்தனே தன் தலையை வெட்டி ஒரு தட்டில் வைத்து அனுப்பி விடுவான். இருந்தாலும், அது ஸ்ரீ ராமர் கடைப்பிடிக்கும் சத்திரிய தர்மத்துக்கு அழகாகுமா? எனவே ஸ்ரீ ராமர் போர்க்கோலம் பூண்டு, சகுந்தனின் நாட்டை நோக்கிப் புறப்படத் தயாரானார்.

நாடகத்தின் இரண்டாவது பகுதியை தொடங்கினார். நாரதர் நேரே சகுந்தனிடம் சென்றார். "என்ன காரியம் செய்து விட்டாயப்பா?" வசிஷ்டரின் பெயரைச் சொன்னவன், விஸ்வாமித்திரர் பெயரையும் சொல்லியிருக்கக் கூடாதா? இப்போது கோபத்தைத் தேடிக் கொண்டாயே! படையெடுத்து வருபவர் ஸ்ரீ ராமர் ஆயிற்றே! என்ன செய்யப் போகிறாய்? என்று ஆதங்கமாகக் கேட்டுவிட்டு, மற்ற விபரங்களையும் சொன்னார். "நான் என்ன செய்ய முடியும் சுவாமி? இலங்கேஸ்வரன் ராவணனாலேயே எதிர்க்க முடியாத ஸ்ரீ ராமரை நான் எப்படி எதிர்க்க முடியும்? முடியாது. என் தலைதானே ஸ்ரீ ராமருக்கு வேண்டும். அதைத் தாங்களே வெட்டியெடுத்துச் சென்று, அவரிடம் தந்து விடுங்கள்" என்று உருக்கமாகக் கூறி, சகுந்தன் தன் வாளை உருவ, நாரதர் அவனைத் தடுத்துச் சிரித்தார். சகுந்தா! உண்மையில் நீ விஸ்வாமித்திரரை அவமதிக்கவில்லையே... அப்படி இருக்கும்போது, ஏன் கலங்குகிறாய்?" என்ற நாரதர், "சகுந்தா... உன் நாட்டையடுத்த வனத்தில், ஆஞ்சநேயனின் தாய் அஞ்சனாதேவி ஆட்சிபுரியும் கானகம் இருக்கிறது. அங்கே சென்று தவம் செய். அவள் கருணைமிக்கவள். அவளால் உனக்கு உயிர்ப்பிச்சை தரமுடியும். பிறகு ராம பாணம் கூட உன்னை ஒன்றும் செய்யமுடியாது என்று உறுதி கூறினார் நாரதர். சகுந்தன் மனதில் நம்பிக்கை பிறந்தது. அஞ்சனாதேவி ஆட்சிபுரியும் கானகம் சென்றான். அங்கே

PUBLIC LIBRARY
JAFFNA



அக்னியை வளர்த்தான். "அஞ்சனாதேவி சரணம்" என்று பக்தியுடன் அக்னியைச் சுற்றிப் பலமுறை வலம் வந்து பிராணத்தியானம் செய்யத் தயாரானான். தாயல்லவா அவள்! தன்னைச் சரணடைந்த குழந்தையை சாகவிடுவாளா? அவள் "குழந்தாய், கவலைப்படாதே, என்னைச் சரணடைந்த உயிருக்கு எந்த ஆபத்தும் நேராது. "தீர்க்காயுஷ்மான்பவது" என்று ஆசிகூறி, அவன் நீண்ட ஆயுள் வாழ வரம் தந்தாள்.

சகுந்தன் அவளது திருவடியில் விழுந்து வணங்கினான். "நான் மரண கண்டத்தில் சிக்கியுள்ளேன் தாயே. ஸ்ரீராமர் என் சிரசைத் தன் குருவின் காலடியில் சூர்ய அஸ்தமனத்துக்குள் சேர்க்கும் சபதம் பூண்டு, என்மீது போர் தொடுத்து வருகிறார். இப்போது நான் உயிர் பிழைக்க என்ன செய்ய வேண்டும் என அருளுங்கள்" என்றான். அதைக் கேட்டுப் பதறிப் போனாள் அஞ்சனாதேவி. ஸ்ரீராமரின் பாணத்திலிருந்து சகுந்தனைக் காப்பாற்றுவது என்பது இயலாத காரியமாயிற்றே எனக் கலங்கினாள். இருந்தாலும் தான் உயிர்ப்பிச்சை அளித்தவனைக் காக்க வேண்டியது தன் கடமை என்பதில் உறுதியாக இருந்தாள்.... தன் வாக்கைக் காக்கும் பொறுப்பை, தன் மைந்தன் ஹனுமனிடம் ஒப்படைக்க முடிவு செய்தாள். தன் மகனைத் தன் முன்னே தோன்றும்படி சங்கல்பித்தாள் அந்த நிமிடமே, எதிரே வந்து நின்று வணங்கினான் ஹனுமான். ஸ்ரீராமரின் பித்ரு பக்திக்கு ஹனுமனின் மாத்ரு பக்தி எந்த விதத்திலும் குறைந்ததல்ல. "மகனே! இவன் சகுந்தராஜன் பிராணத் தியானம் செய்யத் துணிந்தபோது இவனைக் காப்பாற்றி, உயிர்ப்பிச்சை தருவதாக வாக்குறுதி தந்துவிட்டேன். என் வாக்கைக் காப்பாற்றும் பொறுப்பை இப்போது உன்னிடம் ஒப்படைக்கின்றேன். இவனை எப்படியேனும் காப்பாற்று" என்று கட்டளை இட்டாள். "அப்படியே ஆகட்டும் தாயே!" என உறுதியளித்தான் ஹனுமான்.

தன் வாலை நீளமாக வளர்த்து, அதனை ஒரு கோட்டை போல அமைத்தான். அதற்குள் சகுந்தனைப் பாதுகாப்பாக அமர்த்திவிட்டு, சிறு குரங்கின் உருவெடுத்து, வால் கோட்டையின் மேல் அமர்ந்து கொண்டு, தாய்க்குச் செய்யும் கடமைக்காகத் தாயினும் மேலான தலைவனையே எதிர்க்கத் தயாரானான். எந்த ஆபத்தையும் எதிர்க்கும் வல்லமையின் ரகசியம் ஒன்றை அவன் அறிந்து வைத்திருந்தான். இதனிடையே ராம - லட்சுமணர்களின் சைன்யம் - சகுந்தராஜனின் தலைநகரில் புகுந்தது. உயிருக்குப் பயந்து சகுந்தன் அஞ்சனா வனத்தில் மறைந்து இருப்பதை அறிந்து, ஸ்ரீராமர் அங்கே சென்று போரைத் தொடங்கினார். சகுந்தராஜன் மறைந்திருக்கும் மலைபோன்ற வால் கோட்டையை நோக்கி ஸ்ரீராமரின் அஸ்திரங்கள் சரமாரியாக வானில் பறந்தன. ஆனால் அவர் எய்த அஸ்திரங்கள் யாவும் அடுத்த சில விநாடிகளில் அவரின் திருவடிகளிலேயே திரும்பி வந்து விழுந்தன. அதிசயித்துப் போனார் ஸ்ரீராமர். யுத்தம் தொடர்ந்தது. ஸ்ரீராமர் கற்ற அஸ்திர வித்தைகள் அனைத்துமே தோற்று நின்றன. இதற்கான காரணம் தெரியாமல் ஸ்ரீராமர் திகைத்து நிற்க, நாரதர் தான் போட்ட முடிச்சை அவிழ்க்க அங்கே வந்து நின்றார்.

"ராமா! உன் அஸ்திரங்களில் சிம்ம நாதமும், உனது யுத்த பேரிகையின் சப்தமும் ஒரு கணம் நிற்கட்டும். அப்போது அதன் காரணத்தை நீ அறியலாம்" என்றார் சூசகமாக. ஒருகணம் யுத்த பூமியில் அமைதி தோன்றியது. அப்போது எங்கிருந்தோ காற்றில் மிதந்து வந்த "ராம்..... ராம்....." என்னும் "ராம" நாம சப்தம் கேட்டு, அனைவரும் மெய் சிலிர்த்தனர். அது ஹனுமனின் குரல்தான். அவன் ஒருவனால்தான் ராம நாமத்தை அத்தனை பக்தியோடும், சக்தியோடும் ஜபிக்க முடியும் என்பது ஸ்ரீ ராமருக்குத் தெரியும். நாடகத்தின் இறுதிக்

காட்சிக்கு வந்தார் நாரதர். "ராமா! உன் திருநாமத்தின் சக்திக்கு முன்னால் உன்னாலேயே எதுவும் செய்ய முடியாது. உன் நாமம் அத்தனை புனிதமானது, சக்தி வாய்ந்தது. உலகின் எந்தச் சக்தியாலும் உன் நாமத்தை எதிர்த்து நிற்க முடியாது. காலத்தால் அழியாத பெருமை வாய்ந்தது உன் நாமம். அதிலும் அதனை ஆஞ்சநேயன் ஜபிக்கிறான் என்றால் அதை வெல்ல எவராலும் முடியாது? என்றுகூறி, நடந்ததையெல்லாம் விளக்கினார்.

"ஹனுமன் ராம நாமம் ஜபிப்பதை நிறுத்தினால்த்தான் உன் அஸ்திரங்கள் இந்த எல்லையைக் கடக்கும். ஹனுமனை அழித்தால்தான் அந்த நாமம் ஒலிப்பது ஓயும். அவன் இதயத்திலோ, ஸ்ரீராமனையே பிரதிஷ்டை செய்து வைத்திருக்கிறான். அவனை அழிப்பது சுலபமல்ல. ஆனால் ஹனுமனை வென்றால்தான் சகுந்தனை வெல்லமுடியும். அப்படியெனில், ஸ்ரீராமன் தன்னையே அழித்துக்கொண்டால்தான் இது சாத்தியமாகும்" என்று சிக்கலை மேலும் சிக்கலாக்கி, நாரதர் விளக்கியபோது "வேண்டாம் ராமா, வேண்டாம்! இந்த விபரீதத்துக்கு என் அகந்தையே காரணம்", ஓடி வந்தார் விஸ்வாமித்திரர். சரி ஆனால், சகுந்தனின் சிரசை சூரிய அஸ்தமனத்துக்குள் விஸ்வாமித்திரரின் பாதத்தில் சேர்ப்பதாக வாக்களித்தாரே ஸ்ரீராமர்! அது என்ன ஆவது? ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின் வாக்கு பொய்ப்பதா? அதற்கும் ஒரு வழி சொன்னார் நாரதர். சகுந்தராஜனை நாரதர் அழைக்க, அவன் வால் கோட்டையிலிருந்து வெளியே வந்து விஸ்வாமித்திரர் பாதங்களில் தன் சிரம் படும்படி நமஸ்கரித்தான். "சகுந்தன் சிரசைத் தன் காலடியில் சேர்க்க வேண்டும்" என்று தானே அவர் கேட்டிருந்தார். ஆக, ஸ்ரீராமரின் வாக்கும் பொய்க்கவில்லை. சகுந்தனின் சிரம் விஸ்வாமித்திரரின் பாதங்களில் சேர்ந்ததால் அஞ்சனாதேவியின் வாக்கும் பொய்க்கவில்லை. ஹனுமனும் எடுத்த கடமையில் இருந்து தவறவில்லை. ஸ்ரீராம நாமத்தின் பெருமையை ஸ்ரீராமரே தெரிந்துகொள்ள நாரதர் நடத்திய நாடகம் இது.

ஸ்ரீராம ஜெயம்!

## இறைவன் காலில் முள்

ஒரு இளைஞனுக்கு கடவுள் நம்பிக்கை இல்லை. அவன் வசிக்கும் தெருவில் துறவி ஒருவர் தினமும் சொற்பொழிவாற்றுவார். இறைவன் இருக்கிறார் என்பதே அவரது பேச்சின் சாரம்சமாக இருக்கும்.

அவரது பேச்சைக்கேட்ட இளைஞன், அவரிடம் சென்று, இறைவனை நேரில் பார்த்தால் அவர் சொல்வதை நம்புவதாகக் கூறினான். இறைவனை நினைந்து தவமிருந்தால், அவன் விரும்பியபடியே நடக்கும் என்றார் துறவி. இளைஞனும் ஏற்றுக்கொண்டு கடுந்தவம் இருந்தான். ஒருநாள் அவனுக்கு சுவாமி காட்சி தந்தார். ஆனாலும், அவனது சந்தேக புத்தி அப்போதும் தீரவில்லை. வந்திருப்பது சுவாமிதானா என ஆய்வு செய்ய ஆரம்பித்தான். அதைப் புரிந்துகொண்ட இறைவன், "நான் உன்னுடனேயே இருக்கிறேன். ஆனால் உன் பார்வைக்குப் புலப்படமாட்டேன்" என்றார். "சுவாமி! நீங்கள் என்னுடன் இருப்பதை எப்படி நான் தெரிந்துகொள்வது?" என்று கேட்டான். அதற்கு இறைவன், "நீ எங்கு சென்றாலும், நான்கு பாத சுவடுகள் தெரியும். அதில் இரண்டு என்னுடையது" என்றார். ஒருநாள் அந்த இளைஞன் சந்தேகத்துடன், நான் வந்த பாதையில் திரும்பிப் பார்த்தான். அங்கு இரண்டு பாதச் சுவடுகள் மட்டும் இருந்தது. தன்னை இறைவன் ஏமாற்றியதாக கருதிய அவன், சத்தமாக, "இங்கே இரண்டு பாதச்சுவடுகள் மட்டும்தானே உள்ளது. இறைவா! நீ என்னுடன் இல்லையா" என்று கத்தினான். அப்போது இறைவன் அவனிடம், "பக்தனே! என்னோடு இருப்பவர்கள் துன்பப்படுவதை பொறுக்க மாட்டேன். சற்றுத் தள்ளிப் பார். அங்கே முள் கிடக்கிறது அல்லவா? எனவே, நான் முன்னே சென்று அந்த முள் உன் காலில் குத்த இருந்ததைத் தடுக்கும் வகையில் என் காலில் குத்திக்கொள்ளச் செய்தேன்" என்றார். இறைவனின் கருணையை உணர்ந்த அவன், அவரிடம் மன்னிப்புக் கோரினான்.

கோபம் கண்களை மறைத்து ஒளியை இருளாக்குகின்றது.

# முருகன் அருள்பெற்ற குமரகுருபர சுவாமிகளின் வரலாறு

S. மனோரஞ்சிதம் அவர்கள்



திருச்செந்தூரிலிருந்து திருநெல்வேலிக்குப் போகும் பாதையில் திருக்கூர் என்னும் கிராமம் உள்ளது. அங்குதான் குமரகுருபரர் திருவவதாரம் செய்தார். அடிகளாரின் தகப்பனாரின் பெயர் சண்முக சிகாமணிக்கவிராயர். தாயாரின் பெயர் சிவகாமி அம்மை. சுவாமிகளின் பெற்றோர் நெடுங்காலம் பிள்ளைப்பேறு இல்லாமையால் திருச்செந்தூர் முருகனை நினைத்து அருந்தவம் இருந்தனர். தவத்தின் பேற்றினால் அவர்களிற்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையை பாராட்டி வளர்த்தனர்.

குழந்தைக்கு ஐந்து வயது வரும்வரை பேச்சுத்திறன் இல்லாதிருந்தது. மகனை ஊமைப்பிள்ளை என நினைத்து திருச்செந்தூர் ஆலயத்திற்குக் கொண்டு சென்றனர். முருகன் கோவிலில் சண்முகவிலாசம் எனப் பெயரிட்ட மண்டபம் ஒன்று உள்ளது. அந்த மண்டபத்தில் அவர்கள் தங்கியிருந்தார்கள். அக்காலத்தில் அடிகளிற்கு முருகனை அகக் கண்ணில் காணும்பேறு கிடைத்தது. ஒரு நாள் இறைவன் அடிகளாரின் கனவில் தோன்றி "நீ யார்" என்று வினாவினார். அப்பொழுது அடிகளார் "அடியேன்" என்று வாய் திறந்து முதல் முதல் கூறினார். முருகன் அடிகளிற்கு சைவ சித்தாந்த உணர்வை உண்டாக்கியதுடன் அவருக்குக் "குருபரன்" என நாமமிட்டு மறைந்தருளினார். அன்று முதல் அடிகளார் தூய தவவேடம் தாங்கி துறவு வாழ்க்கை வாழ்ந்து வந்தார். அக்காலத்தில் திருச்செந்தூர் முருகன்மீது "கந்தர் கலிவெண்பா" என்ற பொருள் மிக்க அரிய பாடல்களைப் பாடினார்.

சிலகாலம் சென்ற பின் தென்நாட்டிலுள்ள பல கோவில்களையும் தரிசித்தார். அவ்வாறு தரிசிக்கும்பொழுது கூடல்மாநகரம் வந்தடைந்தார். அவ்விடத்தை திருமலை நாயக்கர் என்பவர் ஆட்சி புரிந்தார். அங்கு அங்கையற்கண்ணி அம்மையாரின் கோவில் காணப்பட்டது. அவ் அம்மையார்மீது பிள்ளைத்தமிழ் ஒன்று பாடியருளினார். அம்மையார் நாயக்க அரசனின் கனவில் தோன்றி தன்மீது பாடப்பட்ட பாடல்களை அரங்கேற்றம் செய்யுமாறு கேட்டுக் கொண்டதிற்கிணங்க அரசன் அரங்கேற்றத்திற்குரிய ஆயத்தங்களைச் செய்வித்தார். அரங்கேற்றத்தின்போது ஓர் அற்புதம் நடந்தது. அங்கயற்கண்ணி மந்திரியின் மகள் உருவத்தில் வந்து அரசனின் மடியில் வீற்றிருந்தாள். பாடப்பட்ட பாடல்களில் வாகைப் பருவத்தில் உள்ள ஒரு பாடலின்போது அம்மையார் அரசனின் கழுத்திலுள்ள முத்தார மாலையை எடுத்து குருபர சுவாமிகளின் கழுத்தில் போட்டாள். அடிகளார் பல கோவில்களைத் தரிசித்த பின் வடக்கு நோக்கிக் காசிக்குப் புறப்பட்டார். அங்கு பாடிய சகலகலாவல்லி மாலையின் பதவுரையையும் அதிலுள்ள குறிப்பு என்னும் பகுதியில் பாடல்களிலுள்ள விசேடத்தையும் காணலாம்.

வெண்டா மரைக்கன்றி நின்பதம்
தாங்கஎன் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசகம் ஏழு அளித்து

உண்டான் உறங்க ஒழித்தான் பித்
தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே! (1)

பதவுரை:-

"வெண்டாமரைக்கன்றி நின்பதம் தாங்க" அடிகளார் வெண்தாமரைக்கு மட்டுமா உன்னுடைய பாதங்களைத் தாங்கும் இயல்பு இருக்கிறது என்ற கேள்வியைக் கேட்கிறார். ஏனெனில் அவர் கூறுகிறார் "என் வெள்ளை....... தகாது கொலோ" எனது உள்ளமும் வெள்ளைதான் அதே நேரம் குளிர்ந்த தாமரை மலர்போன்ற எனது உள்ளத்திற்கும் தாமரையின் அதே இயல்பு என்று கருதுகிறார். எனவே எனது உள்ளத்தில் இருக்க வேண்டும் என வேண்டுகிறார். "சகம் ஏழும் அளித்து" உண்டான் உறங்க காத்தலைச் செய்யும் அரி உண்டு களைப்புற்று உறங்குகின்றான். அதாவது பிரளய காலத்தில் அரி தன் வயிற்றிலே உயிர்கள் அடங்கி ஓர் ஆலிலையின்மேல் அறிதுயில் கொள்கின்றான். "ஒழித்தான் பித்தாக" உருத்திரன் பித்துப் பிடித்தவன் போல எல்லாவற்றையும் ஒடுக்கி சுடலையில் கூத்தாடி நின்றான். "உண்டாக்கும் வண்ணம் கண்டான்" அயன் மீண்டும் எல்லாவற்றையும் படைக்கிறான். "சுவைகொள் கரும்பே" அந்தப் படைத்தற் தொழிலிற்கு சக்தியாகக் கொண்டு இனிய கரும்பு போல்பவளே. "சகலகலாவல்லியே" எல்லாக் கலை ஞானங்களையும் கொடுக்கும் இறைவியாகவுள்ள தேவியே.

குறிப்பு:-

அடிகளார் ஐந்து வயதிலேயே முருகன் அருள் பெற்று தூய வேடம் பூண்டு, அவ்வயதிலேயே பாடல்களைப் பாடும் ஆற்றல் பெற்று பல தல யாத்திரைகள் செய்தார். தல யாத்திரைகளிற்குச் சிவிகையில் சென்றமையாலும் இளமையில் பாடல்களைப் பாடியதாலும் அவரைக் குட்டி திருஞானசம்பந்தர் என்று அழைத்தனர். சென்ற இடங்கள் எல்லாவற்றிலும் பல தெய்வங்களின் ஆசியைப் பெற்றுள்ளார். தனது இந்து சமய வளர்ச்சிக்கும் மறு சமயத்தவர்களிடம் வாதாடுவதற்கும் எல்லோரையும் வசப்படுத்துவதற்கும் தனது சொற்களிலும் பாடல்களிலும் இனிமை இருப்பதை விரும்பினார். அதனாலேயே சரஸ்வதியை தனக்கு அருளுமாறு வேண்டுகிறார். அவர் விரும்பியபடி அருள் புரிந்துள்ளார் என்பதை அவர் வாழ்க்கையில் அவதானிக்கலாம். எனவே சகலகலாவல்லிப் பாடல்கள் பத்தும் எல்லோரது வாழ்வில் வழிகாட்டியாக அமைவது நல்லதாகும்.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே!
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே!
சகல கலாவல்லியே! (2)

பதவுரை:-

"நாடும் பொருட்சுவை தோய்தர" பலராலும் விரும்பப்படுகின்ற பொருட்சுவையும் சொற்சுவையும் உள்ள "நாற்கவியும் பாடும் பணியில்" நாலு வகையான பாடல்களையும் பாடக்கூடிய திருப்பணியை "பணித்து அருள்வாய்" கொடுத்து அருள் புரிவாயாக. "பங்கயாசனத்தில்" வெண்டாமரையாகிய ஆசனத்தில் "கூடும் பசும் பொற் கொடியே" வீற்றிருக்கும் பசுமையான பொன்மயமான கொடி போன்றவளே "கனதனக்குன்றும்" பருத்த தனங்களாகிய குன்றுகளையும் "ஐம்பாற்காடும்" ஐந்து வகையாக முடிக்கப்படும் காடு போன்ற கூந்தலையும் "சுமக்கும் கரும்பே" சுமக்கின்ற கரும்பு போன்றவளே சகலகலா வல்லியே.

குறிப்பு:-

ஐம்பாற்காடு ஐந்துவகை கூந்தல்களாவன. 1) கொண்டை 2) சுருள் 3) குழல் 4) பனிச்சை ((முடி) 5) அழகம். நாலுவகை கவிகளான ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் பொருட்சுவை என்பது பாடல்களில் அருவரப்பு நிந்தை அமங்கலச் சொற்கள் இல்லாதிருத்தல்.

பொருளணிகள் போன்ற உவமையிருத்தல், நவரசங்கள் இருத்தலும் விரும்பத்தக்கது. அவையாவன வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், சோகம், உருத்திரம், ஹாஸ்யம் (நகை), சமநிலை முதலியன.

சொற்சுவை வழுவின்மை, உச்சரிக்க இலகுவாய் இருத்தல், செவிக்கு இனிமையாய் இருத்தல், பிரசித்தி, சந்தம், சொல்லணி இமைத்தலும் நன்று மோனத்தொடை, எதுகைத் தொடை, வழியெதுகை மடக்கணி முதலியன.

இரண்டாவது பாடலில் தான் பாடப்போகும் நாலுவகைப் பாடலும் எப்படி அமைய வேண்டுமென்று சரஸ்வதியிடம் வேண்டுகிறார்.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள் அமுது
　　ஆர்ந்துன் அருட்கடலில்
குளிக்கும் படிக்கு என்று கூடும்
　　கொலோ உளங்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
　　கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே!
　　சகல கலாவல்லியே! (3)

பதவுரை:-

"அளிக்கும் செழுந்தமிழ்" குரவர்களும் வேறு புலவர்களும் மேன்மையான தமிழைத் தந்துள்ளார்கள். "தெள் அமுது ஆர்த்து" அப்பாடல்களைக் கேட்டும் படித்தும் சிந்தித்ததினால் பெற்ற அமிர்தம் போன்ற கருத்துக்களை உள்வாங்கி "உனது அருள் கடலில்" அருளாகிய பேரின்பக் கடலில் "குளிக்கும் படிக்கு என்று கூடுங்கொலோ" மூழ்கித் திளைத்தற்குரிய வாய்ப்பு என்று கூடும் என்று கேட்கிறார். மிகுதி வரிகளில் சரஸ்வதி புலவர்களின் பாடல்களை எவ்வாறு ரசிக்கின்றார் என்பதைக் கூறுகின்றார்.

"உளங் கொண்டு தெள்ளித் தெளிக்கும்" நுண்ணறிவுடன் ஆராய்ந்து தெளிவு பெற "பனுவல் புலவோர்" நூல்களை இயற்றும் புலவர்கள் "கவிமழை சிந்தக்கண்டு" கவிகளாகிய மழையை பொழியக்கண்டு "களிக்கும் கலாப மயிலே" களிப்புறுகின்ற தோகையையுடைய மயிலைப் போன்றவளே.

குறிப்பு:-

தாயாகிய சக்தியின் அருளாலேயே தந்தையுடன் கூடிப் பேரின்பநிலையை அடையலாம் எனப் பலரும் பாடி உள்ளனர். மாணிக்கவாசகரும் தொண்டரை உள்ளம் கொண்டவர் பேரின்ப வெள்ளத்துட் பெய் கழலே சென்று பேணுமினே எனக் கூறியுள்ளார். இதனையே அடிகளாரும் உன் அருள்கடலில் குளிக்கும்படி என்று கூறுகின்றார்.

தூக்கும் பனுவல் துறை தோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவில் நின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே! (4)

பதவுரை:-

"தூக்கும் பனுவல் துறை தோய்ந்த கல்வியும்" பல நூல்களையும் ஆராய்ந்து பெற்ற கல்வி அறிவும் "சொற்சுவை தோய் வாக்கும்" நான் பேசும்பொழுது பலரையும் கவரக்கூடியதாக சுவையுள்ள சொற்களை கூறக்கூடிய வாக்கையும் "பெருகப் பணித்தருள்வாய்" பெருகக் கூடியதாக பணித்து அருள்வாயாக. "வடநூற் கடலும்" வடக்கில் வாழுகின்றோரின் நூல் அறிவையும் "தேக்கும் செழுந்தமிழ் செல்வமும்" நிறைவானதும் மேன்மையானதும் இன்பத்தையும் கொடுக்கக்கூடிய தமிழ் செல்வத்தையும் "தொண்டர் கருணைக் கடல் போன்றவளே சகலகலா வல்லியே "வடநூற் கடல்" டில்லியில் வாழுகின்ற காலத்தில் அங்குள்ள விரிவடைந்த வடநூற் கல்வியில் பேரறிவை வேண்டுகிறார். துறை தோய்ந்த கல்வி என்றதும் வட நூல்களிலுள்ள சிறந்த அகக் கருத்து புறக்கருத்து போன்ற விசேடங்களையும் கேட்கின்றார். பொதுவாக வேறு மொழியையும் வேறு சமயத்தையும் கவரக்கூடிய வாக்கை சரஸ்வதியிடம் எதிர்பார்த்து வேண்டுதல் செய்கிறார்.

குறிப்பு:-

அடிகளார் முகமது சமய அரசனிடம் டில்லியில் தாம் விரும்பியவாறு பெற்று காசி சென்று இந்து சமயத்தை வளர்த்துள்ளார்.

(தொடரும்...

(தொடர்ச்சி...

# இந்துப் பண்புகள்

திரு இரா. சாந்தன் அவர்கள்

சமயமும் தத்துவமும் இரண்டும் இணையும் சிறப்பு இந்துப் பண்பாட்டிற்கே உரியது. தெய்வங்களின் குணாதிசயங்களையும், குணாதிசயங்களுடன் தொடர்புகொண்ட செயல்களையும் விவரித்துத் தெய்வங்களை நெருங்கி உணரும் வகையில் தெய்வீக நிகழ்ச்சிகளை வருணிக்கும் திறமை இந்து சமயத்துக்கே உண்டு. இத்திறமை இதிகாசங்களாகிய இராமாயணத்திலும், மகாபாரதத்திலும், பதினெட்டுப் புராணங்களிலும் விளங்கக் காணலாம். உண்மையை அநுபவத்திற்குக் கொண்டு வருவதே இந்து தத்துவ விசாரணையின் நோக்கம். சமயக்குரவர்களருளிய தேவார திருவாசகங்களில் இறைவனது தடந்த இலக்கணம் விரவிவரக் காணலாம். அங்கு சமயம் பேசும் நிலையில் தத்துவமும், தத்துவம் பேசும் நிலையில் சமயமும் மாறி மாறி இணைந்து வருவதனால் ஒன்றை ஒன்று வளம்படுத்தி நிற்பதைக் காண்கின்றோம்.

இந்து மதத்திற்குத் தனிச்சிறப்புத் தருபவை புருடார்த்தங்களாகும். இந்துமத நெறி நிற்பவன் ஒவ்வொருவனும் புருடனே. அர்த்தம் என்பது இலட்சியம் எனப் பொருள்பெறும். எனவே புருடார்த்தங்கள் என்பது இந்துநெறி நிற்போருக்கு உரிய இலட்சியங்கள், சமய அடிப்படையில் கூறப்படும் இலட்சியங்கள் வாழ்க்கையைச் சிறப்பானதாகவும், பயனுள்ள தாகவும் அமைக்க வழி வகுக்கும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்கள் இந்துக்களின் இவ்வுலக வாழ்க்கையை மட்டுமல்லாமல், மறுவுலக வாழ்க்கையையும் சிறக்க வைப்பன.

இந்துப் பண்பாட்டிற்குப் பெருமை தருபவர் குரு. அறியாமையை அகற்றி அறிவைப் பெருக்குபவர். அறியாமை என்ற இருளினால் ஒளி மழுங்கிய கண்களை ஞானம் என்ற நிலைக்குமாற்றல் வாய்ந்த கருவியால் திறக்கவல்ல திறமையாளன், எனத் தோத்திரம் குருவை விதந்து கூறுகின்றது.

"அஞ்ஞான திமிராந்தஸ்ய ஞானாஞ்சந சலாகயா
சக்ஷுருன்மீலதம் ஞேயம் தஸ்மை ஸ்ரீ குருவேநம"

எல்லாத் தெய்வங்களும் குருவுள் அடக்கம்.

"குருர் பிரம்மா குருர்விஷ்ணுர் குருர் தேவா மஹேச்வர
குருஸ் ஸக்ஷாத் பரப் பிரமம் தஸ்மை ஸ்ரீகுருவேநம"

எல்லோரும் பின்பற்றி ஒழுகுவதற்குத் தன் ஒழுக்கச் சிறப்பினால் வழிகாட்டியாகத் திகழ்வதனால், இவர் "ஆசாரியர்" எனப்படுவர். அறிவையே கருவியாகக் கொண்டு ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிகாட்டுவதனால் "தேசிகர்" எனப்படுவர். "ஆசார்ய தேவா பவ" என்ற சுருதி வாக்கியம் குருவைத் தெய்வத்தின் நிலையில் வைத்துப் போற்றுகின்றது. இலௌகிக நிலையிலே, அறிவு விளங்கக் கல்வி புகட்டும் ஆசிரியர், "எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" எனக் கௌரவம் பெறுகின்றனர். குரு வழங்கும் அறிவைப் பெறுவது மட்டுமன்றிக் குருவுடன்

வாழ்ந்து பயிலவேண்டிய வாழ்க்கை முறை சிறந்ததென்பதாலே குருகுலவாசம் இந்துக்களின் பாரம்பரிய வழக்கமாக இருந்துவந்தது. குருகுலவாசம் செய்பவன் குருவின் மனநிறைவையும், பிரீதியையும், அன்பையும் பெறும் நோக்குடன் பணிவிடை செய்து தன்னைப் பெரியதொரு பயிற்சிக்குப் பாத்திரமாக்கிக் கொள்ளுகிறான்.

குருவருள் பற்றிச் சித்தாந்த நூல்கள் விரித்துக் கூறுகின்றன. குருவினால் வழங்கப்பட்ட தீட்சை முதலிய சம்ஸ்காரங்களால் தகுதி பெற்றுச் சிவாச்சாரியராகி, ஆலயங்களில் நித்திய நைமித்தியங்கள் இயற்றுபவரை ஆகமங்கள் "குரு" எனப் போற்றும். கோயில் பூசையை நிகழ்த்துவதற்குரிய அதிகாரம் பெற்ற குரு ஒருவரே நிகழ்த்துவதும், ஏனையோர் இப்பூசையை அவ்வப்போது கூடியிருந்து தரிசித்தலும், ஆகம மரபில் ஆலயங்களில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் பாரம்பரியம். இறைவன் வெளிப்பாடு விசேடமாக நிகழும் இடத்தில் இறைவனது சாந்நித்தியத்தினாலீட்புண்டு, யாவரும் தரிசிக்கும் அமைப்பில் ஒருவர் நிகழ்த்தும் பூசை "பரார்த்தபூசை" எனப்படும். பரார்த்தபூசை நிகழ்த்துபவர் ஆத்மார்த்த பூசையைத் தமக்காக நிகழ்த்திய பின்னரே பரார்த்த பூசையை நிகழ்த்தற்குரியவராவர்.

இந்து மதத்தில் குருவுக்கு உன்னதமான இடமுண்டு. இதைத் தெய்வங்களே குருவடிவில் எழுந்தருளி உணர்த்திநிற்கின்றன. தட்சணாமூர்த்தி, முருகன், கண்ணன் ஆகிய தெய்வங்கள் குருவடிவில் பெற்ற திருக்கோலங்களை வழிபடுவது நோக்கற்பாலது. லலிதாசஹஸ்ர நாமத்தில் வரும் "குருமூர்த்தி" என்ற நாமம் அம்பிகையையும் குருவடிவில் காட்டி நிற்கிறது.

பாரத நாடெங்கணும் பரந்த சைவம், தென் பாரதத்தில் இது தனக்கெனவுரிய பெருஞ்சிறப்புடன் விளங்கிவருகின்றது. தென்னாடுடைய சைவத்தின் அமைப்பு பலவகைகளிலும் அகன்று விரிந்து விளங்குகின்றது. இச்சைவ வழிபாட்டு முறையில் காணபத்தியம், சௌரம், சாக்தம், கௌமாரம், வைணவம், சைவம் என ஆறு நெறிகளாக ஒடுங்கி அவைதாமும், சைவம், வைணவம் என இரண்டாகக் குறுகி அமைந்து, ஈற்றில் நெறிகள் யாவுமே சைவத்துள் அடங்கும் நிலை உருவாகியது. தென்னாட்டில் மட்டுமே சைவ வழிபாட்டு நிலையங்களாக விளங்கும் முழுமை பெற்ற சிவாலயங்களில், பரிவாரங் களாக நிறுவப்பட்ட சூரியன், கணபதி, முருகன், சக்தி, விஷ்ணு ஆகிய தெய்வங்களுக்குத் தனித்தனி ஆலயங்கள் இருப்பது சைவம் இப்பிரிவுகளெல்லாவற்றையும் தன்னுளடக்கித் தனிப்பெருஞ் சமயமாக விளங்குவதைக் காட்டுகின்றது.

தென்னாட்டில் பெரிதும் பயிலும் சைவசித்தாந்தத்தில் கைவந்தவன், பாரத நாடெங்கணும் பயின்று வரும் எல்லாத் தத்துவ தரிசனங்களிலும் பயிற்சியுடையவனாகிறான். ஏனெனில் சைவசித்தாந்த உண்மைகள் எடுத்துக் கூறப்படும் பொழுது, அவ் உண்மைகள் நன்கு கிரகிக்கப்பட்டு ஏற்றுக்கொள்வதற்குரியன என்பதைத் தெளிவாக்கும் முறையில் ஏனைய தரிசனங்கள் தரும் கருத்துக்களையும் கொண்ட முடிபுகளையும், முறையாகவும், தெளிவாகவும் விளக்கி, அவற்றைச் சித்தாந்த நோக்கில் தருக்க அடிப்படையில் படிப்படியாக மறுத்துப் பரமத கண்டனஞ் செய்து சைவசித்தாந்தக் கோட்பாட்டினை நிறுவும் பொழுதெல் லாம், சைவசித்தாந்தம் ஏனைய தரிசனங்களின் சிந்தனை முறைகளைத் தெளிவாக எடுத்துப்பேசும் சந்தர்ப்பங்கள் தவிர்க்கமுடியாதவை. ஆகையால் சைவசித்தாந்தம் இந்து தத்துவ சிந்தனைகளின் விளக்க விரிவுரைகளை உள்ளடக்கிய பெருந்தத்துவமாகத் திகழ்ந்து வருகின்றது. இந்நிலையில் சைவசித்தாந்தம் முறையே கற்பவர், தாமாகவே எல்லா இந்து தத்துவ முறைகளைக் கற்பவராகிவிடுவர்.

எந்தத் தெய்வத்தை வழிபடுவோர்க்கும் அருள்சுரப்பவர் மாதொருபாகரே என்ற பரந்த நோக்குடைய சைவதத்துவம், சைவத்துள் ஏனைய தத்துவங்கள் ஒன்றிணையப் பெரும் அனுசரணையாக இருந்து வருகின்றது எனலாம்.

இந்து மதத்தின் அமைப்பினைச் சமயரீதியாகவும், தத்துவ ரீதியாகவும், கலையம்சம் நிறைந்த பண்பாட்டு ரீதியாகவும் நோக்குமிடத்து, அது எல்லா மதங்களையும் தன்னுட் பிரிவுகளாக உள்ளடக்கியும், எல்லாத் தத்துவ சிந்தனைகள் பற்றிய சர்ச்சை நிகழ்ந்த பேரரங்காக விளங்கியும் எல்லாக் கலையம்சங்களையும், பண்பாட்டு அம்சங்களையும் பேணியும், பெருஞ்சிறப்புப் பெற்று விளங்கும் தென்னாட்டுச் சைவத்தின் மறுவடிவமாகத் தெரிகின்றது. இதிலிருந்து இந்து என்றால் சைவம் என்பதும், சைவம் என்றால் இந்து என்பதும் தெளிவாகப் புலனாகின்றது. சைவம் என்ற பெயரைக் காட்டிலும் இந்து என்ற பெயரே சர்வதேச ரீதியில் வழங்குவதால் சைவத்தை “இந்து” என்று வழங்குவது தவிர்க்க முடியாதவாறு உலகப்பிரசித்தி பெற்று விடுகின்றது.

(முற்றும்)

# தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய மகோற்சவ தினங்கள் - 2013

**கொடியேற்றம்**
ஆடி 21ஆம் நாள் 07.08.2013 புதன்கிழமை அதிகாலை 04.00 மணி

**5ஆம் திருவிழா (காலைத் திருவிழா ஆரம்பம்)**
ஆடி 25ஆம் நாள் 10.08.2013 சனிக்கிழமை காலை 06.00 மணி

**10ஆம் திருவிழா (பூங்காவனத் திருவிழா)**
ஆடி 30ஆம் நாள் 15.08.2013 வியாழக்கிழமை காலை 10.00 மணி

**11ஆம் திருவிழா (கைலாசவாகனம்)**
ஆடி 31ஆம் நாள் 16.08.2013 வெள்ளிக்கிழமை காலை 08.00 மணி

**12ஆம் திருவிழா (இந்திர விமானத் திருவிழா)**
ஆவணி 1ஆம் நாள் 17.08.2013 சனிக்கிழமை மாலை 05.30 மணி

**சப்பறத் திருவிழா**
ஆவணி 3ஆம் நாள் 19.08.2013 திங்கட்கிழமை மாலை 06.00 மணி

**தேர்த்திருவிழா**
ஆவணி 4ஆம் நாள் 20.08.2013 செவ்வாய்க்கிழமை காலை 08.00 மணி

**தீர்த்தத் திருவிழா**
ஆவணி 5ஆம் நாள் 21.08.2013 புதன்கிழமை காலை 06.00 மணி
அன்று மாலை 06.00 மணி மௌனத் திருவிழா

# தமிழினத்திற்கு ஏற்பட்ட சாபக்கேட்டினுள் இவை சில:

திரு சிவ சண்முகவடிவேல் அவர்கள்

கழக வெளியீடான திருமந்திரம் மூவாயிரம் (1962) முதற்பகுதியில் கழகப் புலவர் திரு ப. இராமநாதபிள்ளை நூன்முகம் ஒன்று விளக்கமாக வரைந்துள்ளார். விரிவான அந்த விளக்கத்திலிருந்து "தமிழினத்திற்கு ஏற்பட்ட சாபக்கேட்டினுள் இவை சில" என்னும் கட்டுரைக்குப் பொருத்தமான உண்மைகள் சிலவற்றைப் பொறுக்கி எடுத்துத் தொகுத்துத் தந்திருக்கிறோம். அவை சுடரில் தொடரும். அச்சிந்தனைகளைத் தமிழன்பர்கள் படித்துப் பயனடையும் பொருட்டு வெளியிடுகின்றோம்.

மொய்வைத்த வண்டின் செறிசூழன் முரன்ற சந்தின்
மைவைத்த சோலை மலையந்தர வந்த மந்த
மெய்வைத்த காலுந் தருஞால மளந்த மேன்மைத்
தெய்வத் தமிழுந் தருஞ்செவ்வி மணஞ்செ யீரம்

-12- மூர்த்திநாயனார்-3

திசையனைத்தின் பெருமையெலாந் தென்றிசையே வென்றேற
மிசையுலகும் பிறவுலகு மேதினியே தனிவெல்ல
அசைவில் செழுந் தமிழ்வழக்கே யயல்வழக்கின் துறைவெல்ல
இசைமுழுது மெய்யறிவு மிடங்கொள்ளு நிலைபெருக

-12 சம்பந்தர் 24

நாளும் இன்னிசை யால்தமிழ் பரப்பும்
ஞான சம்பந்த னுக்குல கவர்முன்
தாளம் ஈந்தவன் பாடலுக் கிரங்கும்
தன்மை யாளனை என்மனக் கருத்தை
ஆளும் பூதங்கள் பாடநின் றாடும்
அங்க ணன்றனை எண்கணம் இறைஞ்சும்
கோளி லிப்பெருங் கோயிலு ளானைக்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே

-7 நம்பியாரூர் 12/8

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயர்தவஞ் செய்கிலர்
என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே

-10 திருமூலர் 152

வீடு ஞானமும் வேண்டுதி ரேல்விர தங்களால்
வாடின் ஞானமென் னாவது மெந்தை வலஞ்சுழி
நாடி ஞானசம்பந்தன் செந்தமிழ் கொண்டிசை
பாடு ஞானம்வல் லாரடி சேர்வது ஞானமே

-சம்பந்தர் 2- 2/11

நம் தமிழ் தொன்மையும் நன்மையும் வாய்ந்தது. முன்னையும் மென்மையும் முகிழ்த்தது. தனிமையும் இனிமையும் தவழ்வது. "கன்னடம் களிதெலுங்கு முதலிய பல கிளை மொழிகளுக்குத் தாயாகத் திகழ்வது. பல மொழிகளுக்குத் தாயாக நிலவினும் தான் என்றும் கன்னித் தன்மை அழியாது மன்னுவது. ஒரு காலம் உலக முழுவதும் நிலவித் தன்னொளி பரப்பி ஒளிர்ந்தது. தனித்தியங்கும் பேராற்றல் வாய்ந்தது. உயிர்ப்புச் செட்டுமிக்குள்ளது. எம்மொழிக் கண்ணும் இல்லாத பொருளிலக்கணக் கருவூலத்தையுடையது. ஆரியம்போல் உலக வழக்கு அழியாதது. சீரிய பண்பாடு பல நிரம்பியது. ஓரும்தோறும் உவகைதரும் தொல்காப்பியம் திருக்குறள் திருமந்திரம் முதலிய சிறந்த நூல்கள் பலவற்றைத் தன்னகத்துக் கொண்டு மிளிர்வது. இவ்வுண்மைகள் அனைத்தும் ஒருங்கு புலப்படுமாறு சேக்கிழாரடிகள் "ஞாலம் அளந்த மேன்மைத் தமிழ்" (பக்கம்- 11) என்றருளினார்.

அவ்வுண்மை பிற்காலப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளையவர்கள் பெருமொழியாலும் உணரலாம். அது வருமாறு: "சதுமறையா ரியம்வருமுன் சகமுழுது நினதாயின் முதுமொழிநீ அநாதியென மொழிகுவதும் வியப்பாமே"

-மனோன்மணியம் தெய்வவணக்கம் 3

அத்தகைய அருந்தமிழால் திருந்திய மணவினை தெய்வ வழிபாடு பொருந்து நல்லாட்சி முதலிய அனைத்தும் தொன்றுதொட்டுத் தொடர்ந்து சிறப்புற நடந்து வந்துள்ளன. இடையே ஆரியக் கூட்டுறவால் அவை மறையத் தொடங்கின. அங்ஙனம் தொடங்கிய காலத்து ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோரும் தெய்வத் திருவருள் கைவரப் பெற்ற மெய்யுணர்வினரும் உலகுய்யவும் உண்மை என்றும் பொன்றாது நின்று நிலவவும் அவற்றை எதிர்த்து உண்மை நாட்டி வரை செய்துள்ளனர். அப்பெருந் திருவினர் அரும் பாடுபட்டு நிலைநாட்டியவைகளும் சில நூற்றாண்டுகள் சென்றதும் அமைதியாக மறைக்கப்பட்டும் மாற்றப்பட்டும் வழக்கு வீழ்வவாயின. அங்ஙனம் செய்யும் குழுவினரும் அன்றுதொட்டு இன்று காறும் நம்முடன் இருக்கும் நல்லோரேயாவர். நம் அருந் தமிழ்த் தாய் எத்தனையோ இடுக்கண்களைத் தப்பி இன்றும் வளம் குன்றாது நிலைத்திருக்கின்றாள் என்றால் அதற்குக் காரணம் அவள் இயற்கை எழில்நலம் வாய்ந்த தன்மையேயாகும்.

ஒரு சிறிது தோன்றிய இடையூறுகளை ஆன்றோர் அகற்றிய முறையினைச் சுருக்கமாகக் கூறி மேற்செல்வாம். தமிழ்மொழி தனித்த முறையில் பிறமொழிச் சொல்லோ எழுத்தோ கலவாது தூய்மையால் வழங்க வேண்டுமென வரைசெய்துள்ளனர். இன்றியமையாது கலக்க நேரின் தமிழ் ஒலிமுறைக்கு ஏற்றவாறு தமிழாக்கிச் சேர்த்துக் கொள்க என்பதும் எக்காரணத்தை யொட்டியும் பிறமொழி எழுத்துக்களை அறவே சேர்த்தல் கூடாதென்பதுமே அவ்வரையறையாம். அதுவரும் தொல்காப்பிய நூற்பாவான் உணர்க.

(தொடரும்...

# படங்கள் தரும் பதிவுகள்



வாராந்த வெள்ளி நிகழ்வின் போது...





186ஆவது ஞானச்சுடர் மலர் வெளியீட்டுரை, மதிப்பீட்டுரையின்போது...



(தொடர்ச்சி...

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

## 9. விமலன் ரமணன்

### நிவிருத்தி பஞ்சகம்

1. கோ நாம தேச: கா ஜாதி: ப்ரவ்ருத்தி: கா கியத்வய
இத்யாதி வாதோபரதிர் யஸ்ய தஸ்யைவ நிர்வ்ருதி:
நாமம் நாடு, சாதி குலம், தொழிலும் வயதும் எவரிடமுமெவன் வினவியறியானோ, அவனே துய்ப்பன்; அனைவரகத்தும் ஒன்றென நின்றொளிர் "அகம்" அதின் ஆனந்தம்..

2. ஆகச்ச கச்ச மாகச்ச ப்ரவிச க்வநு கச்சஸி
இத்யாதி வாதோ பரதிர்: யஸ்ய தஸ்யைவ நிர்வ்ருதி:
வாவென்றும், போவென்றும், போகாதே யென்றும், உள்ளே செல், எங்கு செல்கின்றனை? என்றெவன் எவரையும் கேட்டறி யானோ, அவனே துய்ப்பன்; அனைவரகத்தும் ஒன்றென நின்றொளிர் அகமதின் ஆனந்தம்.



3. க்வ யாஸ்யஸி யதாயாத: குத ஆயாஸி கோஸி வை
இத்யாதி வாதோபரதிர்: யஸ்ய தஸ்யைவ நிர்வ்ருதி:
யார் மாட்டும் செல்லுமிடமெது. எங்கிருந்து இங்கு வந்துற்றனை, யார் நீ என்றெவன் வினவாதவனோ அவனே துய்ப்பன்; அனைவரகத்தும் ஒன்றென நின்றொளிர் அகமதின் ஆனந்தம்.

4. அஹம் த்வம் ஸோய மந்தர்ஹி பஹிரஸ்தி நவாஸ்திவா
இத்யாதி வாதோபரதிர்: யஸ்ய தஸ்யைவ நிர்வ்ருதி:
நான், நீயது: உள்வெளி: உளதென்றும் இலதென்றும் பேதமறியாதானெவனோ, அவனே துய்ப்பன்; அனைவரகத்தும் ஒன்றென நின்றொளிர் அகமதின் ஆனந்தம்.

5. க்ஞாதாக்ஞாதஸம்: ஸ்வாந்ய பேதசூன்ய: குதோ பிதா
இத்யாதி வாதோபரதிர்: யஸ்ய தஸ்யைவ நிர்வ்ருதி:
அறிந்தோ அறியாதோரிடம் சமபாவன் தான் பிறரென்ற பேதமிலன், பேதமின்மை தானும் இலனெவனோ, அவனே துய்ப்பன், அனைவரகத்தும் ஒன்றென நின்றொளிர். அகமதின் ஆனந்தம்.

நாராயணகுரு நோய்வாய்ப்பட்டதும், பகவான் சொல்லி குஞ்சுசுவாமி போய் அவருடன் இருந்தார். நாராயண குருவும் அவரை உடனே அடையாளம் கண்டுகொண்டு, பகவானை வானளாவப் புகழ்ந்து பேசினார். அவர் சமாதியடையும் வரை அங்கேயே தங்கிவிட்டு வந்த குஞ்சுசுவாமியிடம், அங்கு நடந்த விவரங்களனைத்தையும் அன்புடன் பகவான் மிகக் கவனமாகக் கேட்டுத் தெரிந்துகொண்டது. அவரை மிக உயர்வாகப் பேசிவிட்டு பகவான் கனிந்த குரலில், "அவர் ஒரு புண்ணிய புருஷன். என்ன செய்வது? அவர் இருந்த சூழ்நிலை காரணமாக அப்படி நடக்க நேரிட்டது. மற்றபடி அவர் எல்லாம் அறிந்த பூரணர்" என்றது.

பகவானால் ஒருமையில் அழைக்கப்பட்ட ஒருசில பாக்கியசாலிகளில் T.K. சுந்தரேசய்யரும் ஒருவர். ஆனால் அவருக்கு ஆச்ரமத்தில் T.K.S என்றுதான் பெயர். வேதாந்த நூல்களை நன்கறிந்தவர். தமிழ், ஆங்கிலம், வடமொழி மூன்றிலும் நல்ல பாண்டித்யம் இருந்ததால் பகவானுக்கு மொழி பெயர்ப்பாளராகும் தகுதி அவருக்கு இருந்தது. ஆயினும் அவர் ஆச்ரம அலுவலகத்தில் கடிதப் போக்குவரத்தைக் கவனிப்பதில்தான் நேரம் செலவிட நேர்ந்தது. இதிலும் அவருக்கு யோகம்தான். கடிதங்களை பகவானிடம் காண்பித்து, சிலவற்றுக்குப் பதில் எழுதுவதில், பகவானது குறிப்புக்களைப் பெறும் வாய்ப்புக் கிடைத்தது. என் ஆசிரியர் T.K.S அவர்களிடமிருந்துதான் நான், ஆச்ரம கடிதங்களுக்கு பதில் எழுதும் கலையைக் கற்றுக்கொண்டேன்.

ஒருமுறை T.K.S என்னிடம் கூறியது: "பகவானைத் தரிசனம் செய்யாமலேயே தீவிர பக்தராயிருந்த, இங்கிலாந்தைச் சேர்ந்த ஹாரி டிக்ஸன், ஹ்ருதயம் என்பதன் விளக்கம் என்ன என்றும் அதன் முக்கியம் என்ன என்றும் கேட்டு எழுதியிருந்தார். பகவானைக் கேட்டு, அது சொன்னபடி பதில் எழுதினேன். அந்தக் கடிதம் பகவானால் பார்வையிடப்பட்டு, அதன் சம்மதத்துடன் தபால் செய்யப்பட்டு விட்டது. அதன் சாராம்சம் வருமாறு:

## ஹ்ருதயம்

"எப்படி பிரபஞ்சமெல்லாம் சிருஷ்டியின் நடுவிலிருந்து பிறந்து இருந்து, அதிலிருந்து பெறும் சக்தியாலும் திறனாலும், செயற்படுகிறதோ அதைப்போன்றே பூத உடலின் உள்ளேயும் மையமாக ஒன்றுண்டு. அதிலேதான் நமது இருப்பும் உள்ளது. மனித உடலின் மையம் இந்த சிருஷ்டியின் மையத்தினின்று வேறுபட்டதல்ல. இதுதான் இதயம். சுத்த உணர்வின் இருப்பிடம் சச்சித்தானந்தமாகும்.

நமக்குள் ஒளிரும் ஈசனின் இருப்பிடமெனப்படுவதும் இதுவே. இந்த இதயம், உடலின் இடப்பக்கத்திலிருந்து ரத்த ஓட்டத்தை சீர்படுத்தும் இதயத்தினின்று வேறுபட்டது. பொதுவாக அறியப்படாத இது, மார்பின் வலப்பக்கம் ஒளிர்கின்றது. "நான்" எனும் பொருளின் இருப்பிடமாகவும் "நான்" எனும் அகந்தையான எண்ணத்தின் பிறப்பிடமும் ஒடுங்குமிடமாகவும் உணர்வு ஒளிரும் ஸ்தானமாகவும் இதுவே விளங்குகின்றது.

இதயத்தை சரீரத்தின் ஒரு அங்கத்தில் "அஹம்" என்பதன் இருப்பிடமாகச் சொல்லும் மேற்படி விளக்கத்தால், குழப்பம் ஏற்பட வாய்ப்புண்டு. உடலுக்குள் மையம் கொண்டு விளங்கும் சுத்த உணர்வு, சரீரம் சம்பந்தப்பட்டிருந்தாலும், சாரீரிகமானதல்ல.

"ஹிருதயம்" எனும் சொல் ஹிருத்+ அயம்; இந்த இதயத்தையே தியானத்தின் பயனாக அடைகிறோம். வலப்புறம் ஒளிரும் இதிலிருந்து பிறந்த உணர்வு சுஷும்னா நாடி மூலம் சஹஸ்ராரத்தை அடைந்து, அதிலிருந்து நாடிகள்மூலம் உடலெங்கும் பரவ நாம் புற உலகில் பொருள்களை உணர்கிறோம். இப்புற உணர்வையே உண்மையென்று மாயையின் செயலால் நம்பிய மனிதன் துன்பமடைகின்றான். எல்லாம் எதிலிருந்து பிறந்து விளங்குகின்றனவோ அதுவே ஹ்ருதயம்.

ஆழ்ந்த உறக்கத்திலும், எதிர்பாராத அளவு கடந்த சந்தோஷத்திலும், துக்கம், பயம் அல்லது திருப்தியிலும் நாம் இந்த இதயத்துள் அடங்குவதால்த்தான் புற உணர்வு அற்று விடுகிறது. தியானத்தின் மூலமோ விசார மார்க்கத்திலோ அதே "நான்", "நான்"

என்று பிரகாசிக்கும் இதயத்தைச் சென்றடைந்தால் அதுவேயாகிறோம்.

வந்த வழியே திரும்பிச் சென்று எண்ண அலைகள் ஓய்ந்தொடுங்கினால் அங்கு "நான், நான்" என்ற ஸ்புரண அதிர்வு உண்டாகிறது. இதுவே சுத்த சைதன்ய பிரகாசத்தின் முன்னோடி. ஆனால் இது முடிவு அல்ல. இந்த ஸ்புரணம் உதிக்கும் இடத்தை இடைவிடாது கூர்ந்து நாடினால், எல்லையற்ற அத்வைத (இரண்டற்ற) உணர்வு தானாக, ஒன்றேயாக ஒளிரும்.

மூச்சை அடக்குவதும் மனதை அடக்கி உள்முகமாக திருப்புவதற்கு ஒரு வழி. திரும்பிச் சென்று உள்ளுக்குள் மறையும் எண்ணங்கள் லீனமாகும் இடமே இதயம்."

பக்தர்களிடமிருந்து, பகவானின் கல்யாண குணங்களை விளக்கும் நிகழ்ச்சிகளைக் கேட்கக் கேட்க, மேலும் மேலும் அறிய, அடங்காத ஆவல் உண்டாகிறது. புருஷோத்தமன், தூய விமலன், பகவான் ரமணன்.

(தொடரும்...

## வேலவனே போற்றி

வேலெடுத்த சிவ குருநாதனே
வேதனையால் வாழு மடியார் துயர்
வேரோடு வினையாவும் போக்கும்
வேதஞான வேலவனே போற்றி

வெள்ளி வேலாய் ஒளிரும்
வெற்றிலை வடிவாய்(ப்) பூவரசடியில்
வெற்றியினைத் தந்திடுவாய் கதிர்காம
வெற்பிற்கு பறந்திடும் வேலவனே போற்றி

தேவர் வாழ்வுக்கு அருளியநாயக
தேவசேனாதி பதியாய் ஞானசக்திவேல்
தேசம் தளம்பாமல் அசுரமலங்களைத்
தேய்த்து ஞானமாக்கிய வேலவனே போற்றி

அன்னபூரணி புத்திர குமரா
அன்புடன் அமுதூட்டு செல்வ
அன்னக் கந்தனே அடியார்
அல்லல் போக்கிடு வேலவனே போற்றி.

— க. நித்தியசீதரன் —

# மதமும் மத ஸ்தாபனங்களும்

திரு பெ.பொ. சிவசேகரம் அவர்கள்

எந்த மதமும் மக்கட் சமுதாயத்தின் ஒரு பகுதியினர்க்கு மட்டும் உரியதல்ல. மதம் எல்லார்க்கும் பொதுவானது. பல்வேறு மதங்கள் இவ்வுலகில் இருந்தாலும் எல்லா மதங்களும் எல்லார்க்கும் உரியனவே. மதம் மனித சமுதாயம் முழுவதற்கும் உரிய பொதுச் சொத்து.

கடவுள் ஒருவர் என்பதை ஒப்புக்கொள்ளும் எந்த மதமும் எல்லாருக்கும் பொதுவானவையே. மத விஷயத்தில் கட்சி கட்டினால் கடவுளின் ஏகத்துவத்துக்கு நாம் மாசு உண்டாக்கி விடுபவர்கள் ஆகிவிடுவோம்.

மதத்தால் - அதாவது மத ஸ்தாபனங்களால் மக்கட் சமுதாயம் பிரிவினையை வளர்ப்பது மனித சமுதாய வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுவதாகும். மதம் மனித சமுதாயத்தை ஒன்றுபடுத்த இருக்கிறதே ஒழிய மனித சமுதாயத்தை பிரித்து வைக்கத் தோன்றியதல்ல. நம்மைப் பிரித்து வைக்கும் ஒன்று மதமாக இருக்க முடியாது.

மனித முன்னேற்றத்துக்குத் துணை புரிவதே மதத்தின் வேலை. மனித முன்னேற்றத்தைத் தடுப்பது மதமாக இருக்க முடியாது. மனித சமுதாயத்தைக் கீழ்நிலையிலிருந்து மேனிலைக்குத் தூக்கி உயர்த்தி விடுவதற்காகவே மதங்கள் இருக்கின்றன.

மனிதனிடத்திலுள்ள மிருக இயல்புகள் தலையெடுக்காமற் செய்வதே மதத்தின் நோக்கம். மனிதன் மற்றெல்லாப் பிறவிகளிலும் உயர்ந்தவன் என்பதை இவ்வுலகில் நிலைபெறச் செய்வதே அதன் வேலையாகும். மனிதன் தன் பிறவியின் மேன்மையை அறிய மதம் உதவுகிறது.

மனிதனிடத்துள்ள மிருகத்தன்மையைப் போக்கி தெய்வீகத் தன்மையைச் சுடர்விட்டுப் பிரகாசிக்கச் செய்வதே மதத்தின் உயரிய பணியாகும். மனித சமுதாயத்தைப் பிரித்து வைத்திருப்பவைகள் மனிதனிடத்திலுள்ள மிருக இயல்புகளே.

மதத்தின் இந்த உயரிய நோக்கை மறந்து சில மதஸ்தாபனங்கள் இயங்கி வருவதினால்த்தான் வேறுபாடுகளும் முரண்பாடுகளும் பிளவுகளும் இன்று மனித சமுதாயத்தில் ஏற்படுகின்றன.

மத வாழ்வில் காணப்படும் நடைமுறைக் கிரியைகள் சடங்குகளெல்லாம் மதத்தின் அடிப்படைக் கொள்கையை உணர்ந்து கொள்வதற்குரிய சாதனங்களே. அடிப்படைக் கொள்கைகளில்த்தான் மதத்தின் உயிர்நாடி உள்ளது. மதத்தின் அடிப்படைக் கொள்கைகளை உணர்ந்தோமானால் வேறுபாடுகளுக்கே இடமிராது.

மத ஸ்தாபனங்கள் மதத்தின் அடிப்படை உண்மைகளுக்கு முதலிடம் கொடுத்து அதன்வழி மக்களை நடத்தி வருதல் வேண்டும். உலக சமுதாய ஒற்றுமை மதத்தின் அடிப்படை உண்மைகளிலேயே தங்கியுள்ளன. அவை அருளாளர்கள் கண்ட நிதர்சனங்கள். அவையே வழிகாட்டிகள். அதன்வழி மதமும் மத ஸ்தாபனங்களும் இயங்குதல் வேண்டும்.

மத ஸ்தாபனங்கள் மக்கள் உள்ளத்தில் வேறுபாடற்ற ஓர் உயர்ந்த புனிதமான இடத்தைப் பிடித்துக்கொள்ளல் வேண்டும். ஒரு மதம் இன்னொரு மதத்தைக் குறைத்து

மதிப்பிடுவது ஆண்டவனை அவமதிப்பதாகும்.

மத ஸ்தாபனங்கள் வெறுப்புணர்ச்சிக்கு இடம் அளிக்கக்கூடாது. ஒரு மத ஸ்தாபனம் இன்னொரு மத ஸ்தாபனத்தை வெறுப்போடு பார்க்கக்கூடாது. வெறுப்பில் வாழ்வதும், வெறுப்பை வளர்ப்பதும் மத ஸ்தாபனங்களின் தொழிலல்ல.

மனித சமுதாயத்தின் உயர்ந்த பண்புகள் வெளிப்பட்டு செயல்பட துணைபுரிதல் வேண்டும். புனிதம், தூய்மை, பரந்த மனப்பான்மை, பிறர் நலம் பேணுதல் ஆகிய உயர்ந்த பண்புகளை மனிதனிடத்தில் வெளிப்படுத்தத் துணைபுரியும் உயர் நிலையங்களாக மத ஸ்தாபனங்கள் விளங்குதல் வேண்டும்.

சைவ சமயத்திலுள்ள திருவுருவ வழிபாடு மனிதனிடத்திலுள்ள தெய்வீக சக்தியை வெளிப்படுத்த ஏற்பட்டவையே. மனிதனிடத்திலுள்ள மிருகவியல்புகளின் தொழிற்பாட்டை அடக்கி வாழ்க்கையைச் சீர்படுத்த முடியும்.

விநாயகர் வழிபாடு இப்பெரும் பணியைச் செய்ய வல்லது. மனிதனின் தெய்வாம்சம் விளங்கச் செய்யவல்லது விநாயகர் திருவுருவ வழிபாடு. விநாயகர் அவதாரத்தின் நோக்கமும் அதுவே.



(தொடர்ச்சி...

# திருமந்திரக் கதைகள்

திரு கே.வீ. குணசேகரம் அவர்கள்

## 9. கனவுகள் கற்பனைகள்.

"வாசந்தி பேசி மணம் புணர்ந்து, அப்பதி
நேசந் தெவிட்டி நினைப் பொழிவார் பின்னை
ஆசந்தி மேல்வைத் தமைய அழுதிட்டுப்
பாசந் தீச்சுட்டுப் பலியட்டி னார்களே"

வாழ்க்கை நிலையானது என்று நினைத்து, எதிர்காலத்தில் எப்படி எல்லாம் வாழவேண்டும் என்று திட்டமிட்டு, அது பற்றிக் கற்பனைகள் பல செய்து, இனிமையாகக் கனவு கண்டு இன்புற்றிருப்பவர்கள் தமக்கு இறப்பு வராதென்றும் துன்பங்கள் வராதென்றும் நினைத்திருப்பர். ஆனால் யாரும் எதிர்பாராத வகையில் திடீரென்று காலன் வந்து கவர்ந்து சென்று விடுவான். இறந்ததும் சுற்றத்தவர்கள் கால்களைக் கட்டிப் பாடையில் வைத்துச் சுடலைக்குச் சுமந்து செல்வர்.

அவன் பெருந்தனவந்தன். அவனிடம் பல சொகுசு வாகனங்கள் நின்றன. பல வீடுகள் இருந்தன. பல்லாயிரம் ஏக்கர் நிலத்தில் நெல் விதைப்பான். பல்லாயிரம் ஏக்கர் நிலத்தில் கரும்பும் தென்னையும் உண்டு.

அவனுக்குப் பெண் கொடுக்கப் பல தனவந்தனர்கள் போட்டியிட்டனர். ஊரில் உள்ள தன்னைப் போன்றதொரு பெருந் தனவந்தனின் மகளை அவன் திருமணஞ் செய்தான். திருமணம் கோலாகலமாக நடைபெற்றது.

திருமணம் முடிந்து பத்தாவது மாதம் அவனுக்கு ஓர் அழகான பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தை பிறந்தவுடன் அவன் பெரியதொரு தென்னந்தோப்பொன்றை விலைக்கு வாங்கினான். பெண் குழந்தைக்கென பல இலட்ச ரூபாவை வங்கியில் வைப்பிலிட்டான். பல இலட்ச ரூபாவுக்குத் தங்க நகைகள் வாங்கித் தன் குழந்தைக்கு அணிந்து அழகு பார்த்தான்.

"எனது மகளை என்னைப் போலப் பணக்காரனுக்குத் திருமணம் செய்து கொடுக்க மாட்டேன். ஒரு வைத்தியனுக்குத்தான் திருமணம் செய்து கொடுப்பேன். பணக்காரர்கள் தமக்கு நோய் வந்தால் வைத்தியரைத் தேடிச் செல்கின்றனர். எனது மகளுக்கு பெரும் வைத்தியனொருவனைத் திருமணம் செய்து கொடுத்தால் அவன் எமக்கு வரும் நோய்களுக்கு வைத்தியம் செய்வான். எம்மிடம் போதிய சொத்திருக்கு. எனது ஐந்து தலைமுறைகள் எந்த வேலையும் செய்யாதிருந்து சாப்பிடலாம்" என்று தனது மனைவிக்குக் கூறுவான்.

அவள் சொல்வாள்; "வைத்தியருக்கு எமது மகளைத் திருமணம் செய்து கொடுக்கப் போதியளவு பணம் எம்மிடம் உண்டு. வைத்தியர்கள் பணத்தை எதிர்பார்க்க மாட்டார்கள். பெண் படித்திருக்க வேண்டுமென்று நினைப்பார்கள்"

"அப்படியா? அப்படியானால் எமது மகளையும் வைத்தியருக்குப் படிப்பிப்போம். இரண்டு பேரும் வைத்தியர்களானால் நல்லது தானே. மகளைக் கண்ணுக்குச் சிகிச்சை

செய்யும் வைத்தியராக்குவோம். எனது தந்தையாருக்குக் கண்கள் தெரியாதிருந்தது. கண் வைத்திய நிபுணர் சத்திர சிகிச்சை செய்து கண்களைக் குணப்படுத்தினார். அதனால் எனது மகளைக் கண் வைத்தியராக்குவதுதான் நல்லது"

அவள் பூரிப்புடன் சிரித்தாள். தனது மகள் கண் வைத்தியராகிவிட்டதைப் போன்றதொரு பிரமை அவளது மனதில் உண்டானது; "பட்டணத்தில் ஒரு பெரிய கண் வைத்தியசாலை கட்ட வேண்டும். அங்கு கண் சம்பந்தமான சகல நோய்களுக்கும் வைத்தியம் செய்தல் வேண்டும். இந்த ஊரில் உள்ளவர்கள் மட்டுமன்றி பிற ஊரவர்களும் வந்து சிகிச்சை பெற வேண்டும்" என்றான் அவன். அப்படிக்கூறும்போது அவனது மனதில் தான் கட்டப்போகும் வைத்திய சாலையின் கட்டிடம் தெரிந்தது.

அவன் அன்று மாலை வாகனத்தில் செல்லும்போது எதிரே வந்த வாகனம் ஒன்று அவனது வாகனத்தில் மோதியது. அவன் அந்த இடத்திலேயே மரணமானான். அதைக் கேள்விப்பட்டு அவனது வீட்டுக்கு வந்த ஊரவர்களில் ஆண்கள் கூடியிருந்து கதைத்தனர். பெண்கள் கட்டிப்பிடித்து அழுதனர். அவனது கால்கள் விரிந்து கிடந்தன. ஊரவர் ஒருவர் அவற்றைச் சேலைத் துண்டொன்றினாற் கட்டினார்.

மனைவியும் பெற்றோரும் பெருங்குரலெடுத்து அழுதனர். ஊரவர்களும் நண்பர்களும் சேர்ந்து அழுதனர்.

ஊர் மக்கள் மரங்களின் கீழ்க் குழுமியிருந்து இறந்தவர்களைப் பற்றியும் வாழ்க்கையின் நிலையாமை பற்றியும் பேசினர். சிலர் சுடலை மடத்தைத் திருத்த வேண்டும் என்றனர்.

மாலையானதும் பிரேதத்தைத் பாடையில் வைத்துத் தூக்கிக் கொண்டு சுடலையை நோக்கிச் சென்றனர். பறைமேளம் ஒலிக்க வெடிகள் வெடிக்க பிரேதம் சுடலையை நோக்கிச் சென்றது.

(தொடரும்...

## சந்நிதியான் திருவிழாக் காவச் சிறப்பு

ஆட்டக் காவடி பறவைக் காவடி
அழகு கொஞ்சும் பற்பல காவடி
பாட்டுக் கச்சே ரியோடு கூட்டம்
பாடிப் பாடி சந்நிதி வேலனைத்
தேடித் தேடி ஓடி வருகுது
திருவிழாக் கால அற்புதக் காட்சி
பார்த்துப் பார்த்துப் பரவசம் அடைந்து
பக்தி பூர்வமாய் வேலனை வேண்டுவர்

–வ. யோகானந்தசிவம்–

# தசாவதாரக் கொள்கையும் டார்வினின் பரிணாம வளர்ச்சிக் கோட்பாடும்

திருமதி அ. நிரூபா அவர்கள்




இந்து புராணங்களும் சரி, இதிகாசங்களும் சரி உண்மைத் தத்துவங்கள் மக்கள் மனதில் எளிமையாகப் பதியும் வகையில் கற்பனை கலந்து எழுதப்பட்டவையாகும். இவற்றில் உண்மையான விஞ்ஞான சிந்தனைகள் பலவும் பரவிக் காணப்படுகின்றன. இவை வெளிப்படையாகப் பார்க்கும்போது புரிவதில்லை. ஊன்றி அவதானிக்கும்போது அவற்றின் உண்மைத் தன்மைகளைப் புரிந்துகொள்ள முடியும்.

## பரிணாம வளர்ச்சிக் கொள்கை

உயிரினங்கள் நீரிலிருந்து உற்பத்தியாகி படிப்படியாக வளர்ச்சியடைந்து ஈருடக வாழ்வினதாகி ஊர்வன, நகர்வனவாகி, ஓடி, நடக்கக் கூடிய பிராணிகளாகி, காலக்கிரமத்தில் நவீன மனிதன் பல்வேறு படிநிலைகளினூடாக வளர்ச்சியடைந்தான் என்பதே பரிணாம வளர்ச்சிக்கோட்பாட்டின் அடிநாதமாகும்.

1859இல் முதன்முதலில் சாள்ஸ் டார்வின் உயிரினங்களின் பரிணாம வளர்ச்சித் தத்துவத்தை இனங்களின் உற்பத்தி எனும் நூலின் மூலம் வெளிப்படுத்தினார். இவர் இக்கொள்கையை வெளியிட்ட காலத்தில் பல்வேறு மதங்களும், சமூகங்களும் இப் பரிணாம வளர்ச்சிக் கொள்கையை எதிர்த்து நின்றன. இயற்கைமீது அதீத பற்றுக்கொண்ட டார்வின் பல ஆண்டுகள் கப்பலில் பயணம் செய்து பல்வேறு இடங்களிலும் ஆய்வுகளை மேற்கொண்டார். கலப்ப கோஸ் தீவு, டாஸ்மானியா, மொரிசியஸ் தீவு போன்ற பல இடங்களிற்கும் சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டு பல்வேறு உயிரின சுவடுகளையும், உடல்களையும் எடுத்துவந்து, அவற்றை ஆய்வு செய்து தனது பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டை நிருபித்து மூடநம்பிக்கைக்கு வேட்டு வைத்தார்.

## டார்வின் பரிணாம வளர்ச்சியும் இந்துமதமும்

இந்துக்களால் காலாகாலமாக பின்பற்றப்படும் கொள்கைகளுள் தசாவதாரக் கொள்கை எல்லாவற்றிலும் மேலான கொள்கையாகக் கருதப்படுகிறது. இதன்போது காத்தற் கடவுளாகிய மகாவிஷ்ணுவும் உலகத்தைக் காக்குமுகமாக 10 அவதாரங்களை எடுத்து உலகை இன்றுவரை என்றென்றும் காத்து வருவதை எடுத்துக்காட்டுகிறது.

பத்து அவதாரங்களினதும் படிமுறையானது டார்வின் வகுத்த பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டை சான்றாதாரமாக நிருபிக்கத்தக்க வகையில் அமைந்திருப்பதை நோக்குவோம்.

விஷ்ணுவின் முதல் அவதாரமான மச்ச அவதாரம் (மீன்) உலகின் முதல் உயிர் வாழ்க்கை நீரிலேயே ஆரம்பமானது என்பதனை எடுத்தியம்புகிறது. (இற்றைக்கு 600 மில்லியன் - 400 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்)

இரண்டாவது அவதாரமாக கூர்ம அவதாரம் (ஆமை) உள்ளது. இது ஈருடக வாழி அவதாரமாகும். இது, உயிரினம் நீரிலிருந்து நிலத்துக்கு வாழ வழிவகுத்த செயற்பாட்டின் ஒரு படிநிலையுமாகும். (இற்றைக்கு 100 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்)

மூன்றாவது அவதாரமான வராக அவதாரம் (பன்றி) உள்ளது. இது உயிரினங்கள் முற்றுமுழுதாக நிலத்தில் வாழ இசைவாக்கம் அடைந்த நிலையை எடுத்துக் காட்டுவதாக அமைகிறது. (இற்றைக்கு 60 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்)

நான்காவது அவதாரமான நரசிம்ம அவதாரம் (பாதி மனிதன், பாதி சிங்கம்) இது உடல்ரீதியாக விலங்கு நிலையிலிருந்து மனித நிலைக்கு பரிணாம வளர்ச்சியடைவதை எடுத்துக் காட்டுகிறது. (இற்றைக்கு 30 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்.)

ஐந்தாவது அவதாரமான வாமன அவதாரம் (குள்ள மனித உருவம்) இது ஆயுதமற்ற இரண்டு காலில் நடக்கக்கூடிய புத்திக்கூர்மை ஓரளவு உள்ள உருவமாகும். இது விஞ்ஞான மனித இனப் பாகுபாட்டின்படி கோமோ இரெக்டெஸ் வகையைச் சாரும். (இற்றைக்கு 5 மில்லியன் - 2 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்)

ஆறாவது அவதாரம் பரசுராம அவதாரமாகும். இதன்போது அவர் கையில் கோடரி காணப்படுகிறது. இது வேட்டையுக மனிதனை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

ஏழாவது அவதாரமாகக் கொள்ளப்படுவது இராம அவதாரமாகும். இது மனித மேம்பாட்டின் அடுத்த படிநிலையாக மனிதன் ஆயுதங்களைக் கையாளும் நிலைக்கு உட்பட்டதையும், கிராமங்கள், நகரங்கள் எனும் சமூகக் கட்டுருவாக்கங்கள் உருவாகிய நிலையையும் எடுத்துக் காட்டுகின்றது.

எட்டாவது அவதாரம் கிருஷ்ண அவதாரமாகும். இதன்போது கிருஷ்ணர் பசுக்களுடன் காணப்படுகிறார். இது மிருகங்களை வீட்டுத் தேவைகளுக்காக பயன்படுத்தத் தொடங்கியமையையும், கால்நடை வளர்ப்பை மேற்கொண்டமையையும், அன்று இடம்பெற்ற பொருளாதார மேம்பாட்டையும் எடுத்துக் காட்டுகிறது.

ஒன்பதாவது அவதாரம் பலராம அவதாரம். இதன்போது பலராமர் கலப்பையுடன் காணப்படுகிறார். இது விவசாய முயற்சி மூலம் மனித முன்னேற்றத்தை எடுத்துக் காட்டுவதாக அமைகிறது.

இறுதியாக அதாவது பத்தாவது அவதாரமாக நாம் எதிர்பார்ப்பது கல்கி அவதாரமாகும். இதில் கல்கி பகவான் தேவதாதி எனும் லோகமான குதிரையில் வந்து உலகைத் தன்வயப்படுத்துவார் எனவும் நம்பப்படுகிறது.

இவ்வாறாக பரிணாம வளர்ச்சியின் படிமுறையை சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளதை நாம் இத் தசாவதார இலக்கியங்களை ஆய்வு செய்வதன்மூலமே காணமுடிகிறது. இவ்வாறு பல்வேறு விஞ்ஞான பூர்வமான கொள்கைகளும் விதிகளும், விளக்கங்களும் எமது இந்து இலக்கியங்களிற்குள் புதைந்துள்ளன என்றால் மிகையாகாது.

# "காளமேகம்" பாடல்கள் (தொடர்ச்சி...)



**நடேசனின் உடைமை:**

தில்லை நடராசப் பெருமானின் உடைமைகள் என்னென்னவோ? அவர் உமையை மணந்து எப்படித்தான் குடித்தனம் நடத்துகிறாரோ? கவிஞர் விளக்கந் தருகிறார்.

ஏறு கட்டிய கொட்டி லரங்கமே
யீர ரண்டு முகன்வாயி லாயமே
மாறுகண் ணப்பன் வாய்மடைப் பள்ளியே
வாய்த்த வோடை திருமால்வ தனமே
வீறு சேர்சிறுத் தொண்டனில் லாளுந்தி
வேட்ட நற்கறி காய்க்கின்ற தோட்டமே
நாறு பூம்பொழில் சூழ்தில்லை யம்பல
நாரி பாகற்கு நாடக சாலையே!

ஒரு பாகத்தே பெண்ணினை கொண்டவனாகிய பெருமானுக்கு வாகனமாகிய காளை கட்டியிருக்கும் கொட்டில் திருவரங்கமேயாகும்; வேதம் ஓதும் நான்முகனின் வாயே குதிரை லாயமாகும்; வேடனாகவிருந்து பக்தனாக மாறிய கண்ணப்பனின் திருவாயே மடைப்பள்ளியாகும்; தாமரைப்பூப் பொருந்திய ஓடையானது திருமாலின் திருமுகமேயாகும்; சிறப்புப் பொருந்திய சிறுத்தொண்டரின் மனைவியினுடைய திருவயிறே விரும்பிய நல்ல காய்கறிகள் காய்க்கும் தோட்டமாகும்; மணம் நாறும் பூஞ்சோலைகளையுடைய தில்லையம்பலமே அவனுக்குரிய நாடக சாலையாகும்.

குறிப்பு: முப்புரம் எரித்தபோது திருமால் ரிஷபமாகத் தாங்கினான்; வேதங்கள் அப்போது தேர்க்குதிரைகளாயின. கண்ணப்பர் வாயிற் குதப்பிய ஊனைப் படைத்தார். திருமால் தம் தாமரைக் கண்ணினைத் திருவடியிலே சார்த்தி பெருமானைப் பூசித்தார். சிறுத்தொண்டரின் மனைவியின் வயிற்றில் வளர்ந்த பிள்ளைக் கறியினை விரும்பிப் படைத்தனர். இவற்றை அமைத்துப் பாடிய முறையினைக் கற்று இன்புறுக.

**அன்னம் இறங்காமல்:**

மதுரையிலே ஒரு சமயம் திருவிழா நிகழ்ந்து கொண்டிருந்தது. மீனாட்சியம்மை அன்னவாகனத்தே பவனிவந்து கொண்டிருந்தனள். அதனைக்கண்டு இன்புற்ற கவிஞர் இப்படிப் பாடுகிறார்.

"சிவபெருமான் ஒரு பித்தன். அவன் அப்படிப் பித்தனாயினதால், அவன் தேவி உணவும் உண்ணாது, வீதியிலே சோகத்துடன் இப்படி அலைந்து கொண்டிருக் கிறாளே?" என்று பரிதாபப்படுகிறார் கவிஞர்.

மாயனார் போற்று மதுராபுரிச் சொக்க
நாயனார் பித்தேறினா ரென்றே - நேயமாம்
கன்னன்மொழி யங்கயற்கட் காரிகையாள் ஐயையோ
அன்னமிறங் காமலலை வாள்.

மாயனார் போற்றும் மதுராபுரிச் சொக்க நாயனார் பித்தேறினார் என்றே - மாயனான திருமாலும் துதிக்கின்ற சிறப்புடையவரான மதுராபுரியிற் கோயில் கொண்டிருக்கும் சொக்கநாதப் பெருமான் பித்துப்பிடித்தவர் ஆயினார் என்று கருதியே,

நேயமாம் - அவரிடத்தே அன்புடையவளான, கன்னன்மொழி- கருப்பஞ்சாற்றைப்போல இனிக்கும் பேச்சும், அம் கயல்கண்- அழகிய கயல் போன்ற கண்களும் (உடைய) காரிகையாள்- அழகுடையவளான மீனாட்சி அம்மையானவள், அன்னம் இறங்காமல்- அன்ன வாகனத்தை விட்டிறங்காமல் (சோறு தொண்டையில் இறங்காமல்), அலைவாள்- தெருவிலே பவனி வருவாள் (தெருவீதியிலே அலைவாள்), ஐயோ! (இரங்கற்குறிப்பு) அவள்நிலை இரங்கற் தக்கதே என்பது கருத்து.

**குதிரைக்காரன் மகன்:**

மதுரையிலே காளமேகம் மீனாட்சியம்மையைத் தரிசனம் செய்துகொண்டிருந்தார். அருகிலிருந்த ஒருவர் விநாயக பக்தர். விநாயகரைப் பற்றிப் பாடுமாறு காளமேகத்தைக் கேட்டனர். கவிஞர், விநாயகரைக் "குதிரைக்காரன் மகன்" என்று வேடிக்கையாகக் குறிப்பிட்டு இப்படிப் பாடுகிறார்.

நல்லதொரு புதுமை நாட்டிற்கண் டேனதனைச்
சொல்லவா சொல்லவா சொல்லவா - தொல்லை
மதுரைவிக்கி னேச்சுரனை மாதுமையாள் பெற்றாள்
குதிரை விற்க வந்தவனைக் கூடி.

நல்லதொரு புதுமை நாட்டிற் கண்டேன்- மிகவும் விந்தையான ஓர் அதிசயத்தை இந்த நாட்டிலே கண்டேன்; அதனைச் சொல்லவா- அதனை உங்கட்கு எடுத்துச் சொல்லவா? தொல்லை மதுரை விக்கினேஸ்வரனை- பழமையான மதுரையம்பதியிலே எழுந்தருளி இருக்கும் விக்கினேஸ்வரப் பெருமானை, மாது உமையாள்- உமை அம்மையானவள், குதிரை விற்க வந்தவனைக் கூடிப் பெற்றாள்- (மாணிக்க வாசகரின் பொருட்டு) குதிரை வியாபாரியாக வந்த ஒருவனைக் (சிவபெருமானைக்) கூடியே பெற்றெடுத்தனள்.

"குதிரைக்காரன் மகன் இந்த விநாயகன்" என்று கூறி அந்த விநாயக பக்தரைத் திகைக்கச் செய்கிறார் கவிஞர்.

**அக்காளை ஏறினார்!:**

சிவபெருமான் ரிஷப வாகனத்தார். அவரை அவமானமாகப் பேசுவதுபோல ஆனால் போற்றுதற் பொருளோடு இப்படிக் காளமேகம் பாடுகிறார். ஆலவாய் சொக்கனைக் குறித்தது இது. "பெண்களைச் சுமந்த பித்தன்; தங்கைக்கு மேலே நெருப்பை இட்டவன்; அக்காளைச் சேர்ந்தவன்" என வருவனவெல்லாம் முறையாகச் சிறந்த பொருள் தருவனவே என்பதனை உய்த்தறிக!

கண்டீரோ பெண்காள் கடம்பவனத் தீசனார்
பெண்டிர் தலைசுமந்த பித்தனார் - எண்டிசைக்கும்
மிக்கான தங்கைக்கு மேலே நெருப்பையிட்டார்
அக்காளை ஏறினா ராம்.

கடம்பவனத்து ஈசனார்- கடம்பவனத்து ஈசனாராகிய ஆலவாய் பெருமான், பெண்டிர் தமை சுமந்த பித்தனார்- தலையிற் கங்கையையும் இடப்பாகத்தே மலைமகளையும் என

PUBLIC LIBRARY
JAFFNA



இரு பெண்களைச் சதா சுமந்து கொண்டேயிருக்கின்ற ஒரு பைத்தியக்காரர், அவர் என்ன செய்தார் தெரியுமா? எண்டிசைக்கும் மிக்கான தம் கைக்கு மேலே நெருப்பை இட்டார்- எட்டுத் திசைகளிலும் மிகுதியாகப் புகழ்பெற்ற தம்முடைய கையின் மேலே அக்கினியை வைத்துக் கொண்டிருப்பவர்; அக் காளை ஏறினாராம்- புகழ்பெற்ற அந்த நந்தியெனும் காளை மாட்டின் மீதும் ஏறி வருபவர்; கண்டீரோ பெண்காள்- பெண்களே! அவரை நீங்களும் பார்த்தீர்களோ?

"பெண்களைச் சுமந்த அந்தக் காமப்பித்தன் தங்கையையும் அக்காளையும் கெடுத்தானே!" என்று நிந்தித்தது போல்வரும் வாசகத்து மெய்ப்பொருளை அறிந்து உண்மை காண்க.

**சிற்றிடைச்சி காண்!:**

சிதம்பரத்திலே திருக்கோயில்கொண்டு வீற்றிருக்கும் அம்மையின் பெயர் சிவகாமி. அம்மையைப் போற்ற நினைக்கிறார் காளமேகம். அவள் குடும்பம் இடையர் குடும்பம் என்கிறார். அவள் ஒரு சிற்றிடைச்சி; மாட்டுக்காரக் கோனாருடைய தங்கை; ஆட்டுக் கோனானுக்குப் பெண்டாட்டியானாள்; குட்டி மறிக்க ஒரு கோட்டானையும் பெற்றாள்; இப்படிச் சொல்வது போலத் தோன்றுவது பாடல்.

மாட்டுக்கோன் தங்கை மதுரைவிட்டுத் தில்லைநகர்
ஆட்டுக்கோ னுக்குப்பெண் டாயினாள் - கேட்டிலையோ
குட்டி மறிக்கவொரு கோட்டானையும் பெற்றாள்
கட்டிமணிச் சிற்றிடைச்சி காண்.

கேட்டிலையோ!- பெண்ணே! நீ இதனையும் கேட்டதில்லையோ! மாட்டுக்கோன் தங்கை- மாடுகளைக் காப்போனாக விளங்கிய கோபாலனின் தங்கையான இந்தப் பார்வதிதேவி; மதுரைவிட்டு- தான் பிறந்த மதுராபுரியை விட்டு வந்து; தில்லை நகர் ஆட்டுக்கோனுக்குப் பெண்டு ஆயினாள்- தில்லைச் சிதம்பரத்தே நடனமாடுகின்ற, ஆட்டுக்கோனுக்கு (கூத்தப்பெருமானுக்கு) மனைவியானாள்; கட்டி மணிச்சிற்றிடைச்சி- மேகலை கட்டிய அழகிய இடைச்சியடி அவள்; (சிறிதான இடையினை உடையவள் அவள்) குட்டி மறிக்க- ஆட்டுக்குட்டிகளை மறிப்பதற்காக (நம் தலையிலே குட்டிக்கொண்டு வணங்குமாறு) ஒரு கோட்டு ஆனையையும் பெற்றாள்- கோட்டானைப் போன்ற ஒரு பிள்ளையையும் (ஒற்றைக் கொம்பனான ஆனைமுகனையும்) பெற்றாளடி!

சிற்றிடைச்சி- கன்னிப்பருவத்து இடைப்பெண் எனவும், குட்டி மறித்தல்- ஆட்டுக் குட்டிகளை மறித்தல் எனவும், ஆட்டுக்கோன்- ஆட்டிடையன் எனவும் பொருள்படுதலை அறிக; அவற்றின் உண்மையான பொருளையும் அறிந்து இன்புறுக. இது நிந்தாஸ்துதி.

**கண்ணன் வேறா?:**

"திருமாலே பரம்பொருள்; சிவன் பரம்பொருள் அல்லன்" என்று சிலர் கூறினர். இது மதுரையை அடுத்த அழகர் கோயிலிலே ஒரு சமயம் நிகழ்ந்தது. இதனைக் கேட்ட காளமேகம் நகைத்துக் கொண்டார். "அவர் வேறு, இவர் வேறா" இப்படி மெய்ப்பொருள் விளங்கப் பாடினார்.

கடம்பவனச் சொக்கருக்குக்
கண்ணன்றான் வேறா
இடம் பெரிய கண் ணொன்றை
ஈந்தான் - உடம்பதனில்
செம்பாதி யானான் சுமக்க எருதானான்
அம்பானான் தேவியுமா னான்.

கடம்பவனமாகிய மதுரையிலே கோயில் கொண்டிருக்கின்ற சொக்கநாதப் பெருமானுக்குக் கண்ணன்தான் அயலானவன் ஒருவனோ? ஒருபோதும் இல்லையே! விசாலமான பெரிய ஒரு கண்ணினையே முன்பு காணிக்கையாகக் கொடுத்த அன்பன் ஆயிற்றே! அன்றியும் எம்பெருமானின் திருமேனியிற் சரிபாதியாக விளங்கும் அம்மையும் அவனாயிற்றே! அவரைச் சுமக்கக்கருதி அந்நாளில் காளையாக ஆகியவனும் அவனல்லவா! திரிபுர தகன காலத்தே எய்தற்குரிய அம்பாகி உதவியவனும் அத்திருமாலே அல்லனோ! மற்று எம்பெருமானின் தேவியும் அவனேயன்றோ!

திருமாலைச் சிவனுடைய சக்தியாகவே கொள்வது சைவமரபு. அதனை, இப்படி விளக்கியுள்ளார் கவிஞர்- சிவவிஷ்ணு பேதங்களைக் கடந்த செறிவான பாடல் இது.

**புதுமை! புதுமை!!:**

மதுரையிலே மீனாட்சியம்மையைத் தரிசித்த காளமேகம், ஆனந்த பரவசமாகத் துதிக்கும் சிலேடைப் பாடல் இது.

விள்ளப் புதுமையொன் றுண்டால வாயுளின் மேவுதென்னன்
பிள்ளைக் கொருகுலை மூன்றே குரும்பை பிடித்ததிலே
கொள்ளிக் கணன்றிட்டி யாலோர் குரும்பை குறைந்தமிர்தம்
உள்ளிற் பொதிந்த விரண்டிள நீக்கச் சுறைந்ததுவே.

நேர்பொருள்: சொல்வதற்கு புதுமை ஒன்றுண்டு. அது திருவாலவாயிடத்தே இருக்கும் தென்னம்பிள்ளையிடத்தே, ஒரு குலையில் மூன்றே குரும்பைகள் பிடித்தன; அவற்றுள் கொள்ளிக் கண்ணனின் திருஷ்டியாலே ஒன்று குறைந்து போயிற்று; அமுதம் உள்ளே பொதிந்ததாகப் பிற இரண்டும் இளநீராகிக் கைப்பு உடையதாகவும் ஆயிற்று.

அம்மையைக் குறித்த பொருள்: திருவாலவாயினிடத்தே சொல்வதற்குத் தக்கதான புதுமையொன்று உள்ளது. தென்னவனான மலையத்துவசனுடைய பெண்ணாகிய தடாதகைக்கு ஒரு வரிசையிலே மூன்று தனங்கள் முகிழ்ந்தன. அவற்றுள் ஒன்று நெருப்புக் கண்ணனான சோமசுந்தரப்பிரானின் பார்வைபட்டு மறைந்தது. உயிர்களைக் காப்பாற்றும் அமுதம் உள்ளிடத்தே பொதிந்த இரண்டு இளநீர்கள் போன்ற தனங்களும், பின்கச்சுக்குள்ளே அடங்குவனவுமாயின.

தடாதகைப் பிராட்டிக்கு மூன்று தனங்கள் எழுந்தன என்பதும், சிவபிரானைக் கண்டதும் ஒன்று மறைந்ததென திருவிளையாடற் புராணத்திலே கூறப்பட்டிருக்கிறது. அதனையே இப்படிச் சுவையாகப் பாடுகிறார் கவிஞர்.

(தொடரும்...




## காட்டிலே தேர்தல்

இன்னும் சில நாட்களில் புதுவருடம் பிறக்க இருந்தது. வருடாவருடம் விலங்குகள், பறவைகள் அனைத்தும் ஒன்றுகூடி பாட்டு, நடனம் என புது வருடத்தை சிறப்பாகக் கொண்டாடி வரவேற்பது வழக்கம். எப்போதும் இந்நிகழ்ச்சிகள் சிங்கராஜாவின் தலைமையில் தான் நடைபெறும். அந்த சமயத்தில் சிங்கராஜா அனைத்து விலங்குகளிடமும் அன்பாக நடந்து கொள்ளும்.

பிறக்க இருந்த புது வருடத்தைக் கொண்டாடுவதற்காக ஒரு கூட்டத்தை சிங்கராஜா கூட்டினார். சிங்கராஜா கூட்டும் கூட்டமென்றால் அனைத்து விலங்குகளும் பறவைகளும் கட்டாயம் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும். அப்படி ஒரு வழக்கம் அந்தக் காட்டில் நீண்ட நாட்களாக இருந்து வந்தது.



அனைத்து விலங்குகளும் பறவைகளும் வழக்கமாகக் கூடும் இடத்தில் கூடி ராஜாவின் வருகைக்காக காத்து இருந்தன. சிறிது நேரத்தில் ராஜா அங்கு வந்தார்.

"நண்பர்களே, இந்த வருடமும் நாம் புதுவருடக் கொண்டாட்டங்களை வழக்கம்போல சிறப்பாக நடத்த வேண்டும். இந்த வருடம் நான் தலைமை தாங்கப் போவதில்லை. உங்களில் ஒருவர்தான் தலைமைப் பொறுப்பை ஏற்று விழாவைச் சிறப்பாக நடத்த வேண்டும். நான் ஒரு விருந்தினராக இந்த விழாவில் கலந்து கொள்வேன்."

இதைக் கேட்ட விலங்குகளும் பறவைகளும் மனதிற்குள் மகிழ்ச்சி அடைந்தன. ஆனால், அதை யாரும் வெளியே காட்டிக்கொள்ளவில்லை. நரி முன்வந்து பேச ஆரம்பித்தது. "எங்கள் ராஜாவே, வழக்கப்படி நீங்கள் தலைமை ஏற்று நடத்தினால்த்தான் விழா சிறப்பாக இருக்கும். ஆகையால் இந்த முறையும் நீங்களே தலைமை ஏற்று விழாவை நடத்த வேண்டும்." மற்ற

விலங்குகளும் பறவைகளும் "ஆமாம்" என்றன. ஆனால் சிங்கராஜா விழாவிற்கு தலைமை ஏற்க மறுத்துவிட்டார்.

"நான் சொன்னால் சொன்னதுதான். என் கட்டளையை ஏற்று நீங்கள் செயற்பட வேண்டும். உங்களுக்குள் கூடிப் பேசி விழாவை நடத்த ஒரு தலைவரை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். அந்தத் தலைவர் சொல்வதைக் கேட்டு கீழ்ப்படிந்து மற்றவர்கள் நடந்துகொள்ள வேண்டும்." சிங்கராஜா பதிலுக்குக் காத்திராமல் புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

சிங்கராஜா புறப்பட்டுச் சென்றதும் பறவைகளும் விலங்குகளும் தங்களுக்குள் கூடிப் பேசிக்கொண்டன. விழாவிற்கு யாரைத் தலைவராக தேர்ந்தெடுப்பது என்று தங்களுக்குள் விவாதித்துக் கொண்டன. ஆனால், அவைகளால் ஒரு முடிவிற்கு வரமுடியவில்லை.

கூட்டத்தை அடுத்த நாள் தள்ளி வைப்பது என்று முடிவு செய்யப்பட்டது. அடுத்த நாள் காலை இதே இடத்தில் அனைவரும் கூட வேண்டும் என்றும் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

அடுத்தநாள் காலை அனைத்து விலங்குகளும் பறவைகளும் அந்த இடத்தில் கூடின. முதலில் யானை பேச ஆரம்பித்தது. "உருவத்தில் நானே பெரியவன். எனவே உங்கள் அனைவருக்கும் தலைமைப் பொறுப்பை ஏற்கக்கூடிய முழுத் தகுதி எனக்கு இருக்கிறது. இந்தப் புதுவருட விழாவை நானே தலைமை ஏற்று சிறப்பாக நடத்துவேன்". யானை சொன்னதை யாரும் ஏற்பதாய் இல்லை.



"உருவத்தில் மட்டும் பெரியதாய் இருந்தால் போதுமா? விழாவை தலைமை ஏற்று நடத்துவது என்பது சாதாரண விஷயம் அல்ல. வீரத்தில் நானே சிறந்தவன். எனவே நான்தான் விழாவை தலைமை ஏற்று நடத்துவேன்." புலி இப்படிச் சொன்னதை சிறுத்தை மறுத்தது.

"நீ வீரத்தில் மட்டும்தான் சிறந்தவன். வீரத்திலும், வேகமாய் பாய்வதிலும் நானே சிறந்தவன். எனவே நான்தான் இந்த விழாவை தலைமை ஏற்று நடத்துவேன்". சிறுத்தை சொன்னதை பறவைகள் ஏற்றுக்கொள்ளவில்லை.

"பறவைகளின் இனத்தில் நானே பெரியவன். வேகமாய் ஓடக்கூடிய ஆற்றலும் பெற்றவன். இவ்விழாவை தலைமை ஏற்று நடத்த என்னைவிட சிறப்பான ஆள் யாரும் இந்தக் காட்டில் இல்லை". என நெருப்புக்கோழி சொன்னதைக் கேட்ட நரி சிரித்தது.

"எதுக்காக சிரிக்கிறே?" "சிரிக்காம வேற என்ன செய்யறது. நீ பறவைதானே?" "ஆமாம் அதிலென்ன சந்தேகம்?" "சரி, அப்ப வானத்துல பறந்து காட்டேன் பார்க்கலாம்." இதைக் கேட்ட நெருப்புக் கோழிக்கு அவமானமாகப் போய்விட்டது.

"என்ன பேசாம இருக்கே? உன்னால பறக்க முடியாதுதானே. அப்புறம் எதுக்கு தலைமைப் பொறுப்புக்கு ஆசைப்படறே? தந்திரத்தில் நான்தான் சிறந்தவன். இந்தக் காட்டுல எல்லாரும் என்கிட்டே கொஞ்சம் பயந்துதான் பழகுவாங்க. உங்க எல்லாருக்கும் தெரியும்.

நம்ம ராஜா கூட அப்பப்ப என்கிட்டே யோசனை கேட்பாரு. அதனால எனக்கு தலைமைப் பொறுப்பை ஏற்க முழுத்தகுதியும் இருக்கு.'' இதை சில விலங்குகளும் பறவைகளும் மறுத்தன.

"எதுக்காக இப்படி வீணா சண்டை போட்டுக்கிறீங்க. உங்களுக்கும் வேணாம், அவங்களுக்கும் வேணாம். ரெண்டு பேருக்கும் பொதுவா நானே தலைவரா இருந்திட்டுப் போறேனே.'' ஆமை இப்படிச் சொன்னதைக் கேட்டு அனைவரும் சிரித்தனர்.

"ஆசையைப் பாரு ஆசையை. பேசாம கிட.'' நரி ஆமையைக் கேலி செய்தது. இதை எதிர்பார்க்காத ஆமை பேசாமல் ஒதுங்கி விட்டது. கடைசிவரை யாரும் யாரையும் தலைவராக ஏற்றுக்கொள்ளவில்லை. அன்று மாலை வரை கூடிப்பேசி அனைவரும் பிரிந்து போனார்கள். அடுத்தநாள் காலை சிங்கராஜா கூட்டத்தைக் கூட்டினார். அனைத்து விலங்குகளும் பறவைகளும் வழக்கம்போல கூடின. சிங்கராஜா பேச ஆரம்பித்தார்.

"விழாவை நடத்த தலைவரைத் தேர்ந்தெடுத்திட்டீங்களா?'' அனைவரும் மௌனமாய் நின்றனர். "என்ன கேட்டுக்கிட்டிருக்கேன், யாருமே பேசாம அமைதியா நின்னுக்கிட்டிருக் கீங்களே.'' சிங்கராஜா போட்ட அதட்டலில் அனைவரும் பயந்து போயினர். ஆனால் முயல் மட்டும் தைரியமாய் முன்னே வந்து நின்று பேச ஆரம்பித்தது.

"ராஜாவே, தலைவரைத் தேர்ந்தெடுக்கவில்லை.'' "ஏன்?'' இவங்களுக்குள்ளே யார் பெரியவங்கற பிரச்சினை வந்திடுச்சி. அதனால யாரும் யாரையும் தலைவரா ஏத்துக்கலை. யார் தலைவர்னு நீங்களே சொல்லிவிடுங்களேன். உங்க பேச்சை எதிர்க்க யாருக்கும் துணிச்சல் வராது. நீங்க யாரைச் சொல்கிறீர்களோ அவங்களை நாங்க தலைவரா ஏத்துக்கறோம்.'' சிங்கராஜா யோசித்தார்.

"சரி, உங்களாலே தலைவரை தேர்ந்தெடுக்க முடியலை. காரணம் உங்களுக்குள்ளே நான்தான் பெரியவன் அப்படிங்கிற எண்ணம் இருக்கு. அதனால் நானே விழாவை நடத்த ஒரு தலைவரை தேர்வு செய்யப்போகிறேன். சரியா?'' அனைவரும் சரியென்று தலையசைத்தனர். புதுவருட விழாவை தலைமை தாங்கி நடத்த நான் முயலை உங்களோட தலைவரா அறிவிக்கிறேன்.'' இதைக்கேட்ட அனைவரும் திகைத்தனர். முயலுக்கு ஆச்சரியமாக இருந்தது. "ராஜா சொல்றேன்னு நீங்க தப்பா நினைக்கக் கூடாது. நானோ ரொம்ப சின்னவன். என்னைவிட பெரியவங்க எல்லாம் இங்க இருக்கிறப்ப, என்னைப்போய் தலைவரா தேர்ந்தெடுத்திருக்கீங்களே.'' முயல் தன்னடக்கத்துடன் சொன்னது.

"நீ உருவத்திலே சின்னவனா இருக்கலாம். ஆனா, புத்திசாலித்தனத்திலே நீ பெரியவன். விலங்கினங்களை துன்புறுத்திக்கொண்டிருந்த என்னோட முன்னோர் ஒருத்தரை உன்னோட முன்னோர் சாமர்த்தியமாக கிணத்துல தள்ளி விலங்கினத்தை ஆபத்திலே இருந்து காப்பாத்தின கதையை நான் கேட்டிருக்கிறேன். இப்ப கூட நீதானே தைரியமாக முன்னே வந்து நடந்ததைச் சொன்னே. தலைவரா இருக்க உருவம் முக்கியமில்லை. தைரியமும் சமயோசித மூளையும்தான் முக்கியம். அதனால இந்த வருஷம் நீதான் தலைவரா இருந்து விழாவைக் கொண்டாடணும்.''

இதைக்கேட்ட முயல் மகிழ்ச்சி அடைந்தது. அந்த வருடம் புதுவருட விழா முயலின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. தான்தான் பெரியவன் என்று ஆணவம் பிடித்து தலைமைப் பதவிக்கு அலைந்த விலங்குகளும் பறவைகளும் முயலின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடந்து நல்லதொரு பாடத்தை கற்றுக்கொண்டன.

(தொடர்ச்சி...

# சைவத் திருக்கோயிற் கிரியைநெறி

உயர்திரு கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள்

சிவாலயங்களில் நிகழுங் கிரியைகள் மூன்று வகையின. இவை நித்தியக் கிரியைகள், நைமித்தியக் கிரியைகள், காமியக் கிரியைகள் எனப் பெயர் பெறுவன. தினந்தோறும் நிகழுங் கிரியைகள் நித்தியக் கிரியைகள். நிமித்தம் என்பது காரணம். எனவே, நைமித்தியக் கிரியைகள் காரணங்கொண்டு நிகழ்வன. பெறுபேற்றினை அவாவிச் செய்யப்படுங் கிரியைகள் காமியக் கிரியைகள் எனப்படும்.

## நித்தியக் கிரியைகள்

திருக்கோவில்களில் நிகழும் கிரியை, பூசை என மக்களிடையே பெரிதும் வழங்குகின்றது. இது நித்திய நைமித்தியக் கிரியைகளில் அவ்வந் நிலைக்கு ஏற்றவாறு விரிந்தும் சுருங்கியும் அமையும். பூசை ஒவ்வொரு நாளும் அவ்வக் கோவில்களுக்கமைந்த வசதிகளுக்கும் மரபுக்கும் ஏற்பப் பலமுறை நிகழும். திருச்செந்தூர் முதலிய கோவில்களில் பன்னிரு வேளைகள் பூசை நிகழ்வதைக் காண்கின்றோம். பெரும்பாலான கோவில்களில் நிகழ்வது ஆறுகாலப் பூசையாகும். இதைக் கிரியை நூல்கள் ஷட்கால பூசை எனக் குறிப்பிடுகின்றன. உஷக்கால பூசை, காலைச்சந்தி பூசை, உச்சிக்காலப் பூசை, சாயரட்சை பூசை, இரண்டாங்கால பூசை, அர்த்தயாம பூசை எனப் பெயர்கள் பெற்று இவை மக்களிடையே வழங்குகின்றன. உஷக்காலப் பூசை அதி விடியற்காலையில் நிகழும். சூரியோதயத்தின் பின் நிகழ்வது காலைச்சந்திப் பூசை. நடுப்பகலில் நிகழ்வது மூன்றாவதான உச்சிக்காலப் பூசையாகும். சாயரட்சைப் பூசை மாலை வேளையில் நிகழும். இருள்படர்ந்து இரவானதும் நிகழ்வது இரண்டாங்காலப் பூசை. இது இவ்வரிசையில் ஐந்தாவதாக நிகழும் பூசையாகும். தினந்தோறும் இறுதியில் நிகழும் பூசை அர்த்தசாமப் பூசை எனப்படும். இவ்வாறு ஆறுகாலங்கள் பூசை நிகழ்த்த வசதியற்ற இடங்களில் சிலகாலப் பூசைகள் மட்டும் நிகழ்வதுண்டு. காலை, உச்சி, மாலை ஆகிய மூவேளை பூசை நிகழும் கோவில்கள் சில. காலையிலும் மாலையிலும் ஆக இருவேளை மட்டும் பூசை நிகழும் கோவில்களுமுண்டு.

### உஷக்கால பூசை:

இப்பூசை சூரியன் உதிக்க மூன்றே முக்கால் நாழிகைக்கு முன் நிகழ்வது. அர்ச்சகர் தமது நித்திய அனுட்டானங்களை முடித்து வெண்பட்டு, உத்தரீயம், விபூதி, உருத்திராக்கம் முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்ட மேனியினராய்க் கோவிலை அடைவர். வாசலில் கால்களையும் கைகளையுங் கழுவிய பின்னர் வலமாக கோவிலினுள்ளே நுழைந்து திருநந்தி தேவரையும் பின்னர் துவார பாலகரையும் பிரார்த்தித்து அவரனுமதியுடன் உட்சென்று புறமண்டபத்தையடைவார். அங்கு சகளீகரணம் செய்து சாமான்யார்க்கியம் கூட்டி அதன் நீரினால் தன் மீதும் புறத்தே உள்ள பொருள்கள் மீதும் தெளித்து அனைத்தையும் தூய்மையாக்குவார். இதைத் தொடர்ந்து பூதசுத்தி, அந்தர்யாகம், சிவோகம்பாவனை ஆகிய மூன்று கிரியைகள் நிகழும்.

இவ்வாறு சிவபூசைக்குத் தகுதிவாய்ந்தவராகத் தன்னை ஆக்கிக்கொண்டு அருச்சகர் முதலில் பைரவரின் ஆலயம் புகுவர். பைரவரை முறைப்படி அர்ச்சித்ததும் முதனாளிரவு ஒப்புவிக்கப்பட்டு இதுகாறும் அவர் வயமிருக்கும் பள்ளியறைத் திறவுகோலினை அங்குச முத்திரையினால் எடுத்து, மங்கள வாத்தியங்கள் மெல்லிசை இசைக்கப் பள்ளியறைக்குச் செல்வர். மங்கள இசையினால் இறைவனைக் களிப்பித்து, பள்ளி எழுந்தருளும் வண்ணம் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களினால் வெளியே நின்றவாறு இறைவனிடம் வேண்டுகோள் விடுத்தபின், துவார பூசை செய்து, கதவினைத் திறப்பதற்குக் காலகாலனது அநுமதிவேண்டி, காதில் திறவுகோல் நுழைவதற்கென உரிய துவாரத்தைப் பிந்து வடிவினதாகத் தியானித்து, பின் அருச்சித்து, நாத வடிவினதான திறவுகோலை சிவசக்தி மந்திரத்தை உச்சரித்து உட்புகுத்தித் திறப்பர். பவித்திரமாக்கப்பட்ட அர்க்கிய நீரினால் உட்புறம் முழுவதையுந் தெளித்து, நிர்மாலியங்களைந்து, இறைவனுக்குப் பாத்தியம், அர்க்கியம், ஆசமநீயம் ஆகியவற்றை முறையே கொடுத்து வெளியே எழுந்தருளும் வண்ணம் அவனைப் பிரார்த்தித்து நிற்பர். சக்தியை அங்கே இருக்க விடுத்து இறைவனை மட்டுஞ் சிவிகையில் ஏற்றிக் கோவிலை வலமாக எழுந்தருளச் செய்து மூலலிங்கத்தின் சந்நிதியை அடைவர். அங்கு இறைவன் முன் பூவைக் கையிலெடுத்து பள்ளியறையிலிருந்து கருவறைக்கு எழுந்தருளி வந்திருக்கும் மூர்த்தியில் இருக்கும் இறைவனை உற்பவ முத்திரையால் மூலலிங்கத்திற் சேர்ப்பர். பின் ஸ்தானசுத்தி செய்து பூமாதேவியை வழிபட்டு திரவியசித்தியையும் முடித்து கணேசனையும், இலிங்கப் பெருமானையும், தேவியையும், திருமஞ்சன நீரால் முழுகுவித்து முறைப்படி உஷக்கால பூசையினை முடிப்பர்.

### காலைச்சந்தி பூசை:

இது காலைப்பூசை எனப்படும். சூரியனுதித்த பின் ஏழரை நாழிகைக்கு முன் இப்பூசை நிகழ்தல் வேண்டும். இங்கு முதலில் சூரியபூசை இடம்பெறும். இதையடுத்துக் கணேசனது பூசையும் துவார பூசையும் நிகழும். பின்னர் மூலலிங்கத்திற்கும், பரிவாரத் தெய்வங்களனைத்திற்கும் பூசை விரிவாக நிகழ்த்தப்படும். ஆவாகனம், அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை, அருச்சனை, தோத்திரம், நிருத்தியம் முதலியன பூசையின் அம்சங்கள். இவ்வம்சங்கள், நித்தியக் கிரியைகளிலும் நிரந்தரமான அம்சங்களாக விளங்கு வதனால் இவை தனியே சிறு விளக்கவுரைகளுடன் பின்னர் கூறப்படும். பூசையின் முடிவில் நித்தியாக்கினிகார்யமும் நித்தியபலியும் நடைபெறும்.

### உச்சிக்காலப் பூசை:

இப்பூசை நடுப்பகலில் நிகழ்வது. அருச்சகர் நித்திய கடன்களை முடித்து, விக்கிநேசுவர பூசை, புண்ணியாகம், பூத சுத்தி, அந்தர்யஜனம், தியானம், ஸ்தானசுத்தி, விசேஷார்க்கியம், திரவியசோதனை, மந்திரசோதனை, சிவோகம்பாவனை முதலிய பூர்வாங்கக் கிரியைகளை முடித்து, ஸ்நபன பூசை செய்து, துவாரபாலகர்களை வணங்கி, உட்புகுந்து மூலவரை ஆதாரசக்தி முதல் மானசாபிஷேகம் வரை முறையாக அருச்சித்து, எண்ணெய்க் காப்பு முதல் ஸ்நபனம் ஈறாக அபிஷேகித்து, வஸ்திரம் மாலை முதலியவற்றால் அலங்கரித்து, ஆவரணபூசைவரையும் முடித்து தூபதீப ஆராதனைகளைச் செய்வர். பின்னர் நடேசர் சக்தியீறாகப் பூசை நிகழும். அபிஷேக அலங்காரம் முதலியன ஒவ்வொரு

பூசையிலும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பூசை நிறைவேறியதும் சிவநிர் மாலியத்தைச் சண்டேசுவரரிடம் சமர்ப்பிப்பதுடன் உச்சிக்காலப் பூசை முடிவுறும்.

## சாயரட்சை பூசை:

இப்பூசைக்கு சாயங்காலப் பூசை, பிரதோஷகால பூசை என்னும் பெயர்களுமுண்டு. பிரதோசம் இரவின் முகம் என நிகண்டு கூறும். எனவே, இரவின் தொடக்கமான மாலைப் பொழுதே பிரதோஷம் என்று பெறப்படுகின்றது. இப்பூசை சூரியன் அஸ்தமிப்பதற்கு மூன்றே முக்கால் நாழிகைக்கு முன் நிகழ வேண்டியது. கணேசனையும், நடேசரையும், மூலவரையும் சிவபெருமானுடைய ஏனைய மூர்த்தி பேதங்களையும், அம்மையையும் உரியவாறு பூசித்தல் இப்பூசையின் முக்கிய அம்சமாகும். இங்கும் முன்னர் கூறியவாறு ஆவாகனம், அபிஷேகம் முதலியன நிகழ்வது கவனிக்கத்தக்கது.

## இரண்டாங்கால பூசை:

இது மேலே கூறப்பட்ட சாயங்கால பூசையிலிருந்து மூன்றே முக்கால் நாழிகையில் நிகழவேண்டியது. நீராடித் தோய்த்துலர்ந்த ஆடை புனைந்து அருச்சகர், முதலில் விக்கினேஸ்வரனைப் பூசித்தபின் இறைவன் சந்நிதியை அடைந்து துவார பூசை நிகழ்த்துவர். சிவோகம் பாவனை செய்து, ஐந்து ஆவரணங்களுடன் இறைவனைப் பூசித்து, வியோமவியாபி மந்திரத்தினால் எண்ணெய் முதல் ஸ்நபனம் வரை அபிஷேகித்து, ஆடையணிகலன்களால் அலங்கரித்து, பூமாலை புனைவித்து, தூபதீபம் முதலிய நிகழ்த்தி, தீபாராதனை அருச்சனை முடித்து, அவனை நிருத்தியம், கீதம், வாத்தியம் முதலியவற்றால் சந்தோஷிப்பித்தல் வேண்டும். பின்னர் தேவி முதலிய பரிவார தெய்வங்களுக்குப் பூசை நிகழும். நித்தியாக்கினி கார்யம், நித்தியோத்சவம், நித்தியபலி முதலியன இப்பூசையின் இறுதி அம்சங்கள். இரண்டாங்கால பூசை சண்டிகேசுவரரைப் பூசிப்பதுடன் நிறைவுறும்.

## அர்த்தயாம பூசை:

இரண்டாங்கால பூசையிலிருந்து மூன்றே முக்கால் நாழிகைவரை அர்த்தயாமப் பூசைக்கு உரிய காலம். இங்கு துவார பூசை கிடையாது. வாசனை கலந்த எண்ணெய் முதலிய அபிஷேகப் பொருள்களால் இலிங்கத்திற்கு அபிஷேகஞ் செய்து, பூமாலை முதலியவற்றால் அலங்கரித்து, பஞ்சாவரண பூசையுட்பட முடித்து, அப்பமீறான நிவேதனப் பொருள்களை நிவேதித்துப் பூசித்து, பின் வலமாகப் பள்ளியறையை அடைந்தபின் பள்ளியறையில் மூர்த்தியை எழுந்தருளச் செய்து, அங்கு பட்டுமெத்தை தலையணைகளுடன் கூடிய பல நுண்ணிய வேலைப்பாடமைந்த பொற்கட்டிலின் மீது தேவியின் வலப்பக்கத்தில் இறைவனை எழுந்தருளச் செய்து இருவரையும் பூசித்தல் வேண்டும். நறுமணங்கமழும் மலர் மாலைகளால் இருவரையும் அலங்கரித்துப் பாற்பாயாசமும், வடை முதலியவற்றை இறைவனுக்கும் இறைவிக்கும் நிவேதித்த பின்னர் ஏலம், இலங்கமம், சாதிபத்திரி, பச்சைக் கற்பூரம், பாக்கு முதலியவற்றுடன் இளந்தளிர் வெற்றிலைகளைச் சமர்ப்பித்துத் திரையிட்டு அருச்சகர் வெளியேறுவர். பின்னர் இறைவனைப் பள்ளிகொள்ளும்படி வேண்டி நிற்கும் பாடல்களைப் பாடச் செய்து தாழ்ப்பாழிடுவர். இதன்பின் சண்டேசுவரர் பூசை இடம்பெறும். இது முடிந்ததும், பைரவரது ஆலயத்தையடைந்து முறைப்படி பூசை நிகழ்த்தி திறவுகோலை அவர் முன்னிலையில் வைத்துக் கோவில் பாதுகாப்பை அவரிடம் ஒப்புவிப்பர்.

(தொடரும்...

# அதிசயம் ஆனால் உண்மை

–செ. மோகனதாஸ் சுவாமிகள்–

ஒருசில வருடங்களாக வருட நடுப்பகுதியில் யான் மேற்கொண்டுவரும் வட இந்திய தலயாத்திரையானது 05.06.2013 புதன்கிழமை ஆரம்பமானது. எமது யாத்திரைக் குழுவினருக்கு முகவராகச் செயற்பட்டுவரும் கலாநிதி ஸ்ரீரங்கநாதன் அவர்கள் இம்முறை இடம்பெற்ற யாத்திரை பற்றி எம்மோடு ஆலோசித்தபோது, "வட இந்தியாவில் உள்ள கேதாரநாத், பத்திரிநாத் ஆகிய தலங்களைத் தவிர்த்து வேறு இடங்களில் உள்ள தலங்களைப் பார்ப்போம்" என்று கூறினேன். நான்கு தடவை இத்தலங்களுக்கு சென்றிருந்ததோடு என் மனதிலும் இம்முறை அங்கே போவதை தவிர்ப்போம் என்ற எண்ணமே அவ்வாறு கூறியதற் குரிய காரணமாகும்.



அத்தலங்களுக்குப் பதிலாக குஜராத் மாநிலத்தில் அகமதாபாத்தில் கடலால் மூடப்படும் பஞ்சலிங்கம் கொண்ட ஒரு இடம் உள்ளது என்று ஒரு பத்திரிகை வாயிலாக நான் அறிந்திருந்தேன். அதைப்போய் தரிசிப்போம். அதற்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டால் நாம் போகலாம் என்று கூறினேன். அதைக் கேட்ட ஸ்ரீரங்கநாதன் அவர்கள் தானும் அந்த இடம்பற்றி கேள்விப்பட்டிருக்கின்றேன். ஒரு காலமும் நான் போகவில்லை. இவ்விடயம் சம்பந்தமாக இந்தியாவில் எமது யாத்திரைகளுக்கு வழிகாட்டியாக வரும் திரு முத்துக்குமார் என்பவரோடு தொடர்பு கொண்டு போவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்வோம் என்று கூறினார்.

அதன் பிரகாரம் குறிப்பிட்ட திகதியில் எமது குழுவினரின் வட இந்திய தல யாத்திரை ஆரம்பமாகியது. எமது குழுவில் 12பேர் இடம்பெற்றிருந்தார்கள். என்னைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் இந்த யாத்திரைக்குப் புதியவர்களாகையால் எல்லோரும் ஆர்வத்துடன் வந்திருந்தார்கள். ஸ்ரீரங்கநாதன் அட்டவணைப்படுத்திய பிரகாரம் தலங்களைத் தரிசித்து 20.06.2013 வியாழக்கிழமை காசியில் இருந்து பிற்பகல் 2.30 மணியளவில் குஜராத் மாநிலத்துக்கு புகையிரதம் மூலம் 22.06.2013 அதிகாலை 4மணி அளவில் அகமதாபாத்தை அடைந்து விடுதியில் தங்கினோம். எனக்கு, மற்றவர்களைவிட எப்போது கடலால் சூழப்பட்ட பஞ்சலிங்கம் உள்ள இடத்தை அடைவோம் என்றிருந்தது. எல்லோருக்கும் புதிய இடம். தமிழ்நாட்டில் இருந்து வழிகாட்டியாக வருகை தந்த திரு முத்துக்குமாருக்கும் இது புது அனுபவம். அவரும் இதற்கு முன் ஒரு காலமும் இந்த இடத்திற்கு வரவில்லை.

அகமதாபாத்தில் போய் அங்கே பலரிடம் விசாரித்தபோதும் ஒருவரும் சரியான முறையில் தகவல் தரவில்லை. ஒரு வழியாக 23.06.2013 ஞாயிற்றுக்கிழமை 7மணியளவில் அகமதாபாத்திலிருந்து அத்தலம் அமைந்த பாவ்நகருக்குப் புறப்பட்டு சுமார் 10.30 மணியளவில்

அந்நகரை அடைந்தோம். அது ஒரு சுமாரான நகரமாகவும் ஜனத்தொகை கூடியதுமாகவும் இருந்தது. பின் அங்கிருந்து 30 கி.மீ தூரத்திலிருக்கும் கோலியாட் என்ற கிராமத்தை 11.30 மணியளவில் அடைந்தோம். அங்கேதான் கடலால் சூழப்பட்ட பஞ்சலிங்கம் இருக்கின்றது.

நேரமோ 11.30ஐத் தாண்டி விட்டது. எனக்கும் என்னோடு வந்த குழுவினருக்கும் ஒரே ஆவல். மதியம் 1 மணியளவில் கடல் பெருகி லிங்கங்களை மூடிவிடும் என்பதனால் கூடியவரை லிங்கங்களை தரிசிக்க வேண்டும் என்ற பேரவா உந்த வேகமாக கடற்கரையை நாம் அடைந்தோம். அப்போதுதான் நாம் கண்ட காட்சி எம்மைப் பிரமிக்க வைத்தது. கரையில் இருந்து சுமார் 1 கி.மீற்றர் தூரத்தில் ஒரு கூம்பு வடிவமான கோபுரம் போன்ற அமைப்பு காணப்பட்டது. அந்த இடத்தில்த்தான் பஞ்சலிங்கம் இருக்கின்றது. அவ்விடத்தை கடல் மூடும் பொழுது அடையாளப்படுத்தும் முகமாக அக்கூம்பை அமைத்திருக்கிறார்கள். அதனைப் பார்வையிட்டபடியே கடற்கரையை இருபுறமும் பார்வையிட்டோம். இரு புறமும் 1 கிலோமீற்றர் தூரம் வரையும் கடலினுள் அமைந்திருக்கும் பஞ்சலிங்கம் இருந்த இடம் வரையும் கடல்நீர் பின்வாங்கி வெறும் தரையாகக் காட்சியளித்தது.

அதனைப் பார்வையிட்டபடியே கடலுக்குள் பஞ்சலிங்கம் உள்ள இடத்தை நோக்கி நடக்க ஆரம்பிக்கின்றோம். மனதுக்குள் பயம். நாம் போய் வருவதற்குள் கடல்நீர் வந்து விட்டால் என்ன செய்வது என்ற எண்ணம் எல்லோர் மனதில் இருந்தாலும் கூடியவரை கடல்நீர் வருவதற்குள் கரையை அடையவேண்டும் என்று அவசர அவசரமாக பஞ்சலிங்கம் இருக்கும் குன்றை அடைந்தோம். குன்றில் பெரிதும் சிறிதுமாக ஐந்து லிங்கங்கள்



மூலைக்கொன்றாக இருந்தது. வருகின்ற அடியார்கள் கரையில் உள்ள கடைகளில் இருந்து இளநீர், தேங்காய் என்பன கொண்டுவந்து லிங்கங்களுக்கு அருகே இருந்து பூசை வழிபாடுகளை மேற்கொள்ளும் பூசகர்களின் கையில் கொடுத்து அவர்கள்மூலம் தமது பூசை வழிபாடுகளை மேற்கொண்டார்கள். நேரம் நெருங்க பூசகர்கள்கூட கரைக்கு செல்வதற்குரிய வகையில் அவசரமாகச் செயற்பட்டார்கள். நானும் என்னோடு வந்தவர்களில் ஒரு சிலரும் கடலில் நீராடி லிங்கவழிபாடு செய்தோம். உண்மையில் அவ்வழிபாடானது எமக்குக் கிடைத்த ஒரு பெரிய அபூர்வமான வரப்பிரசாதம் என்றே கூறவேண்டும்.

நாம் வழிபாடு செய்து கொண்டிருக்கும்போது அவ்விடத்தில் இருந்த பூசகர்கள் எல்லோரும் கரையை நோக்கி நடந்துபோவதைக் காணக்கூடியதாக இருந்தது. நாமும் கரையை நோக்கி நடக்க ஆரம்பிக்கும்போது கடல்நீரானது கரையை நோக்கிப் பெருக்கெடுக்க ஆரம்பித்தது. போகும்போது வெறுந் தரையாக இருந்த பகுதி எல்லாம் கடல்நீர் நிரம்புவதைக் கண்டு நாமும் இறைவன் பெருமையை நினைந்தபடி அவசரமாகக் கரையேறினோம். கரையை சமீபிக்கும் பொழுது எமது முழந்தாளிற்குமேல் கடல்நீர் உயர்ந்துவிட்டது. கரைக்கு வந்து ஒருசில நிமிடங்களில் பஞ்சலிங்கம் இருந்த குன்று உட்பட வெறுந்தரையாகக் காணப்பட்ட கடற்கரையெங்கும் கடல்நீர் பெருகி பஞ்சலிங்கம் இருந்த குன்று தெரியாது நீரில் மூழ்கிவிட்டது. அடையாளப்படுத்தப்பட்ட கூம்பின் அரைப்பகுதிக்கு மேல் கடல்நீர் மட்டம் உயர்ந்துவிட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. தினசரி காலையில் கடல் பின்வாங்கி பஞ்சலிங்கங்கள் தெரிவதும், நண்பகலில் மீண்டும் கடல்பெருகி பஞ்சலிங்கங்களை மூடிக்கொள்வதும் வழமையாக நடைபெறும் அபூர்வ நிகழ்வாகும். இவ்விடம் பிரபல்ய மடையாத காரணத்தால் வருகை புரியும் அடியார்கள் மிகக் குறைவே. ஆனாலும் லிங்க தரிசனம் செய்யவரும் அடியார்கள் வசதி கருதி பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து கடற்கரை வரை சிறு சிறு வர்த்தக நிலையங்களைக் காணக்கூடியதாகவுள்ளது.

எமது யாத்திரை முகவராக செயற்பட்டுவரும் திரு ஸ்ரீரெங்கநாதன் அவர்களும் எம்மோடு வருகை தந்திருந்தார். உடல் நலமில்லாத நிலையிலும் தானும் பஞ்சலிங்க தரிசனம் செய்ய வேண்டும் என்ற குறிக்கோளுடன் கடலுக்குள் வந்து லிங்க தரிசனம் செய்தது அவர் பெற்ற பெரும்பேறே என்று கூறலாம். அதை அவரே தன் வாயால் கண் கலங்க கூறியது இன்றும் எம்மனதில் பதிந்துள்ளது. கடல்நீர் பெருகியதைக் கண்ணாரப் பார்த்த எமக்கு, அன்று இரவே சென்னை திரும்புவதற்குரிய ஒழுங்குகள் இருந்தபடியால், மறுநாட்காலை கடல்நீர் பின்வாங்குவதை மீண்டும் காணமுடியாமற் போனது பெரும் மனக்குறையாகவே உள்ளது. முன்பு நாம் பார்க்காத இடமாக இருந்தமையினால் பிரயாண நேர அட்டவணையைச் சீராக ஒழுங்குபடுத்தவும் முடியாமற் போனது. ஆனாலும் 2014ஆம் ஆண்டு பங்குனி மாதமளவில் திரும்பவும் இவ்விடத்திற்கு வருகை தந்து இரண்டு மூன்று தினங்கள் தங்கி முழுமையாக பஞ்சலிங்க தரிசனம் செய்வோம் என்று எல்லோரும் தீர்மானம் எடுத்துக் கொண்டோம். அதற்கும் அந்த இறைவன் வழி ஏற்படுத்திக் கொடுப்பான் என்ற நம்பிக்கையுடன் யாத்திரையை நிறைவு செய்தோம்.

**பி.கு:** **இம்முறை மேற்கொண்ட வட இந்திய யாத்திரையின் விரிவான விளக்கம் நூல் வடிவாக "வட இந்திய ஸ்தல யாத்திரை - பாகம் II" என விரைவில் படங்களுடன் வெளிவரும் என்பதையும் அறியத் தருகிறோம்.**

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| இ. கனகசபாநாதன் | கனடா | 3000. 00 |
| சு. தேவராஜா | அல்வாய் | 1000. 00 |
| பார்த்தீபன் பிறேமலதா | கோண்டாவில் | 5000. 00 |
| Dr நிமலன் குடும்பம் | கோண்டாவில் | 5000. 00 |
| க. லோகச்சந்திரன் | தெகிவளை | 2000. 00 |
| அருந்தவராஜா செல்லப்பா | அச்சுவேலி தெற்கு (கனடா) | 15000. 00 |
| திரு சுரேஸ்குமார் குடும்பம் | லண்டன் | 5000. 00 |
| திரு அன்னரத்தினம் | லண்டன் | 1000. 00 |
| வி. ரூபன் வருணன் | அச்சுவேலி | 10000. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| திருமதி கலைவாணி கஜேன் | கனடா | 15000. 00 |
| திருமதி தங்கராஜா பொன்னுத்துரை | கனடா | 1000. 00 |
| செல்வி S. ஸ்ரீரங்கநாயகி | தாதி உத்தியோகத்தர் யாழ்ப்பாணம் | 5000. 00 |
| ஆ. இராசரெத்தினம் | நீர்வேலி (லண்டன்) | 1மூடை அரிசி, பருப்பு |
| Dr சீனிவாசகம் | கொழும்பு | 1000. 00 |
| S. நடேசன் | வெள்ளவத்தை | 5000. 00 |
| இ. கமலச்சந்திரன் | காரைநகர் | 500. 00 |
| க. இராசரத்தினம் | காரைநகர் | 500. 00 |
| நா. கனகராஜா | உயிலங்குளம் | 30கிலோ அரிசி |
| கு. தியாகராஜசர்மா (நீர்வைமணி) | நீர்வேலி | 1மூடை அரிசி, 1500. 00 |
| பரணீதரன் காயத்திரி | சங்கானை | 1000. 00 |
| செ. சின்னத்துரை | நெல்லியடி | 1000. 00 |
| பொ. வியாகேஸ் | உடுப்பிட்டி | 1000. 00 |
| திரு குமாரசாமி ஆசிரியர் குடும்பம் | பத்தமேனி | 2000. 00 |
| இ. சுபாஸ்கரன் | லண்டன் | 5000. 00 |
| சி. இராமலிங்கம் | கோப்பாய் தெற்கு | 2000. 00 |
| திரு ஆனந்தசர்மா | ஆவரங்கால் | 4000 00 |
| பாபு வெதுப்பகம் | புன்னாலைக்கட்டுவன் | 2மூடை அரிசி |
| இ. தர்ஷிகா | சிறுப்பிட்டி | 2000. 00 |
| A. திலகேஸ்வரி | கனடா | 5000. 00 |

| | | |
|---|---|---|
| J. சந்திரப்பிரகாசம் | பருத்தித்துறை | 3000. 00 |
| க. சந்திரபாலன் | உரும்பராய் | 500. 00 |
| ஸ்ரீரங்கன் சிவக்கொழுந்து | வயாவிளான் (கனடா) | 10000. 00 |
| ஈசன் பிரவீனா<br>ஈசன் கிசானா | சங்கானை | 5000. 00 |
| சு. ஜெயந்தன் | சாவகச்சேரி | 5000. 00 |
| சாந்தகுமார் கௌசி தோப்பு | அச்சுவேலி | 2000. 00 |
| திருமதி நல்லம்மா வடிவேலு (மு. வடிவேலு | ஞாபகார்த்தம்) லண்டன் | 10000. 00 |
| N. தனசிங்கநாதன் | கொழும்பு | 10000. 00 |
| தர்மநாதன் சுரேகா | மாலிசந்தி | 500. 00 |
| நித்தியானந்தன் நந்தினி | யாழ்ப்பாணம் | 500. 00 |
| திரு சண்முகநாதன் குடும்பம் | இணுவில் | 7000. 00 |
| பாலச்சந்திரன் யாதவன் | அவுஸ்திரேலியா | 6250. 00 |
| து. ராசலிங்கம் | உடுவில் மேற்கு | 4000. 00 |
| அ. தனபாலசிங்கம் | உரும்பராய் கிழக்கு | 6000. 00 |
| T. கணேசநாதன் | குப்பிளான் | 2000. 00 |
| திரு தயாபரன் | நீர்வேலி | 1000. 00 |
| செல்வி க. கதிர்காமலிங்கம் | கொக்குவில் மேற்கு | 2000. 00 |
| பிரதீபன் அனுஷியா | லண்டன் | 10000. 00 |
| S. இராமலிங்கம் | கோப்பாய் தெற்கு | 2000. 00 |
| மீனாவதி சர்வானந்தசிவம் (கனடா) | வல்வெட்டித்துறை | 7000. 00 |
| ஐ. தங்கேஸ்வரன் குடும்பம் | கொழும்பு | 10000. 00 |
| திரு செல்வரத்தினம் | சுண்ணாகம் | 1000. 00 |
| செ. பத்மநாதன் | மட்டுவில் (சுவிஸ்) | 5000. 00 |
| சி. உருத்திரலிங்கம் | சுவிஸ் | 5000. 00 |
| தவராஜா கிருத்திகா | குப்பிளான் 1மூடை அரிசி | 3000. 00 |
| கா. சந்திரகுமார் | சங்கானை | 1மூடை அரிசி |
| சி. சத்தியகுமார் | கந்தர்மடம் | 2000. 00 |
| ஓர் அடியார் | மல்லாகம் | 5000. 00 |
| க. சபாபதிப்பிள்ளை | பருத்தித்துறை | 6000. 00 |
| சி. இராமகிருஸ்ணன் ஆசிரியர்மூலம் க. முத்துக்குமாரு | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| ஐங்கரன் மேனகா | மருதங்கேணி | 2110. 00 |
| இ. தர்ஷிகா | சிறுப்பிட்டி | 2000. 00 |
| சிவமகாலிங்கம் குமரேசன் | துன்னாலை மேற்கு | 10000. 00 |
| அருணாசலம் அம்மாப்பிள்ளை | சிறுப்பிட்டி | 1000. 00 |
| திருமதி க. லோகநாயகி | மானிப்பாய் | 6000. 00 |

(தொடரும்...

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய உற்சவத்தையொட்டி ஆச்சிரம மண்டபத்தில் 07.08.2013 புதன்கிழமை தொடக்கம் 19.08.2013 திங்கட்கிழமை வரையான விசேட நிகழ்வுகள்

**07.08.2013 புதன்கிழமை (1+2ம் திருவிழா) முற்பகல் 10.00 மணியளவில்**

விடயம் :- "பஜனை"

வழங்குபவர் :- வடபிராந்திய சாயி சமித்தி அன்பர்கள்

**08.08.2013 வியாழக்கிழமை (3ம் திருவிழா) முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "ஆலய வழிபாடும் மகோற்சவமும்"

வழங்குபவர் :- ஜாக்கிரத் சைதன்ய சுவாமி அவர்கள்

**09.08.2013 வெள்ளிக்கிழமை (4ம் திருவிழா) முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "முருகன் பெருமை"

வழங்குபவர் :- திரு J. சந்திரபிரகாஷ் அவர்கள்

(ஆசிரியர் மத்திய கல்லூரி)

**10.08.2013 சனிக்கிழமை (5ம் திருவிழா) முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "ஆன்மீகம் காட்டும் அறிவியல்"

வழங்குபவர் :- சைவப்புலவர் திரு செ. பரமேஸ்வரன் அவர்கள்

(அதிபர்)

**11.08.2013 ஞாயிற்றுக்கிழமை (6ம் திருவிழா) முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "உதித்தனன் உலகம் உய்ய"

வழங்குபவர் :- பேராசிரியர் மா. வேதநாதன் அவர்கள்

(யாழ். பல்கலைக்கழகம்)

**12.08.2013 திங்கட்கிழமை (7ம் திருவிழா) முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "ஆறுமுகமான பொருள்"

வழங்குபவர் :- திரு ஐ. சண்முகலிங்கம் ஆசிரியர் அவர்கள்

(இளை. ஆசிரியர்)

**உயர்திரு முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின் 28ஆம் ஆண்டு குருபூசை. சுவாமி அவர்கள் தினசரி பாராயணம் செய்யும் "அருணாசல அட்ஷரணமாலை" இறுவெட்டு வெளியீடு இடம்பெறும்.**

**13.08.2013 செவ்வாய்க்கிழமை (8ம் திருவிழா) முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "நடமாடும் கோயில்"

வழங்குபவர் :- சைவப்புலவர் திரு க. நித்தியதசீதரன் அவர்கள்

(ஆசிரியர்)

**14.08.2013 புதன்கிழமை (9ம் திருவிழா) முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "தாளைப் பணியும் தவம்"

வழங்குபவர் :- திரு ச. லலீசன் அவர்கள்

(விரிவுரையாளர், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)

**15.08.2013 வியாழக்கிழமை (10ம் திருவிழா) முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "மறைய நின்றுளான்"

வழங்குபவர் :- சைவப்புலவர் சி. நவரத்தினம் அவர்கள் (பூங்காவனம்)

(ஆசிரிய ஆலோசகர்)

**16.08.2013 வெள்ளிக்கிழமை (11ம் திருவிழா) முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்"

வழங்குபவர் :- திரு ஆ. சிவநாதன் (அதிபர்) அவர்கள்

**17.08.2013 சனிக்கிழமை (12ம் திருவிழா) முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "முருக வழிபாடு எதற்கு"

வழங்குபவர் :- சைவப்புலவர் திரு செ. கந்தசத்தியதாசன் அவர்கள்

(ஆசிரிய ஆலோசகர்)

**18.08.2013 ஞாயிற்றுக்கிழமை (13ம் திருவிழா) முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "ஞானப்பழம்"

வழங்குபவர் :- திரு க. கைலைநாதன் அவர்கள்

(ஆசிரியர்)

**19.08.2013 திங்கட்கிழமை (14ம் திருவிழா) முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "சைவப் பண்பாடு" (பப்பரம்)

வழங்குபவர் :- சைவப்புலவர் திரு காரை M.P. அருளானந்தன் அவர்கள்

(ஆசிரியர் ஸ்ரான்லிக் கல்லூரி)

**20.08.2013 செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழா**

**21.08.2013 புதன்கிழமை தீர்த்தத்திருவிழா**

நாவலர் பக்கம்: (தொடர்ச்சி...

# சைவ சமய வினா விடை

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –

157. திரிபுண்டரமாவது யாது?

முக்குறித் தொகுதி.

158. திரிபுண்டரம் எப்படித் தரித்தல் வேண்டும்?

வளையாமலும், இடையறாமலும், ஒன்றை ஒன்று தீண்டாமலும், மிக அகலாமலும், இடைவெளி ஒவ்வோரங்குல அளவினதாகத் தரித்தல் வேண்டும்.

159. திரிபுண்டரம் தரிக்கத் தக்க தானங்கள் யாவை?

சிரம், நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாள்கள் இரண்டு, புயங்கள் இரண்டு, முழங்கைகள் இரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு, விலாப்புறம் இரண்டு, முதுகு, கழுத்து என்று பதினாறுமாம்.

இவைகளுள், விலாப்புறம் இரண்டையும் நீக்கிக் காதுகள் இரண்டையுங் கொள்வதும் உண்டு. முழங்கைகளையும் மணிக்கட்டுக்களையும் நீக்கிப் பன்னிரண்டு தானம் கொள்வதும் உண்டு.

160. திரிபுண்டரந் தரிக்குமிடத்து இன்ன இன்ன தானங்களில் இவ்வளவு இவ்வளவு நீளந் தரித்தல் வேண்டும் என்னும் நியமம் உண்டோ?

ஆம்; நெற்றியில் இரண்டு கடைப்புருவ எல்லை நீளமும், மார்பிலும் புயங்களிலும் ஆறாறங்குல நீளமும், மற்றைத் தானங்களில் ஒவ்வோரங்குல நீளமும் பொருந்தத் தரித்தல் வேண்டும். இவ்வெல்லையிற் கூடினும் குறையினும் குற்றமாம்.

161. எல்லோரும் எப்பொழுதும் விபூதியைச் சலத்திற் குழைத்துத் தரிக்கலாமா?

தீக்ஷையுடையவர் சந்தியாகால மூன்றினுஞ் சலத்திற் குழைத்துத் தரிக்கலாம்; மற்றைக் காலங்களிற் சலத்திற் குழையாமலே தரித்தல் வேண்டும். தீக்ஷை இல்லாதவர் மத்தியானத்துக்குப் பின் சலத்திற் குழையாமலே தரித்தல் வேண்டும்.

162. விபூதி தாரணம் எதற்கு அறிகுறி?

ஞானாக்கினியினாலே தகிக்கப்பட்ட பசுமல நீக்கத்தில் விளங்கும் சிவத்துவப் பேற்றிற்கு அறிகுறி.

## உருத்திராக்ஷவியல்

163. உருத்திராக்ஷமாவது யாது?

தேவர்கள் திரிபுரத்தசுரர்களாலே தங்களுக்கு நிகழ்ந்த துன்பத்தை விண்ணப்பஞ் செய்து கொண்டபொழுது திருக்கைலாசபதியுடைய மூன்று திருக்கண்களினின்றும் பொழிந்த நீரில் தோன்றிய மணியாம்.

164. உருத்திராக்ஷம் தரிப்பதற்கு யோக்கியவர் யார்?

மதுபானமும், மாமிச போசனமும் இல்லாதவராய், ஆசாரமுடையவராய் உள்ளவர்.

165. உருத்திராக்ஷம் தரித்துக்கொண்டு மதுபானம் மாமிச போசனம் முதலியவை செய்தவர் யாது பெறுவர்?

தப்பாது நரகத்தில் வீழ்ந்து, துன்பத்தை அனுபவிப்பர்.

166. எக்காலங்களில் உருத்திராக்ஷம் அவசியமாகத் தரித்துக் கொள்ளல் வேண்டும்?

சந்தியாவந்தனம், சிவமந்திரசெபம், சிவபூசை, சிவத்தியானம், சிவாலயதரிசனம், சிவபுராணம் படித்தல், சிவபுராணம் கேட்டல், சிராத்தம் முதலியவை செய்யுங் காலங்களில் அவசியமாகத் தரித்துக் கொள்ளல் வேண்டும். தரித்துக் கொள்ளாது இவை செய்தவருக்குப் பலன் அற்பம்.

167. ஸ்நான காலத்தில் உருத்திராக்ஷ தாரணங் கூடாதா?

கூடும்; ஸ்நானஞ் செய்யும்பொழுது உருத்திராக்ஷ மணியிற் பட்டு வடியுஞ் சலம் கங்காசலத்துக்கு சமமாகும்.

168. உருத்திராக்ஷத்தில் எத்தனை முகமணி முதல் எத்தனை முகமணி வரையும் உண்டு?

ஒருமுக மணி முதல் பதினாறுமுக மணி வரையும் உண்டு.

169. உருத்திராக்ஷ மணியை எப்படிக் கோத்துத் தரித்தல் வேண்டும்?

பொன்னிலாயினும், வெள்ளியிலாயினும், தாமிரத்தாலாயினும், முத்தாயினும், பவளமாயினும், பளிங்காயினும் இடையிடையே இட்டு, முகத்தோடு முகமும், அடியோடு அடியும் பொருந்தக் கோத்துத் தரித்தல் வேண்டும்.

170. உருத்திராக்ஷம் தரிக்கத் தக்க தானங்கள் யாவை?

குடுமி, தலை, காதுகள், கழுத்து, மார்பு, புயங்கள், கைகள், பூணூல் என்பவைகளாம்.

171. இன்ன இன்ன தானங்களில் இத்தனை இத்தனை மணி தரித்தல் வேண்டும் என்னும் நியமம் உண்டோ?

ஆம்; குடுமியிலும் பூணூலிலும் ஒவ்வொரு மணியும், தலையிலே இருபத்திரண்டு மணியும், காதுகளிலே ஒவ்வொரு மணி அல்லது ஆறாறு மணியும், கழுத்திலே முப்பத்திரண்டு மணியும், புயங்களிலே தனித்தனி பதினாறு மணியும், கைகளிலே தனித்தனி பன்னிரண்டு மணியும், மார்பிலே நூற்றெட்டு மணியும் தரித்தல் வேண்டும். குடுமியும், பூணூலும் ஒழிந்த மற்றைத் தானங்களிலே அவ்வத்தானங் கொண்ட அளவு மணி தரித்தலும் ஆகும்.

172. இந்தத் தானங்கள் எல்லாவற்றிலும் எப்போதும் உருத்திராக்ஷம் தரித்துக் கொள்ளலாமா?

குடுமியிலும், காதுகளிலும், பூணூலிலும் எப்போதும் தரித்துக் கொள்ளலாம்; மற்றைத் தானங்களிலோவெனின், சயனத்திலும் மலசல மோசனத்திலும், நோயிலும், சனனா சௌச மரணாசௌசங்களிலும் தரித்துக் கொள்ளலாகாது.

173. உருத்திராக்ஷ தாரணம் எதற்கு அறிகுறி?

சிவபெருமானுடைய திருக்கண்ணில் தோன்றும் திருவருட்பேற்றிற்கு அறிகுறி.

(தொடரும்...

# ஈசா வாஸ்ய உபநிஷதம் (தொடர்ச்சி...

சமஸ்கிருதத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்துப் பாடலாக்கம் செய்தவர்:- திரு பூ சோதிநாதன்.

## மந்திரம் 12

கடவுளை அருவம் ஆகக்
கருதியே தொழும்அம் மாந்தர்
இடருறும் கரிய தான
இருள்தனில் மூழ்கு கின்றார்
கடவுளை உருவம் ஆகக்
கருதியே தொழும் அம் மாந்தர்
விட அதைக் கொடிய தான
வீங்கிருள் உழல்வார் போலாம்

## மந்திரம் 13

உருவமாய் வழிபட் டாலோ
உறும்ஒரு பலனும் வேறாம்
அருவமாய் வழிபட் டாலோ
அடைகிற பலனும் வேறாம்
திருநிறை மகான்கள் அத்தைத்
திறம்பட எமக்குத் தானே
அருமையாய் எடுத்துக் கூறி
அளித்தனர் விளக்கம் தன்னை

## மந்திரம் 14

அருஉரு என்று சொல்லும்
அவையிரு தொழுகை தம்மை
ஒருப்பட இணைத்துச் செய்தால்
உருவழி பாட்டால் அந்தப்
பெருமர ணத்தைத் தாண்டிப்
பின்அரு வழிபாட் டாலே
பெரும்பெறல் இறவாத் தன்மைப்
பேற்றினை அடைய லாமே

### மந்திரம் 15

உண்மையின் முகத்தைச் சொர்ண
ஒளித்திரை மறைக்க லாச்சே
எண்ணரும் சூரிய தேவா
என்றுமே சத்யம் காக்கும்
வண்ணமாய் நிஷ்டை உள்ள
மனிதனாம் எனக்கு நீயே
உண்மையின் மறைப்பை நீக்கி
உதவுவாய் அதனைக் காண.

### மந்திரம் 16

பிரஜா பதியின் புதல்வனே
பிரிய சூர்ய தேவனே
புரப்பாய் உயிர்கள் பேணியே
புவிமேல் தனித்த பயணியே
அரக்கி வைஉன் க்ரணங்களை
அவற்றைச் சுருக்கிக் கொள்ளுவாய்
பரக்கக் காட்சி தருவையோ
பார்த்தேன் உன்னில் என்னையே

### மந்திரம் 17

எங்கும் நிறைந்தே அழிவிலதாய்
இருக்கும் பிராணன் உடன்கலந்தே
இங்கு சாம்பல் ஆம்உடலை
எளிதாய் விடும்இப் பிராணனுமே
பங்கம் இன்றிச் செய்தவற்றைப்
பதிப்பாய் மனதில் உளவாறே
பங்கம் இன்றிச் செய்தவற்றைப்
பதிப்பாய் மனதில் ஓம்ஓம்ஓம்

### மந்திரம் 18

அக்னி தேவா ஒளிப்பொருளே
அனைத்துச் செயலும் அறிபவனே
தக்க வினையை அனுபவிக்கத்
தகுந்த ஒளியின் பாதையில்நீ
மிக்க சுகமாய் அழைத்துச்செல்
விலக்கும் எமது தவறுகளை
நெக்கி உருகி மேன்மேலும்
நின்னை நினைந்து வணங்குகின்றோம்.

### சாந்தி மந்திரம்

ஓம்

(முற்றும்)

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# திருஏடகம்

–வல்வையூர் அப்பாண்ணா–

அனல் வாதத்தில் தோற்றுப்போன சமணர்கள் சீர்காழித் தலைவரைப் புனல் வாதத்திற்கு அழைத்தனர். மதுரைப் பாண்டியனின் ஏற்பாட்டில் சம்பந்தரும் அதனை ஏற்றுக்கொள்ள, சமணர்களால் வைகை ஆற்றில் விடப்பட்ட ஏடானது ஆற்றின் வேகத்திற்கு இசைவாக அள்ளுண்டு வேகமாகச் சென்று மறைந்தது. சீர்காழி வேந்தர், ஏட்டுக் கட்டினுள் நூல் சாத்திப் பார்த்து வெளியே எடுத்த "வாழ்க அந்தணர்" எனத் தொடங்கும் பதிகம் எழுதிய ஏட்டினை வைகை ஆற்றில் விட, அவ்வேடானது ஆற்று நீரின் ஓட்டத்திற்கு எதிர் திசையில் நீரைக் கிழித்துக் கொண்டு முன்னே சென்றது.



ஆற்றின்மேற் செல்லும் ஏடு தொடர்ந்தெடுப் பதற்கு வேண்டிக்
காற்றென விசையிற் செல்லுங் கடும்பரி ஏறிக்கொண்டு
கோற்றொழில் திருத்த வல்ல குலச்சிறையார்பின் சென்றார்
ஏற்றுயர் கொடியி னாரைப் பாடினார் ஏடு தாங்க.

பெரியபுராணம்: 2747

ஆற்றின் நடுவே நீரை எதிர்த்து மேல்நோக்கிச் சென்ற ஏட்டினை எடுப்பதற்காக காற்றினைப் போல விரைவாகச் செல்லும் தம் குதிரை மீதேறிச் சென்ற பாண்டியனின் பிரதம அமைச்சரான குலச்சிறையார் வைகைக் கரைமீது செல்ல, அந்த ஏடு மேற்கொண்டும் செல்லாது ஓரிடத்தில் தங்கி நிற்குமாறு திருஞானசம்பந்தர் "வன்னியும் அத்தமும்" என்று தொடங்கும் திருப்பதிகம் பாடியருளவும் ஏடானது ஏடகத்தில் கரைதட்டி ஒதுங்கி நின்றது.

ஏடகம் பிள்ளையார்தம் வன்னி என்றெடுத்துப் பாடக்
கூடிய நீரில் ஏடு குலச்சிறை யாருங் கூடிக்
காடிட மாக ஆடுங் கண்ணுதல் கோயில் மாடு
நீடுநீர் நடுவுட் புக்குநின்றஏ டெடுத்துக் கொண்டார்.

பெரியபுராணம்: 2748

ஞானசம்பந்தர் அவ்வேடகத் திருப்பதிகத்தை "வன்னியும் அத்தமும்" எனத் தொடங்கிப் பாடியருளவும், ஆற்று நீருள் கூடி வந்த ஏட்டினிடம் குலச்சிறையாரும் போய்ப் பொருந்திப் பெருஞ் சுடுகாடே இடமாய் ஆடுகின்ற நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானின் கோயிலினுள் புகுந்து, மேலே செல்லாமல் நின்ற ஏட்டை எடுத்துக்கொண்டார்.

ஏடகம் பாண்டி நாட்டுத் திருத்தலம். ஏடகம்= ஏடு+அகம். ஏடு ஒதுங்கிய இடம் ஏடகம் என்றாயது. வைகை ஆற்றுக்குத் தெற்காக, மதுரை மாநகருக்குக் கிழக்காக உள்ள திருஏடகம் மதுரையிலிருந்து சோழவந்தான் சாலையில் 20கி.மீ தூரத்தில் உள்ளது. மேற்குறித்த சோழவந்தான் சாலையானது சில இடங்களில் வைகையை நெருங்கியும், பல இடங்களில் வைகையை விலகியும் சென்றாலும், ஏடகத்தினை அண்மிக்கும்போது கோவிலை மிக நெருங்கியே செல்கிறது. "செல்கிறது" என்ற சொற்பிரயோகம் தவறானது. "சென்றிருக்கிறது" என்பதே சரியானதாகும். ஒரு காலத்தில் அகன்று கரைபுரண்டு வைகை ஓடியதற்கான சான்றுகள் மட்டுமே இப்போது தெரிகிறது. ஒரு சொட்டு நீரின்றி வரண்ட வைகையில் குவியல் குவியலாக சேர்ந்துவிட்ட வண்டல் மண்ணினை வரிசை வரிசையாக டிராக்ரர்களில் விற்பனைக்காக அள்ளிச் செல்லும் காட்சியே இன்றைய வைகையின் அடையாளமாகும்.

ஒரு முகப்பு வாசல் வளைவின் இரு மருங்கும் உள்ள விநாயகரையும் முருகனையும் வணங்கி அனுமதி பெற்று உள்ளே போனால் கிழக்குப் பார்த்தபடியான ஐந்து நிலைக் கோபுரம். உள்ளே கோவிலும் பிரகாரமும் சிறியன. மேற்குப் பார்த்துள்ள சூரியனை நமஸ்கரித்து எமது பிரகார வலத்தினை ஆரம்பிக்கிறோம். உட்பிரகாரத்தின் தென்புறம் முழுவதும் அறுபத்துமூவர் வரிசையாக உள்ளனர். தென்மேற்கு மூலையில் ஒரே சந்நிதியில் மெய்கண்ட தேவர், உமாபதிசிவம், அருள்நந்தி, மறைஞானசம்பந்தர் என சந்தான குரவர் நால்வரும் அமர்ந்துள்ளனர். அடுத்து பஞ்சலிங்கங்கள், வள்ளி - தெய்வானை சமேத சண்முகர் சந்நிதிகளும் உண்டு.

உட்பிரகார வட சுற்றின் ஆரம்பத்தில் அமர்ந்திருக்கும் வராஹி அம்மன் உருவத்தில் பெரியவளாக, நிறைவான அலங்காரத்துடன் உள்ளார். அன்று வராஹி அம்பாளுக்கு நடைபெற்ற விசேட பூசையிலும் பல பெண்கள் கலந்துகொண்டமையும் காண முடிந்தது. அம்பாளைத் தொடர்ந்து சப்தமாதர், இரட்டை விநாயகர், சுப்பிரமணியர், துர்க்கை, மகாலெட்சுமி மூர்த்தங்களும் உள்ளன. சுப்பிரமணியர், துர்க்கை, மகாலெட்சுமி தத்தமது வழமையான இடங்களில் இல்லாமல் மாறுபட்ட இடங்களில் அமர்ந்திருப்பது வித்தியாசமாக இருந்தது. உட்பிரகார வடகிழக்கு மூலையில் உற்சவ மூர்த்தங்கள் அனைத்தும் ஒரே வரிசையில் தனிச் சந்நிதியில் வைக்கப்பட்டு கடுமையான பாதுகாப்புக்கு உட்படுத்தப் பட்டுள்ளது. அடுத்து காலபைரவர், வல்லபகணபதி, பூரணாம்பிகை, அய்யனார், புஸ்பகலாம்பிகை, சாஸ்தா, சந்திரன் ஆகிய மூர்த்தங்கள் வரிசையாக உள்ளன. இந்த மூலையிலேயே நவக்கிரகங்களுக்கான தனிச் சந்நிதியும் அமைந்துள்ளது.

பிரகார வலத்தினை நிறைவு செய்து, தம்பம் - நந்தி- பலிபீடத்தினைச் சுற்றி, மூலவர் சந்நிதானத்தின் முன் மண்டபத்தினுள் நுழைகிறோம். முன் மண்டபமும்- தூண்களும்- விதானமும் ஓரளவான சிற்ப வேலைப்பாடுகள் கொண்டு காணப்பட்டன. கருவறையின் உள்ளே மூலவர் திருஏடகநாதசுவாமி லிங்க வடிவில், அளவான அலங்காரத்துடன் காணப்படுகிறார். சந்நிதியில் கூட்டம் குறைவாக இருந்தமையால் ஏடகநாதரைக் கண்குளிரக்

கண்டு மனம் நிறையத் தரிசித்து வர முடிந்தது. கருவறைச் சுவரில் கோஷ்ட மூர்த்தங்களாக தெற்கில் பாலகணபதியும், தெட்சணாமூர்த்தியும், மேற்கில் கருவறையின் சரி பின்புறமாக லிங்கோற்பவரும், வடக்கில் துர்க்கையும் மாடங்களில் வீற்றிருக்கிறார்கள். சண்டிகேஸ்வரர் துர்க்கையின் முன்பாக தமது வழமையான நிலையத்தில் உள்ளார். அருகிலேயே ஸ்தல விருட்சமான வில்வமரம் காணப்படுகிறது.

அருள்மிகு ஏலவார்குழலி அம்பாள் சந்நிதி கிழக்குப் பார்த்த தனிக்கோவிலாக ஒரு முன் மண்டபத்துடன் காணப்படுகிறது. அம்பிகை நான்கு திருக்கரங்களுடனும், நிறைந்த முகப் பொலிவுடனும் நின்ற திருக்கோலத்தில் அருள்பாலிக்கிறார். அம்பாளின் கருவறை கோஷ்டத்தில் தெற்கே இச்சா சக்தியும், மேற்கே கிரியா சக்தியும் வடக்கே ஞான சக்தியும் உள்ளனர். வழமையான இடத்தில் சண்டிகேஸ்வரி சந்நிதியும் உண்டு. அம்பாள் கருவறையின் முன் உள்ள மண்டபத்துத் தூண்களில் பல்வேறு சிற்பங்கள் காணப்படினும், ஒரு தூணில், கைத்தாளமின்றிக் காணப்படும் திருஞானசம்பந்தரின் சிலாரூபம் திரும்பிப் பார்க்க வைக்கிறது. கந்தசஷ்டி, நவராத்திரி, ஆடிப்பூரம், சிவராத்திரி, பங்குனி உத்தரம் போன்றவை திருஏடகத்தின் விசேட நாட்களாக இருப்பினும், ஆவணி மாதத்து முதல் நாளில் கொண்டாடப்படும் ஏடு எதிரேறிய விழாவே மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

**ஒரு குறிப்பு:**

சீகாழித் தலைவர் சம்பந்தரால் மதுரையின் வைகைக் கரையில் விடப்பட்ட ஏடானது நீரைக் கிழித்து எதிரேறிய இடம் **"திருஏடகம்"**. ஆனாலும், இந்த வரலாற்றுப் பதிவு கோவிலின் எப்பகுதியிலும் காணப்படாமை ஒரு குறையாகவே தென்பட்டது.

"ஏலமார் தருகுழல் ஏழையோ டெழில் பெறும்
கோலமார் தருவிடைக் குழகனார் உறைவிடம்
சாலமா தவிகளுஞ் சந்தனஞ் சண்பகம்
சீலமார் ஏடகஞ் சேர் தலாஞ் செல்வமே" -சம்பந்தர்-




# என்றும் நினைவில்...



சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொள்ளும் சமய, சமூக செயற்பாடுகளுக்கு ஊன்று கோலாக செயலாற்றி வருவது சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை என்பது யாவரும் அறிந்ததே.

பேரவையின் செயற்பாட்டிற்கு ஆரம்பகாலம் தொட்டு சிறப்பாக செயலாற்றி நிர்வாக சபை உறுப்பினராக இருந்து கடந்த 10 வருட காலம் உபதலைவராக செயற்பட்டு பேரவையின் வளர்ச்சியோடு பேரவை யினால் வெளியிடப்பட்டு வரும் ஞானச்சுடர் வெளியீட்டிற்கும் காத்திரமான பங்களிப்பை வழங்கி வந்த கதிரிப்பிள்ளை சிவக் கொழுந்து J.P அவர்கள் 30.07.2013 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார். அவர்களது மறைவானது பேரவைக்கு ஈடிலாத இழப்பாகவே கருத வேண்டி உள்ளது.

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக் கும் அவர்தம் குடும்பத்தினருக்கு சந்நிதி யான் ஆச்சிரமத்தினதும், பேரவையினதும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா ஸ்ரீ செல்வச் சந்நிதி வேலவனது பாதார விந்தங்களைச் சேருமாறு பிரார்த்திக்கிறோம்.

சந்நிதியான் ஆச்சிரமம்

பேரவை.

PUBLIC LIBRARY
JAFFNA



# ஆவணிமாத வாராந்த நிகழ்வுகள்

02.08.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

வில்லிசை :- "பார்வதி திருக்கல்யாணம்"

வழங்குபவர் :- வில்லிசைக் கலைஞர் க. சத்தியதாஸ் குழுவினர்

---

09.08.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "முருகன் பெருமை"

வழங்குபவர் :- திரு J. சந்திரப்பிரகாஷ் அவர்கள்

[ஆசிரியர், மத்திய கல்லூரி]

---

16.08.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்"

வழங்குபவர் :- திரு ஆ. சிவநாதன் அவர்கள்

[அதிபர்]

---

23.08.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

30.08.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்

# ஞானச்சுடர் ஆவணிமாத வெளியீடு

## 188ஆவது மலர்

வெளியீட்டுரை :- திரு க. ஸ்ரீசந்திரன் அவர்கள்

[ஆசிரியர், அ.மி. கல்லூரி]

மதிப்பீட்டுரை :- திரு க. நடேசன் (தெணியான்) அவர்கள்

[இளை. அதிபர்]

பதிவு இல. QD/25/NEWS/2013

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

